# அரசியல் விஞ்ஞானத்திற்கோர் அறிமுகம்

## வினா விடை களஞ்சியம்

## பாகம் - 1

A.C.M. Faleel (M.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் விஞ்ஞானத்திற்கோர் அறிமுகம்

## வினா விடைக் களஞ்சியம்

## பாகம் - 1

G.C.E. (A/L) மாணவர்களுக்கும், பேராதனை, தென்கிழக்கு, கிழக்கு பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரிப் பட்டப்படிப்பு GAQ மாணவர்களுக்கும் உகந்தது.

**A.C.M. Faleeel**

BA (SL), MA (Pera) - Political Science
Dip in Ed, Dip in Human Rihgts (per)
Dip .Sp.Ed

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்


| | | |
|---|---|---|
| நூல் | : | அரசியல் விஞ்ஞானத்திற்கோர் அறிமுகம்<br>*In Introduction to Political Science.* |
| நூலாசிரியர் | : | **A. C. M. Faleeel** BA (SL), MA<br>**விரிவுரையாளர், கல்முனை வெளிவாரிப் பட்டப்படிப்பு கல்வி நிலையம், சாய்ந்தமருது.** |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| முதற் பதிப்பு | : | 2008 |
| மொழி | : | தமிழ் |
| பிரதிகள் | : | 2000 |
| பக்கங்கள் | : | 146 |
| கனணி வடிவமைப்பு | : | விபுலானந்தா தகவல் தொழில்நுட்ப நிலையம், காரைதீவு |
| கனணி பக்க ஒழுங்கமைப்பு | : | Fowzer A. Samad<br>FR Dot Com, Sainthamaruthu - 11. |
| அச்சுப்பதிப்பு | : | NAWZEER BROS<br>NO: 24, Andival Street,<br>Colombo - 13. |
| வெளியீடு | : | கல்முனை வெளிவாரி பட்டப்படிப்பு கல்வி நிலையம் |
| விலை | : | **280/-** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அண்மைக் காலங்களில் அரசியல் விஞ்ஞானம் என்ற பாடநெறியும் அரசியல் தொடர்பான அறிவு ஞானங்களும் மாணவர்களுக்கு மாத்திரமல்லாது ஒவ்வொரு பொது மகனுக்கும் தேவையான ஒன்றாக மாறியுள்ள நிலையில் ஏ.சி.எம் பளீல் ஆசிரியர் அவர்களால் எழுதப்பட்ட அரசியல் விஞ்ஞானத்திற்கோர் அறிமுகம் என்ற இந் நூல் அனைவருக்கும் பயனளிக்கும் ஒரு உயரிய முயற்சியாகும். இதில் அரசியல் கோட்பாடுகள், அரசியல், சமூகமயமாதல், அரசியல் கலாச்சாரம், அரசியல் அறிவு பற்றிய ஆய்வு முறைகள், அரசு, அரசாங்கம், தேசிய அரசு ஆகியவற்றின் வகைகள், தன்மைகள் இவற்றுடன் தொடர்புடைய சட்டம், நிர்வாகம், நீதி, ஆகிய துறைகள் பற்றியும் விரிவானதும், தெளிவானதுமான போதிய விளக்கங்கள் ஆசிரியரால் கொடுக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாக உள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைமாணி, மற்றும் அரசறிவியல் துறை முதுமானிப் பட்டதாரியான இவர், அரசியல் மற்றும் அளவையியல் துறையில் சுமார் 10 இற்கு மேற்பட்ட நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார். 1994 இல் இருந்து கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையில் உயர்தர வகுப்பு கற்பிக்கும் ஆசிரியரான இவருக்கு மாணவர்களின் தேவைகள் பற்றிய ஞானம் நிறைய உண்டு. மேலும் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் அரசறிவியலை சுமார் 15 வருடங்களாக கற்பித்தும் வருகின்றார். இந்த வகையில் ஏ.சி.எம். பளீல் B.A., M.A (அரசியல்) அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் உயர்தர வகுப்பு கலைத்துறை மாணவர்கள், ஆசிரியர்கள், ஆர்வமுள்ள அனைவருக்கும் பயனளிக்கும் என நம்புவதுடன் இது போன்ற கல்விப்பணி மேலும் தொடர வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

**எம்.ஐ.எம். பரீட்** B.A.(Gen), B.A. (Special in Econ), Dip in HRD
விரிவுரையாளர் - கல்முனை வெளிவாரி பட்டப்படிப்பு கல்வி நிலையம்,
சாய்ந்தமருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

அரசியல் விஞ்ஞானத்திற்கோர் அறிமுகம் பாகம் - 01 என்ற வினா விடைக் களஞ்சியத்தை எழுதி வெளியீடுவதில் மனமகிழ்ச்சியடைவதுடன் இறைவனுக்கும் நன்றி கூற கடமைப்படுகிறேன்.

அரசறிவியல் என்பது அரசாங்க செயற்பாடுகளுடன் தொடர்புபடுகின்ற மனித நடத்தைபற்றியதாகும். சமூகத்தையும், சமூகத்தில் வாழும் மனிதர்களின் நடத்தை, மனப்பான்மை, அறிவு, பொருளாதாரப் பிரச்சினைகள், என்பனவற்றை அரசாங்க நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்துவதற்கும், சர்வதேச நிலவரங்களை சரியாகப் புரிந்து கொள்ளுவதற்கும் அரசறிவியல் பற்றிய அறிவு அவசியமாகும்.

இன்று அரசறிவியல் கற்கின்ற G.C.E.(A/L), G.A.Q மாணவர்கள், பரீட்சைகளின் போது வினாக்களை சரியாக தெரிவு செய்தாலும் அதற்கான பதிலை ஒழுங்கமைப்பதில் சிரமத்தைக் கண்டறிந்த பின்னரே இந்த நூலை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. இவ்வாறான மாணவர்களின் சிரமத்தை இந்த நூல் பெருமளவிற்கு நிவர்த்தி செய்யும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந் நூலில் அரசறிவியல், அரசு, அரசாங்கம், சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்ற தலைப்புக்களின் கீழ் வினாக்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான சரியான நுட்பமான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது ஒரு சிறப்பம்சமாகும். எனவே G.C.E. (A/L) மாணவர்களுக்கும், பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் அரசறிவியலை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும், அரசறிவியல் ஆர்வம் கொண்ட அனைவருக்கும் இந்த நூல் பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந் நூலுக்கு அணிந்துரை வழங்கிய நண்பரும், கல்முனை வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் விரிவுரையாளருமான M.I. முஹம்மட் பரீட் (B.A), (BA Sp .Econ) அவர்களுக்கும், நூலை வெளியிடுவதற்கு பல வகைகளிலும் உதவியளித்த எனது மாணவரான S. M. நிப்றாஸ் மற்றும் எனது மனைவியான அக்மல் ஜஹன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந் நூலை கனணியில் Typesetting செய்து தந்த காரைதீவு, விபுலானந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும், அழகுற பக்க ஒழுங்கமைப்பு செய்து தந்த சாய்ந்தமருது, FR Dot Com உரிமையாளர் பௌஸர் ஏ. சமட் அவர்களுக்கும் இந்த நூலை அச்சிட்டுத்தந்த Nawzeer Bros, Colombo நிறுவனத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

*ஏ.சி.எம். பளீல் (எம்.ஏ)*
*ஆசிரியர்*
*கமு / ஸாஹிறா தேசிய பாடசாலை*
*கல்முனை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


அணிந்துரை

என்னுரை

01. அரசறிவியல் :

01. அரசறிவியல் என்றால் என்ன

02. அரசறிவியலின் இயல்புகள்

03. அரசறிவியலின் நோக்கம்

04. அரசறிவியலைக் கற்பதன் பயன்பாடு

05. மனிதன் எவ்வாறு அரசியலைப் பயில்கின்றான்

06. அரசறிவியவின் பாடப்பரப்பு

07. அரசு பற்றிய ஆய்வு அரசியல்

08. அதிகாரம் பற்றிய ஆய்வு அரசியல்

09. சர்வதேச அரசியல் பற்றிய ஆய்வு அரசியல்

10. மோதல் முகாமைத்துவமும் மோதல் தீர்த்தலும் பற்றிய ஆய்வு அரசியல்

11. பொதுத்துறை நிர்வாகம் பற்றிய கல்வி அரசறிவியல்

12. அரசியல் விஞ்ஞானமும் ஏனைய துறைகளும்

அ. அரசியல் விஞ்ஞானமும் வரலாறும்

ஆ. அரசியல் விஞ்ஞானமும் பொருளாதாரமும்

இ. அரசியல் விஞ்ஞானமும் சமூகவியலும்

ஈ. அரசியல் விஞ்ஞானமும் உளவியலும்

உ. அரசியல் விஞ்ஞானமும் புவியியலும்

ஊ. அரசியல் விஞ்ஞானமும் ஒழுக்கவியலும்

13. அரசறிவியலைக் கற்பதற்கான அணுகுமுறைகள்

அ. மரபு ரீதியான அணுகுமுறை

ஆ. நடத்தைவாத அணுகுமுறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. அரசு :**

01. அரசு என்றால் என்ன
02. அரசின் பணிகள்
03. அரசின் நோக்கங்கள்
04. குடிமகனுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பு
05. அரசும் சமூகமும்
06. அரசும், அரசாங்கமும்
07. அரசும், சமூக ஸ்தாபனமும்
08. அரசும், தேசமும்
09. அரசின் வளர்ச்சிக் கட்டங்கள்
10. அரசு என்பது இறைவனின் படைப்பு
11. மக்களினால் செய்யப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் விளைவே அரசு
12. அரசு ஒரு சமூகத் தாபனம்
13. அரசு வர்க்கப்போராட்டத்தின் விளைவு
14. அரசு சர்வ வல்லமை பொருந்தியது

**03. தாராண்மை வாதம் :**

01. தாராண்மை வாதம் என்றால் என்ன?
02. தாராண்மை வாதத்தின் வளர்ச்சியும் அபிவிருத்தியும்

**04. அரசாங்கம் :**

01. அரசாங்கம் என்றால் என்ன.
02. ஏன் அரசாங்கம் அவசியமானது.
03. அரசாங்கத்தின் பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. அரசாங்கத்தை வகைப்படுத்தல்

05. ஜனநாயக அரசாங்கத்தின் பண்புகள்

**05. சட்டத்துறை :**

01. சட்டத்துறை என்றால் என்ன.

02. சட்டத்துறையின் பணிகள்

03. சட்டத்துறையின் அமைப்பு

04. சட்டத்துறையின் அமைப்பு

05. இரண்டாம் மன்றத்திற்கு ஆதரவான, எதிரான கருத்துக்கள்

**06. நிர்வாகத்துறை :**

01. நிர்வாகத்துறை என்றால் என்ன

02. நிர்வாகத்துறையின் பணிகள்

**07. நீதித்துறை :**

01. நீதித்துறை என்றால் என்ன

02. நீதித்துறையின் பணிகள்

03. நீதித்துறை சுதந்திரம்

04. நீதித்துறை சுதந்திரத்தின் அவசியம்.

05. நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான காரணிகள்

06. நீதிப்புணராய்வு அதிகாரம்

**08. உசாத்துணை நூல்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசறிவியல்

## ❖ அரசறிவியல் எனறால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

அரசியல்(Politics) என்பது "பொலிஸ்"(Polis) எனும் சொல்லிலிருந்து பிறந்தது. பொலிஸ் என்ற சொல் கிரேக்கத்திலுள்ள நகர அரசுகளை (City State) குறிக்கும். கிரேக்கத்தில் (எதென்ஸ், ஸ்பாட்டா) ஒவ்வொரு நகரும் ஒரு அரசாக விளங்கியது.

அரசியலை ஒரு நவீன கற்கை நெறி என இனங்காண முடிந்தாலும் அதன் தோற்றம் கிரேக்க காலமளவுக்கு பழமையானது. அரசியலின் தோற்றத்திற்கு நகர அரசுகளே கருவறையாக விளங்கியது. கிரேக்கர்கள் மிக ஆரம்ப காலத்திலேயே அரசியலைப்பற்றி சிந்தித்து எழுதி வந்தனர். ஆதலால் அரசியலின் தோற்றம் கிரேக்க காலமாகும். அரசியலின் தந்தை என கருதப்பட்ட அரிஸ்டோட்டிலை பொறுத்தவரை ஒவ்வொரு மனிதனும் ஒரு அரசியல்வாதியாகும். ஆனால் சில மனிதர்கள் மற்றவர்களை விட அரசியலில் அதிகமான அளவு ஈடுபாடுடையவர்களாக இருக்கின்றனர். அரிஸ்டோட்டிலின் இவ் விளக்கம் அரசியலுக்கு விரிவான பரப்பை அளிக்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அரசியலுக்கு ஒரு பொதுவான வரைவிலக்கணம் கூறுவது கடினமான காரியமாகும். ஏனெனில் அரசியல், சமூக விஞ்ஞானத்துறைக்குள் உள்ளடக்கப்படுவதனாலும் சமூக விஞ்ஞானத்தின் முடிவுகள் அடிக்கடி மாற்றம் அடைவதாலும் அரசியலுக்கு ஒரு தெளிவான வரைவிலக்கணம் கூறமுடியாதுள்ளது. இருந்தாலும் ஆரம்ப காலங்களில் "அரசு பற்றிய ஆய்வே அரசியலாகும்" என்ற வரைவிலக்கணம் அரசியலுக்கு கொடுக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனிடம் இயற்கையிலேயே இணைந்து வாழ வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. இதுவே சமூகம் தோன்றுவதற்கான அடிப்படையாகும். மனிதன் ஒரு சமுதாய அரசியல் பிராணி எனப்படுகின்றான். சமூகததில் சச்சரவுகள், குழப்பங்கள் எழுந்தன. இவற்றை தீர்ப்பதற்காக அல்லது ஒழுங்கு செய்வதற்காக அரசு ஏற்படுத்தப்பட்டது. அரசின் தோற்றம் ஏற்பட்ட போது அரசியலும் தோன்றியது என வரலாறு கூறுகின்றது.

அரசியல் கிரேக்க காலத்திலிருந்து (சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில்) உரோம பாரசீக காலம் (சீசர், யூலியர் சீசர்), மத்திய காலம் (ஒகஸ்டின், அக்கியூனாஸ்) மற்றும் நவீன காலம், தற்காலம் வரை அரசியலை கற்ற, ஆய்வு செய்த சகலரும் அரசை மையமாகக் கொண்டே ஆய்வு செய்தனர். அரசு என்றாலென்ன? அரசு எவ்வாறு தோன்றியது? அரசின் இயல்பு யாது? அரசு எவ்வாறு செயற்பட வேண்டும்? என்ற விடயங்களை கற்பதிலேயே கவனம் செலுத்தப்பட்டது. தற்காலத்தின் ஆரம்ப பகுதி வரை "அரசு பற்றிய கற்கையே அரசியல்;" என்ற பழங்கருத்தே பொருள் கூறலாக இருந்தது.

பிற்காலங்களில் "அரசாங்கம் பற்றி கல்வியே அரசியலாகும்" என்று கூறப்பட்டது. அரசாங்கம் கற்புலனாகக்கூடியது. அரசினுடைய கொள்கையை அரசாங்கமே நடைமுறைப்படுத்துகின்றது.அரசாங்கம் என்பது ஒரு நாடு. சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என மூன்றாக வகுக்கப்பட்டு அதனூடாக சமூகத்தின் நலன்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், சேவை புரியவும் துணை புரிகின்ற கருவியே அரசாங்கம் எனலாம். இங்கு புலப்படுவது யாதெனில் அரசு வேறு, அரசாங்கம் வேறு ஆனால் அரசாங்கம் அரசினுடைய பிரதிநிதி என்பதை யாரும் மறுக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீப காலத்தில் "அதிகாரம் பற்றிய ஆய்வே அரசியலாகும்". என்ற வரைவிலக்கணம் முன்வைக்கப்பட்டது. இக் காலப்பகுதியில் தேசிய அரச முறைமையின் தோற்றத்தோடு தேசிய அதிகாரமே அரசின் இருப்பை நிர்ணயிக்கலாயிற்று. இந்த வகையில் அதிகாரம் என்பது மனித உறவுகளுடன் தொடர்புபட்ட ஒரு செயற்பாட்டு வடிவமாக அமைகின்றது. அதாவது போட்டி, இணக்கம், கீழ்ப்படிவு, கட்டுப்பாடு என்பனவற்றின் மூலமாக ஒருவரோ அல்லது ஒரு அமைப்போ ஏனையவர்களின் நடவடிக்கை மீது செல்வாக்குச் செலுத்தலாகும்.

அதிகாரம் என்ற விளக்கத்திற்கு ஆரம்ப கர்த்தாவாக திகழ்ந்தவர் மக்கியாவல்லி ஆவார். இவரே அரசறிவியலுக்கு முதன் முதலாக அதிகாரம் என்ற சொல்லை புகுத்தியவர். "அதிகாரம் என்பது ஒரு சாதனம் அல்ல.அது ஒரு வழிமுறையாகும். அதிகாரத்தைப் பெறுவதும் அதை தக்க வைத்து கொள்வதும் ஒரு அரசின் கடமையாகும். அதிகாரத்தைப் பெறுவதற்காக அரசன் எதையும் செய்யலாம், நடிக்கலாம்., உடை, நடை, பாவனைகளில் பாசாங்கு பண்ணலாம், ஏமாற்றலாம்., பொய் சொல்லாம், தருணம் வரும் போது கொலையும் செய்யலாம் என மக்கியாவல்லி கூறினார்.

அதிகாரத்தைப் பெற்ற அரசன் அந்த அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக சிங்கத்தைப் போல பலமுள்ளவனாகவும் நரியைப் போல் தந்திரமுள்ளவனாகவும் இருக்க வேண்டும் எனக் கூறினார்.

இவரைத் தொடந்து லாஸ் வெல், மக்ஸ் வெபர், C.E.மெரியம், பேட்டன் றஸல், மொகன்தோ, றொபின் போன்ற அறிஞர்களினாலும் அதிகாரம் பற்றிய ஆய்வு முன்வைக்கப்பட்டது. இது அரசியலுக்கேற்பட்ட ஒரு வளர்ச்சிக் கட்டமென நாம் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விட அரசறிவியல் என்பது "அரசு பற்றியதோ அதிகாரம் பற்றியதோ, அரசாங்கம் பற்றியதோ என்பதற்கப்பால் அரசாங்க நடவடிக்கையுடன் தொடர்புபடும் மனித நடத்தை பற்றிய ஆய்வே அரசியல்" எனக் கூறப்ப்.டது அரசாங்க நடவடிக்கையுடன் தொடர்புபடும் மனித நடத்தை என்பது அரசாங்கத்திற்கெதிரான போராட்டம் , அரசாங்கத்தை தெரிவு செய்வதற்காக வாக்களித்தல், அரசாங்கத்திற்கு கட்டுப்படல், அரசாங்கதிற்கு விசுவாசமளித்தல், விமர்சித்தல், மாணவர் போராட்டங்கள், அரசாங்கத்திற்கு சாதகமாக அல்லது எதிராக பொதுசன அபிப்பிராயத்தை தூண்டி விடுதல் போன்ற நடவடிக்கைகளே அரசாங்கத்துடன் தொடர்புபடும் மனித நடத்தைகளாகும். இந்த நடத்தை பற்றியும் அரசறிவியல் ஆய்வு செய்கின்றது.

இதற்கு மேலாக அண்மைக் காலத்தில் அரசறிவியல் என்பது அரசின் கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல், மோதல் முகாமைத்துவம் மற்றும் மோதல் தீர்த்தல் என்பனவற்றை கவனத்தில் எடுக்கும் பாடமென்றும் பொருள் கூறப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சகல விடயங்களும் இறுதியாக அரசோடு தொடர்புபடுகின்றன என்றும் எந்த ஒன்றும் அரசிலிருந்து விடுபட்டிருப்பதில்லை என்றும் அரசை மையமாகக் கொண்டு அவை பல்வேறு திசைகளில் பரவியுள்ள துணைப்பிரிவுகள் என்று கூறப்படுகின்றது.

இதன்படி காலமாற்றத்தோடு அரசியலின் உள்ளடக்கம் மாற்றமுற்றுள்ளது. இதனால் அது பற்றிய ஒரு பொதுவான வரைவிலக்கணத்தை முன்வைத்தல் கடினமானதாகவேதான் இருக்கின்றது. இதனால் அரசியல் என்பது அரசோடு ஆரம்பித்து அரசுடனேயே முடிவுறுகிறது என்று கார்ணர் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ அரசறிவியலின் இயல்புகளை தெளிவுபடுத்துக?

**01. அரசறிவியல் சமூக விஞ்ஞான பாடங்களில் ஒன்றாகும்.**

மனித நடத்தை பற்றி ஆராய்கின்ற துறைகளே சமூக விஞ்ஞானம் எனப்படும். அரசறிவியலும் மனிதனின் அரசியல் நடத்தை பற்றி ஆராயும் ஒன்றாக உள்ளமையாலும் சமூக விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படுகின்ற ஆய்வு முறைகளே (பேட்டி முறை , வினாக் கொத்து முறை, தனி நபர் ஆய்வு முறை)பயன்படுத்தப்படுகின்ற ஒன்றாக உள்ளமையாலும் அரசறிவியல் சமூக விஞ்ஞான பாடங்களில் ஒன்றாக கொள்ளப்படுகின்றது.

**02. மனிதனின் அரசியல் நடத்தை பற்றிய கற்கை நெறியாக அரசியல் விளங்குதல்.**

மனிதன் அரசோடும், அரசின் நிறுவனங்களோடும், அரசாங்க நிறுவனங்களோடும், அரசாங்க அதிகாரத்தோடும், அரசியல் பங்குபற்றலோடும் எவ்வாறு தொடர்புபடுகின்றான்? என்பனபற்றியெல்லாம் கற்கின்ற கற்கை நெறியாக அரசறிவியல் விளங்குகின்றது.

**03. அரசு பற்றிய கற்கைநெறியாக அரசியல் விளங்குதல்.**

அரசின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிலை பற்றியும், அவ் அரசு சார்ந்த அமைப்புக்கள், நிறுவனங்கள் பற்றியும் அரசு சார்ந்த கோட்பாடுகள் பற்றியும் கற்கும் நெறியாக அரசியல் விளங்குகின்றது.

**04. அரசாங்கம் பற்றிய கற்கைநெறியாக அரசியல் விளங்குதல்**

அரசாங்கம் அதன் அடிப்படைச் சட்டங்கள், மக்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள தொடர்புகள், அவற்றை வகுத்து காக்கும் நியதிகள், சமூகநிலைகள், அவற்றின் குறிக்கோள்கள் என்பனபற்றி ஆராயும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியாக அரசறிவியல் விளங்குதல். இது தவிர,

**05.** அரசுக்குரிய அதிகாரங்களைப் பற்றி கற்கின்றது.

**06.** சட்டவாக்க அமைப்பின், அதன் செயற்பாடுகள் பற்றி கற்கின்றது.

**07.** அரசியல் கட்சிகள், அமுக்க குழுக்கள் பற்றிய கற்கை நெறியாக அரசறிவியல் விளங்குதல்.

**08.** நீதித்துறை அமைப்பின் இயல்புகள், அதன் செயற்பாடுகள் பற்றி கற்கின்றது.

❖ **அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பதன் நோக்கங்கள் யாவை?**

**01.** அரசியல் முறைமைகள் பற்றிய விளக்கத்தை பரவலாக்குதல்

**02.** அரசியலில் செயற்பாட்டுப் பங்கேற்புக்கான அறிவைப் பெருக்குதல்..

**03.** பிரசைகளின் சமூகப்பொறுப்புகளைப் பற்றிய அறிவை விருத்தி செய்தல்.

**04.** தேசிய மற்றும் சர்வதேச அரசியலின் இயல்பைப் புரிந்து கொள்ளுதல்.

**05.** அரசியல் புரிந்துணர்வைப் பரவலாக்குதல்.

**06.** மக்களிடையே சிவில் புரிந்துணர்வினை முன்னேற்றுதல்.

**07.** அரசியல்வாதிகளை பயிற்றுவித்தல்.

**08.** தத்தமது தேசங்களுக்கு அர்ப்பணிப்புள்ள மக்களை உருவாக்குதல்

**09.** நாட்டில் வாழும் மக்களின், உரிமை, சுதந்திரம், போன்றவற்றை தெரிந்து கொள்வதற்கு அவசியம்.

**10.** தேசிய மற்றும் சர்வதேச அரசியல் நிலவரங்களை தெரிந்து கொள்ளுதல்.

**11.** ஜனநாயக ரீதியில் செயற்படும் நல்ல பிரஜைகளை உருவாக்குதல்.

**12.** ஜனநாயக ரீதியான வாழ்கை முறையை ஏற்றுக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ அரசறிவியலைக் கற்பதன் பயன்பாட்டைக் குறிப்பிடுக.

**01.** மனிதர் பகுத்தறிவுள்ள அரசியல் பிராணியாகும். அரசியலுக்கும் மனிதனுக்குமிடையில் பிரிக்க முடியாத தொடர்பு காணப்படுகிறது. மனிதர் அரசியலில் பிறந்து அரசியலுக்குள்ளேயே இறக்கின்றனர். அரசாங்கத்துக்குள் ஆட்சிக்குட்பட்டே அரசியலினுள் வாழ்கின்றனர்.

**02.** மனிதர் அரசியல் செயலில் பங்கேற்கும் அளவு அரசியலை பயிலும் அளவிலேயே தங்கியுள்ளது. அதிக அரசியல் அறிவைப் பெற்றோர் குறைவான அறிவைப் பெற்றோரை விட அதிகமான அரசியலில் பங்கேட்கின்றனர்.

**03.** அரசியலைக் கற்பதன் மூலம் உள்ளூர், வெளியூர் அரசாங்க முறையினுள் தீர்ப்பதற்கு தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

**04.** அரசியலைப் பயில்வதன் மூலம் சில விஷேட தொழில்களைச் சிறப்பாகவும், செயற்திறனுடனும், மேற்கொள்ள முடிகிறது.
உதாரணம் : சிவில்சேவை, தூதுவர் மற்றும் இராஜதந்திர வேலைகள், சட்டத் தொழில் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**05.** அரசியல் விளையாட்டில் ஈடுபடும் ஒருவர் அரசியலைக் கற்பதன் மூலம் சிறந்த அரசியல் வாதியாக திகழலாம்.

## ❖ "மனிதன் அரசியல் விலங்காவான்" என்ற கூற்றை விளக்குக?

அரிஸ்டோட்டில் தனது <u>அரசியல்</u> என்ற நூலில் மனிதன் இயல்பிலேயே அரசியல் விலங்காவான் என்று கூறியுள்ளார்.

மேலும் இயல்பாகவோ அல்லது தற்செயலாகவோ அரசு இல்லாமல் மனிதன் இருப்பானாகில் அவன் மனித இனத்திற்கு மேலோ அல்லது கீழோ ஆவான் என்று அரிஸ்டோட்டிஸ் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் அரசியல் விலங்கே ஏனென்றால் அவனால் சமுதாயம் அல்லது அரசு இன்றிச் செயற்பட முடியாது. சமுதாயத்தின் துணை இல்லாமல் வாழ முடியாது. உணவு, உடை, தங்குமிடம் என்பனவற்றிக்கு பிறரைச் சார்ந்தே இருக்க வேண்டும். சமுதாய அமைப்புக்கள் சிக்கல்களையும், சீர்திருத்தப்பட வேண்டியவைகளையும் அதற்கான வழிமுறைகளையும் அறிய மக்களை நெறிப்படுத்த அரசியல் விஞ்ஞானம் பெரிதும் துணைபுரிகின்றது. மேலும் அரசியலுக்கும் மனிதனுக்குமிடையில் பிரிக்கமுடியாத தொடர்பு காணப்படுகின்றது. மனிதன் அரசியலில் பிறந்து அரசினுள்ளேயே இறக்கின்றான். அரசாங்கத்தின் ஆட்சிக்குட்பட்டே அரசினுள் வாழ்கின்றனர். அரசாங்கத்தின் செயற்பாட்டின் மூலம் மனிதனின் பௌதீக, சமூக இருப்பின் முன்னேற்றமும், பின்னேற்றமும் நிர்ணயிக்கப்படுகின்றது.

## ❖ மனிதன் எவ்வாறு அரசியலைப் பயில்கின்றான் என்பதை விளக்குக.

01. முறைசார்வழிமுறை :

பாடசாலை, பல்கலைக்கழகம், சட்டக்கல்லூரி, கல்விக்கல்லூரி மற்றும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட அரசியல் கல்வி வேலைத்திட்டங்கள் போன்றன முறைசார் ஊடகங்களாகும். இவை பாடவிதானத்திற்கு அமைவாக கல்வியை வழங்குகின்றன. இங்கு கோட்பாடுகள், அவற்றின் பிரயோகம், மற்றும் அவையிரண்டிற்குமிடையிலான ஒற்றுமை, வேற்றுமை என்பன கற்கப்படுகின்றன. பாடசாலை பாடவிதானத்திற்கு வெளிவாரியான பங்கேற்பின் மூலம் அரசியல் பயிலப்படுகிறது. <u>எடுத்துக்காட்டாக</u> தேசியகீதம், தேசிய கொடிக்கு கௌரவமளித்தல், சுதந்திர தினத்தை கொண்டாடுதல், தேசிய வீரர்களை நினைவு கூறல், குடியரசு தின விழா, சர்வதேச தின விழா, அரசியல் தலைவர்கள் நினைவு தினம், சட்டசபை மாதிரிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து அரசியல் விடயங்களை பற்றி வாதப்பிரதிவாதங்களை நிகழ்த்துதல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை விட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி தோல்விகளை சசித்துக் கொள்ளப் பழகுதல் போன்றவற்றின் மூலம் அரசியல் விளையாட்டின் அடிப்படை ஒழுக்க வழிமுறைகள் மாணவர்களிடம் புகுத்தப்படுகிறது.

**02. முறைசாரா வழிமுறை :**

குடும்பம், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள், அரசியல் கட்சிகள், சமய நிறுவனங்கள் கட்சியின் கூட்டங்கள், மற்றும் அமுக்கக் குழுக்கள், அரசாங்கம் மற்றும் பல விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் போன்றன முறைசாரா வழிகளாகும். ஒரு சிறு பிள்ளை குடும்பம் என்ற ஆரம்ப நிறுவனத்திலிருந்தே அரசியலைக் கற்க ஆரம்பிக்கின்றது. பெற்றோரும், மூத்த சகோதரர்களும் கொண்டுள்ள அரசியல் கருத்துக்கள் சிறு பிள்ளைகளின் அரசியல் கருத்துக்களை ஒழுங்கமைப்பதில் பாதிப்பு செலுத்துவதோடு சிலவேளை வாழ்க்கை பூராகவும் நீடித்திருக்கும்.

## வெகுசனத்தொடர்பு சாதனங்கள்

பத்திரிகை, சஞ்சிகை போன்ற முறைகளினால் வெளியிடப்படும், அரசியல் கட்டுரைகள், அரசியல் செய்திகள், விமர்சனங்கள் , அரசியல்வாதிகளின் பேச்சுக்கள் என்பனவற்றின் மூலம் மனிதர்கள் அரசியலைப் பயிலுகின்றனர். மேலும் றேடியோ, தொலைக்காட்சிப்பெட்டி போன்றவற்றினால் வெளியிடப்படும் செய்திகள், விவாதங்கள், அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் கருத்துக்கள், பேட்டி நிகழ்ச்சிகள் என்பனவற்றின் மூலம் அரசியலை பயிலுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்சிகளினால் வெளிப்படுத்தப்படுகின்ற துண்டுப்பிரசுரங்கள், மேடைப் பேச்சுக்கள், பிரச்சாரக் கூட்டங்கள், கருத்தரங்குகள், பாராளுமன்ற விவாதங்கள், அரசியற் போராட்டங்கள், கட்சி மாநாடு, கட்சிப்பத்திரிகைகள் போன்றவற்றின் மூலம் அரசியலைப் பயிலுகின்றனர்.

இதை விட அமுக்க குழுக்களால் நடத்தப்படுகின்ற ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள், சுவரொட்டிகள், சுலோகம் ஏந்திய ஆர்ப்பாட்டங்கள், விழிப்புணர்ச்சியூட்டும் வீதி நாடகங்கள், கருத்தரங்குகள், பாதையாத்திரை போன்றவற்றினூடாகவும் அரசியலைப் பயிலுகின்றனர்.

இவ்வாறு முறைசார், முறைசாரா வழிகளில் மக்கள் பெற்றுக் கொள்ளும் அறிவு அவர்களின் அரசியல் சமூதாயப்படுத்தலின் அளவை நிர்ணயிக்கின்றது.

## ❖ அரசறிவியல் ஒரு விஞ்ஞானமாகுமா?

அரசறிவியல் ஒரு விஞ்ஞானமாகுமா என்பது பற்றி ஒத்த கருத்து நிலவுவதில்லை. சிலர் அரசறிவியலை ஓர் உண்மையான விஞ்ஞானமல்ல என்றும், சிலர் உண்மையான விஞ்ஞானம் என்றும் கூறுகின்றனர்.
அரசியல் பாடத்தினை தலையாய விஞ்ஞானம் என்று முதன்முதலில் அழைத்தவர் அரிஸ்டோட்டில் ஆவார். ஜீன் போடின், தோமஸ் கொப்ஸ், பிரைஸ், மொண்டஸ் கியூ ஆகியோரும் ஆதரித்துள்ளனர்.

<u>அரசறிவியல் ஒரு உண்மையான விஞ்ஞானம் அல்ல என வாதிடுவோர் தமது கருத்தை நியாயப்படுத்துவதற்கு பின்வரும் வாதங்களை முன்வைக்கின்றனர்.</u>

**01** அரசறிவியல் ஒரு நிலையான தளத்தைப் பெறுவதில்லை. மனிதனும் அவனின் அரசியல் செயற்பாடுகளுமே அரசறியலின் அடிப்படையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் நிதமும் மாற்றமுறும் பிராணியாகையால் ஒரு நிலையான தளத்திலிருந்து மனிதனைப்பற்றி ஆராய முடியாது.

**02** துல்லியமான விஞ்ஞானம் போன்று அரசறிவியல் அமைய மாட்டாது.
உதாரணம் 1 : ஈர்ப்பு சக்தி விதி விஞ்ஞானத்தில் மாறாது. உண்மையானது.
உதாரணம் 2 : வெப்பத்தினால் இரும்பு விரியும், குளிர்ச்சியினால் சுருங்கும். இது உண்மை. நிரூபிக்கத்தக்கது.
ஆனால் அரசறிவியல் இப்படி துல்லியமாகவும், நிரூபிக்கத்தக்கதாகவும் இருக்கமாட்டாது.

**03** ஒரு பரிசோதனையை திரும்பத்திரும்ப செய்வதன் மூலமாக விஞ்ஞானத்தில் சில பொதுவான விதிகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் இத்தகைய வாய்ப்பு அரசறிவியலில் இல்லை.

**04** எதிர்வு கூறல்கள் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளது.

**05** காரணங்களும், விளைவுகளும் விஞ்ஞானத்தைப் போல அரசறிவியலில் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டாது.

**06** அரசறிவியலில் பரிசோதனைக்குத் தேவையான உபகரணங்களும், கருவிகளும், ஆய்வு கூடங்களும் இன்மையால் விஞ்ஞான நுட்பங்களை பயன்படுத்த முடியாது.

**07** அரசறிவியலில் உறுதியான நியதிகள் காணப்படுவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசறிவியல் ஒரு விஞ்ஞானமாகும் என வாதிடுவோர் தமது கருத்தை நியாயப் படுத்துவதற்கு பின்வரும் வாதங்களை முன்வைக்கின்றனர்.

**01** இயற்கை விஞ்ஞானங்களைப் போன்று நிச்சயமான நியதிகளைப் பயன்படுத்தி அரசறிவியலில் ஆய்வுகளை மேற்கொள்ள முடியாவிட்டாலும் தரவுகளை சேகரித்தல், அவற்றை ஒழுங்கு படுத்துதல், வகைப்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல், இறுதி முடிவுக்கு வருதல் போன்ற விஞ்ஞான முறைகள் அரசறிவியல் ஆய்வில் பயன்படுத்தப்படுவதால் இதன் மூலம் சில நிலையான நியதிகளைப் பெற முடியும் என்பதால் விஞ்ஞானம் என்கின்றனர்.

**02** அரசறியலில் புள்ளி விபரத்தரவுகள், கணித முறைகள், கணனி முறைகள், போன்றன பயன்படுத்தப்படுவதால் அரசியலை விஞ்ஞானம் எனக் கூறலாம்.

**03** அரசியல் விஞ்ஞானத்தில் சோதனைக் கூடம் வரலாறே. ஒரு அரசு புதிய சட்டம் உருவாக்கும் போது அரசியல் விஞ்ஞானத்திற்கு அது ஒரு புதிய பரிசோதனையாகும். அரசியல் விஞ்ஞானதிற்கு இவ்வாறான சோதனை இயலக் கூடியது. என்பதால் அது விஞ்ஞானம்.

**04** இயற்கை விஞ்ஞானம் போன்று முழுமையாக எங்கும் பொருந்தக் கூடிய சட்டங்கள் இவை என்றாலும் அத்தகைய முடிவுகளுக்கு அரசியல் விஞ்ஞானத்தில் வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. இதனால் அரசறிவியல் விஞ்ஞானம் உதாரணமாக முடியாட்சி, வல்லாட்சி, சில்லராட்சி எல்லாம் அறிமுகப்படுத்தப்பட்டு சோதனைக்குள்ளாக்கி இறுதியில் மக்களாட்சியே உயர்ந்தது என்பது மெய்பிக்கப்பட்டது. 158 நாடுகளின் அரச முறையை முழுமையாக ஆராய்ந்த அரிஸ்டோட்டில் புரட்சிகளுக்கு அடிப்படை சமத்துவமின்மையே காரணம் எனக் கண்டறிந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி 1948 செட்டெம்பரில் பாரிஸின் யுனெஸ்கோ அலுவலகத்தில் சந்தித்துக் கொண்ட உலகின் மிக முக்கியமான அரசியலறிஞர்கள் அரசறிவியல் அல்லது அரசியல் விஞ்ஞானம் (Political Science) என்ற சொற்பிரயோகத்தை பொதுவாக ஏற்றுக் கொண்டனர். அதே வேளை வோல்டர் பேகொட் (Walter Bagehot), அமொஸ்(Amos) , பிறடறிக் பொலோக் (Frederoc Pollok), முதலானவர்கள் "விஞ்ஞான அரசியல்" ( Science of Politics) என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். இங்கு அரசியல் (Politics) என்பது அரசறிவியியல் (Political Science) என்பதை விட விசாலமான உணர்வில் பயன்படுத்தப்படுவதும் நோக்கத்தக்கது.

**மாணவர்களின் கவனத்திற்கு :**

மனிதர்கள் எவ்வாறு அரசியலைப் பயில்கின்றனர்?
அரசியல் கற்பதன் பயன்பாட்டை விளக்குக? இந்த வினாவை தெரிவு செய்தல்.

01. மனிதர்கள் எவ்வாறு அரசியலைப் பயில்கின்ற முறைகளைக் இங்கு குறிப்பிட வேண்டும்.
முறை சார்ந்த வழிமுறை
முறை சாராத வழிமுறை
அரசியலின் பயன்பாட்டைக் குறிப்பிடல் வேண்டும்.

## ❖ அரசறிவியலின் பாடப்பரப்பை தெளிவாக வரையறை செய்து விளக்குக.

அரசறிவியல் ஒரு சமூக விஞ்ஞான பாடமாக இருப்பதால் அதன் தன்மை பற்றியும், பாடப்பரப்பு பற்றியும் சகலராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வரைவிலக்கணம் எதுவும் காணப்படுவதில்லை. மறுபுறம் அரசியலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்பரப்பு காலத்திற்கு காலம் மாற்றமுள்ளது. ஒரு காலத்தில் முக்கியமானது என கருதப்பட்ட ஒரு விடயம் பிரிதொரு காலத்தில் முக்கிய விடயத்தை இழந்து புதிய விடயங்கள் பாடப்பரப்பில் நுழைந்துள்ளன.

அரசறிவியல் பிரதானமாக அரசைப்பற்றியும், அதிகாரத்தைப் பற்றியும் கற்கும் ஒரு பாடமாக கருதப்படுகின்றது. அரசைப் பற்றிய ஆய்வில் அதன் தோற்றம், அதன் தன்மை, அதன் நோக்கம், மற்றும் அதன் செயற்பாடு என்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. இவை அரசின் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய பொருள்களிலும் ஆராயப்படுகின்றன.

அரசியல் அதிகாரம் பறறிய ஆய்வை அரசறிவியலுக்கு அறிமுகம் செய்தவர் மக்கியாவல்லியாவார். இங்கு அதிகாரத்தின் தன்மை, அதிகாரத்தைப் பேணுதல், அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதிகாரத்தை வரையரை செய்தல் என்ற விடயங்களிலே கவனம் செலுத்தப்படுகின்றது தற்கால ஆய்வுகளின் படி அரசறிவியல் என்பது அரசையும், அரச அதிகாரத்தையும் பற்றி மட்டும் ஆய்வு செய்யும் ஒரு பாடமன்று. ஆது ஒரு முழு அரசியல் சமூகத்தையும் ஆய்வு செய்யும் ஒரு பாடமாக வளர்ச்சியடைந்துள்ளது. அதன்படி அரசறிவியலின் பாடப்பரப்பில் பின்வரும் விடயங்கள் இடம்பெறுகின்றன.

**01** அரச மற்றும் அரசாங்கம் பற்றிய கோட்பாடுகள்.

**02** அரசியல் கோட்பாடுகளும், சமூகத்தத்துவங்களும்

**03** சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை போன்ற அரசாங்க நிறுவனங்கள் பற்றிய ஆய்வு

**04** அரசியல் கட்சிகள், அமுக்க குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்.

**05** சட்டம், யாப்புச் சட்டம், நிருவாகச் சட்டம், பொதுச்சட்டம்.

**06** பொதுத்துறை, நிர்வாகம், ஒப்பீட்டுத்துறை, நிருவாகமும் அபிவிருத்தி நிருவாகமும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 தேசிய அரசாங்கங்கள்.

08 ஒப்பீட்டு அரசாங்கம்

09 உள்ளூராட்சி

10 சர்வதேச அரசியல், சர்வதேச நிதி நிறுவனங்கள், சர்வதேச சட்டம், மனிதாபிமான சட்டம்.

11. பொதுக்கொள்கை உருவாக்கமும், நடைமுறையும்.

12. மோதல் முகாமைத்துவமும், மோதல் தீர்த்தலும்.

இருபதாம் நூற்றாண்டின் நடு அரைப் பகுதியின் பின்னர் பிரபல்யம் அடைந்த நடத்தை வாத கற்கையின் பின்னர் அரசறிவியலின் பாடப்பரப்பில் புதிய அம்சங்கள் சேர்ந்து கொண்டன.

01 முறைமைப் பகுப்பாய்வு

02 அரசியல் நடத்தை

03 அரசியல் மாற்றம்

04 அரசியல் சமூகவியல்

05 அரசியல் சமூகமயமாக்கலும், அரசியல் கலாச்சாரமும்.

06 அரசியல் உயர்குழாம் வகுப்பு

07 அரசியல் அபிவிருத்தியும், நவீனத்துவமும்

08 அரசியல் தொடர்பாடல்.

மேற்கண்டவற்றை விரிவாகப் பார்ப்போம்.

### ❖ அரசியல் கோட்பாடுகளும், சமூகத்தத்துவங்களும்

அரசியல் கோட்பாடு அரசியல் விஞ்ஞானத்தின் முக்கிய பிரிவாகும். இப்பிரிவு அரசியல் விஞ்ஞானம் பற்றிய கோட்பாடு ரீதியான கற்றலை வலியுறுத்து கிறது. அரசின் தோற்றம், தன்மை, நோக்கம், பணிகள், மற்றும் அமைப்பு ஆகியவகை பற்றியும் அரசியல் கோட்பாடு ஆராய்கிறது. இப்பிரிவு வெறும் உண்மைகளை பற்றி மட்டும் கவனம் செலுத்தவில்லை. கிடைத்திருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளின் அடிப்படையில் சில பொதுப்படையான விதிகளை முன் வைக்க உதவுகிறது.

அரசியல் நிகழ்ச்சிகள் எல்லா அரசுகளிலும் நிகழுகின்றன. அவற்றிடையே சில பொதுவான தன்மைகள் காணப்படுகின்றன. அரசியல் நிறுவனங்களுக்கடையிலும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொதுப்படையான முடிவிற்கு வர முயல்கிறது. மேலும் அரசு தொடர்பான கம்யூனிசம், தாராண்மைவாதம், ஜனநாயகம் முதலான சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் இது ஆய்விற்கு எடுத்துக் கொள்கிறது.

## அரசியல் தத்துவம்

அறிவின் முதிர்ச்சி நிலையை தேடுவது தத்துவம் எனப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட கற்றல் பிரிவில் பொதுவான விதிகள் அல்லது கொள்கைகளை கூட்டுச் சேர்ப்பதை இது குறிக்கிறது. அரசியல் தத்துவம் என்பதை அரசியல் விதிகள் அல்லது கொள்கைகளின் தொகுப்பு எனலாம். அரசியல் தத்துவத்தை அரசியல் தத்துவ ஞானிகள் வகுக்க முயன்று வருகின்றனர். அரசியல் தத்துவத்தில் அரசு, நாடு, இறைமை, சட்டம், நீதி முதலானவை பற்றிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. அரசியல் விஞ்ஞானம் அரசியல் தத்துவத்தை விட உயர்ந்தது.

### ❖ சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை போன்ற அரசாங்க நிறுவனங்கள் பற்றிய ஆய்வு

**சட்டத்துறை :**

சட்டம் இயற்றுவது ஒரு நாட்டின் இன்றியமையாத தேவையாகும். அந்தத் தேவையை நிறைவேற்றிக் கொள்ள ஒவ்வொரு அரசாங்கத்திலும் சட்டமன்றம் அமைக்கப்பட்டிருக்கும். அதனையே சட்டத்துறை என்ற பெயரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகிறது.சட்ட சபை ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு பெயரால் அழைக்கப்படுகின்றன. அவை

| நாடுகள் | இரு சபைகள் | ஒரு சபை | சபையின் பதவிக்கலாம் | சட்ட துறையின் பெயர் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | ✓ | - | 2 | காங்கிரஸ் |
| பிரித்தானியா | ✓ | - | 5 | பாராளுமன்றம் |
| இந்தியா | ✓ | - | 5 | பாராளுமன்றம் |
| இலங்கை | - | ✓ | 6 | பாராளுமன்றம் |
| பிரான்ஸ் | ✓ | - | 5 | பாராளுமன்றம் |
| முன்னாள் சோவியத் யூனியன | ✓ | - | 5 | சுப்ரீம் சோவியத் |
| ஜப்பான் | ✓ | - | 4 | டயட் |
| பிலிப்பைன்ஸ் | ✓ | - | 4 | காங்கிரஸ் |
| மலேசியா | ✓ | - | 5 | பாராளுமன்றம் |

**நிருவாகத்துறை :**

சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத் தாபனமே நிருவாகத்துறையாகும்.

**நீதித்துறை :**

நீதித்துறை என்பதற்கு சாதாரணமாக அரசாங்கத்தின் மூன்றாம் அங்கம் என்றும் நீதியை நிலைநாட்டும் பணியை மேற்கொள்ளும் பகுதி என்றும் விளக்கம் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அரசியல் கட்சிகள், அமுக்க குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் பற்றிய ஆய்வு**

**அரசியல் கட்சிகள் :**

குறிப்பிட்ட நோக்கத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் குழு எனலாம்.

**அமுக்க குழுக்கள் :**

ஒரு குறிப்பிட்ட நோக்கத்தின் அடிப்படையில் அரசாங்கமொன்றில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தாமல் மறைமுகமாக செல்வாக்குச் செலுத்துவது.

**பொதுசன அபிப்பிராயம் :**

அரசாங்கம் மற்றும் அதன் செயற்பாடுகள் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள், அரசியல் ரீதியான முக்கிய நிகழ்வுகள் என்பன பற்றி பொது மக்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களின் பொதுமைப்படுத்தப்பட்ட நிலை பொதுசன அபிப்பிராயம் எனப்படும்.

❖ **சட்டம், யாப்பு சட்டம், நிருவாகச் சட்டம், பொதுச்சட்டம்:**

ஒரு அரசில் உள்ள அங்கத்தவர்களின் நடத்தை பற்றிய விதி சட்டம் எனப்படும். சட்டமென்பது ஒரு வகை கட்டாயப்படுத்தும் முறையாகும்.

ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் மனிதனின் பொது வாழ்கையை கட்டுப்படுத்துவதற்காக அரசு பிறப்பிக்கும் கட்டளைகளில் இடம் பெறும் நிபந்தனைகளே சட்டங்களாகும்.

**யாப்புச் சட்டம் :**

அரசாங்கத்தின் சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை எனும் மூன்று பிரிவுகளின் அமைப்பு, கடமை ஆகியவைகளை நிர்ணயிக்கும் சட்டமே யாப்புச் சட்டம் எனப்படும். இச் சட்டம் எழுதப்பட்டதாகவோ எழுதப்படாததாகவோ இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிருவாகச் சட்டம் :**

நிருவாக அதிகாரிகளின் நிலைகளையும் அவர்களின் கீழுள்ள பணியாட்களுடன் கொண்டிருக்க வேண்டிய தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் சட்டமே நிருவாகச் சட்டமாகும்.

❖ **தேசிய அரசாங்கம் :**

தேசிய அரசாங்கமும் அரசியலும் என்பது அரசறிவியலின் முக்கியமானதொரு கற்கைப் பிரிவாகும். ஒவ்வொரு நாட்டின் மாணவர்களும் தமது தேசிய அரசாங்கம் அதன் அரசியல் பற்றி கற்கின்ற ஒரு கற்கைத் துறையாகவும், அக் குறிப்பிட்ட நாட்டின் அரசியல் ரீதியான வரலாறு, அது சுதந்திரம், பெற்ற முறை அது வரை காலமும் நிலவிய அரசியல் நிருவாக முறைமைகள், சுதந்திரத்திற்கு பிற்பட்ட அதன் அரசியல் வளர்ச்சி அப்போது ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் நிறுவனங்களான சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை, அரசியல் கட்சிகள், அமுக்க குழுக்கள் என்பன பற்றிய ஆய்வாகவும் இக் கற்கை நெறி அமைந்திருக்கும்.

❖ **ஒப்பீட்டு அரசாங்கம் :**

அரசுகள் வெவ்வேறான அரசியல் நிறுவனங்களைப் பெற்று திகழ்கின்றன. ஒப்பீட்டு அரசாங்கம் இத்தகைய அரசியல் நிறுவனங்கள் பற்றிய ஒப்பீட்டு வகையிலான கற்றலாக அமைந்துள்ளது. ஒப்பீட்டு அரசியலில் அரசியல் எனும் சொல் அரசியல் செயல், அரசியல் செயல்முறை, அரசியல் அதிகாரம் ஆகிய மூன்று பொருள்களை அழிக்கிறது.

சச்சரவுகளையும் சச்சரவுகளுக்கான தீர்வுகளை காணுவதையும் அரசியல் செயல் குறிக்கிறது. அரசியல் செயல்முறை என்பது முடிவு எடுக்கும் முறையைக் குறிக்கிறது. முடிவு எடுப்பதில் சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதித்துறை ஆகியவை மட்டுமன்றி அமுக்க குழுக்களும், அரசியல் கட்சிகளும் பங்கு பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **உள்ளூராட்சி :**

ஒவ்வொரு அரசாங்கத்தினுடைய துணை நிறுவனங்களாக உள்ளூராட்சி முறை காணப்படுகிறது. நிருவாகத்தை பரவலாக்குகின்ற ஒரு முறை எனவும் கூறுவர். அரசாங்கம் தனது வேலைப்பழுக்களை குறைப்பதற்காகவும் அபிவிருத்தியை இலகுவாகச் செய்வதற்கும் இந்த துணை நிறுவனமான உள்ளூராட்சி மன்றங்களை ஒவ்வொரு மாவட்ட ரீதியாகவும் அமைத்திருக்கின்றது.

சமஷ்டி ஆட்சி முறை உள்ள நாடுகளை விட ஒற்றையாட்சியுள்ள நாடுகளிலே உள்ளூராட்சி அமைப்பின் செயற்பாடுகள் அதிகமாக உள்ளது. ஒற்றை ஆட்சி முறையில் உள்ளூராட்சி முறை மத்திய அரசாங்கத்தின் துணை நிறுவனங்களாக செயற்படுகிறது. உதாரணமாக இலங்கை, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகளின் மத்திய அரசாங்கத்தின் துணை நிறுவனங்களாக உள்ளூராட்சி முறை அமைப்பு செயற்பட்டு வருகிறது. இலங்கையில் உள்ளூராட்சி அமைப்பு மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்ற அமைப்பில் செயற்படுகிறது.

❖ **பொதுக் கொள்கை உருவாக்கமும் நடைமுறையும் :**

பொதுத்துறை நிர்வாகப் பாடப்பரப்பில் பொதுக் கொள்கை உருவாக்கமும் நடைமுறையும் முக்கியமான இடத்தைப் பெறுகிறது.அரச கொள்கையினை நடைமுறைப்படுத்தல் அரச நிர்வாகத்தின் கடமையாகும். பொதுக் கொள்கையை உருவாக்குவது அரசியல் நிர்வாகிகள். அதனை நடைமுறைப்படுத்துகின்றவர்கள் பொதுத்துறை நிர்வாகிகளாவார். இதன் விளைவாக அரசியல் நிருவாகிக்கும், பொதுத்துறை நிருவாகிக்கும் ஒரு தொடர்பு இருப்பதை காண முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அரசியல் சமூகவியல் :**

அரசியல் சமூகவியல் ஒரு புதிய கற்கைநெறியாகும். 2ம் உலக மகா யுத்தத்திற்கு பின்பு அமெரிக்க பல்கலைக்கழகங்களில் பிரசித்தமாகியது. அண்மைக்கால நடத்தை வாத அணுகு முறையின் பயனாக உருவாகிய புதிய கற்கை நெறி சமூக விஞ்ஞான கற்கை நெறிகளுக்கிடையே தொடர்புகளை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் உருவாகிய துறையாகும். பாரம்பரிய அரசியல் சித்தாந்தமும், சமூகவியலும் இணைந்த ஒரு புதுமையான கற்கை நெறி அரசியல், சமூக பிரச்சினைகளை யதார்த்த ரீதியாக ஆய்வு செய்ய வேண்டுமென்ற ஆவலினால் உருவாக்கப்பட்டது.

❖ **அரசியல் சமூகமயமாக்கலும், அரசியல் கலாச்சாரமும் :**

அரசியல் சமூகவியல் என்ற புதிய கற்கை நெறியில் அரசியல் சமூகமயமாக்கல் என்கின்ற கோட்பாடு மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. அதாவது ஒருவர் தாம் வாழும் அரசியல் தொகுதியில் நமது அரசியல் நெறிமுறைகளையும் அரசியல் நடவடிக்கைகளையும், உணர்வு பூர்வமாக அறிந்து கொள்ள உதவுவது அரசியல் சமூகமயமாக்கலாகும்.

சமூகமயமாக்கல் இயல்பாகவும் சுயமாகவும் ஒவ்வொருவர் வாழ்வில் நடைபெறுகிறது குழந்தைப் பருவம் முதல் முதியோராகும் வரை இது தொடர்கிறது. சமூகமயமாக்கலில் பிரதான அம்சம் என்னவெனில் சமூகத்தோடு இணைந்து கொள்ள பழகிக் கொள்ளலாகும். இது அரசியல் மற்றும் சமூக கலாசாரத்தோடு தொடர்புபடுகிறது.

அரசியல் சமூகமயமாக்கல் மூலமாக ஒரு விழிப்புணர்வு ஏற்படுகிறது. இது எல்லாவித கல்விமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது. நேரடியாக கல்வி நிலையங்கள் மூலம் கற்கும் கல்வி அனுபவரீதியாக பெறும் அறிவு, சமூகச் செயற்பாடுகள் மூலம் பெறும் அனுபவம், அரசியற் பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பல வகைப்பட்ட வழிகளில் இது ஏற்படுகிறது. இவற்றால் அரசியல் நிகழ்வுகள் பற்றிய விழிப்புணர்வு மேலும் அரசியல் பங்கு கொள்ள வேண்டுமென்ற அவா மேலோங்குகிறது அதனால் ஜனநாயக வழிமுறைகளில் நாட்டம் ஏற்பட்டு அரசியல் நடத்தைகளை சீராக்குகிறது.

**அரசியல் கலாச்சாரம் :**

ஒருவரின் உறுதிப்பாடு, நடத்தை மனப்பாங்குகளைக் குறிப்பது கலாச்சாரமாகும். அரசியல் கலாச்சாரம் என்பது அரசாங்கத்தின் நிறுவனங்கள், அரசியல்வாதிகளின் நடத்தை போன்றவற்றில் கொண்டுள்ள மக்களின் மனப்பாங்குகளைக் குறிக்கும்.

❖ **அரசியல் அபிவிருத்தியும் நவீனத்துவமும் :**

நவீனத்துவம் என்பது முற்று முழுதான மாற்றம் அல்ல. என பிளாக் கூறினார். சமூகத்தின் பாரம்பரிய அமைப்புக்கள் புதிய செயற்பாடுகளை ஏற்று நடப்பதாகும். புதிய சவால்களை ஏற்று புதிய செயற்பாடுகளுக்கு தயாராகிக் கொள்வது நவீனத்துவதின் பண்பாகும்.

நவீனத்துவ கோட்பாடு முதலில் மேற்குலகில் ஐரோப்பிய, அமெரிக்க உறவுகளில் ஆரம்பித்து 2ம் உலக மகா யுத்தத்துக்கு பின்பு தோன்றிய புதிய அரசுகள் பொருளாதார வளர்ச்சியை வற்புறுத்திய வேளை நவீனத்துவ கோட்பாடும் சேர்ந்து கொண்டன. இந்த கால கட்டத்திலேயே அரசியல் நவீனமயமாக்கலும் முக்கிய இடத்தைப் பெற்று அதனூடாக வாக்குரிமை, அரசியல் பங்குபற்றுதல், அரசியல் உரிமை போன்றன நவீனத்துவம் அடைந்து அபிவிருத்தி அடைந்தது.

**மாணவர்களின் கவனத்திற்கு :**

அரசியலை வரைவிலக்கணம் செய்து அதனுடைய பாடப்பரப்பினை ஆராய்க? எனும் வினா வருகின்ற போது பின்வரும் விடயங்களைக் கவனதில் கொண்டு விடை எழுதுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. அரசியல் என்றால் என்ன?

02. அரசியலின் பாடப்பரப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை எழுதி அவற்றில் மூன்றை விளக்கி எழுதல் வேண்டும்.

## ❖ "அரசு பற்றிய ஆய்வே அரசறிவியலாகும்" ஆராய்க.

நீண்ட காலமாக அரசறிவியல் அரசு பற்றி ஆய்வு செய்வதிலேயே தனது கவனத்தை செலுத்தியது. அதனால் அரசறிவியல் என்பது அரசை கவனத்தில் எடுக்கின்றது என்பதாகும். பேராசிரியர் கார்ணர் (Gernar) கூற்றுப்படி அரசியல் என்பது அரசுடன் ஆரம்பித்து அரசுடன் முடிவடைகிறது எனக் கூறினார். இக் கருத்து விளக்குவது யாதனில் அரசியல் ஆய்வில் மிகவும் பிரதான எண்ணக்கரு அரசு பற்றியதாகும். இவ்வரசு பற்றிய ஆய்வு எல்லாக் காலத்திலும் ஒரே விதமாக அமையாமல் காலத்திற்கு காலம் வேறுபட்ட வித்தியசமான பண்புகளை வெளிப்படுத்தியுள்ளது.

ஆரம்ப கால கிரேக்க சிந்தனையாளரான பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்றவர்கள் அரசறிவியலை நகர அரசுகள் என்ற வகையிலே ஆய்வு செய்தனர். அரிஸ்டோட்டில் தனது அரசியல் என்ற நூலில் அரசின் தோற்றப்பாடு பற்றி ஆய்வு செய்தார். அதில் அவர் ஆணும் பெண்ணும் கூடிவாழும் போது குடும்பம் உருவாகின்றது என்றும் குடும்பங்கள் பல சேரும்போது சமூகங்கள் பிறக்கின்றது எனவும், சமுகங்கள் தங்களது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக அரசை உருவாக்கினர் என்றும் கூறுகின்றார். மேலும் அரிஸ்டோடிலின் ஆசிரியரான பிளேட்டோவும் நகர அரசியல் பற்றியே ஆய்வு செய்தார். இவ்வாய்வாளர்கள் மக்களுக்கு சிறந்த வாழ்கையை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்ற வகையிலே சிந்தித்தனர். இந்த சிறந்த வாழ்கையை அரசுக்குள்ளேயே பெற்றுக் கொள்ளலாம் என்று கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய காலத்திற்கு பிறகு கிரேக்க நகர அரசுக்கள் மறைந்து பாரிய அரசுகள் (சாம்ராஜயம்) தோன்றியதன் பின்பு அரசின் கடமைப்பங்கு அதிகரித்தமையால் அரசை பற்றிய ஆய்வின் தன்மையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் பின் வந்த அறிஞர்கள் அரசைப்பற்றிய ஆய்வின் பொழுது அரசு எவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்தது, அரசின் நோக்கங்கள், அரசின் கடமைகள், அரசு, மனிதன், சமூகம் ஆகியவற்றிக்கிடையிலான தொடர்புகள், அரசுக்கும் ஏனைய சங்கங்களுக்கும் இடையிலான தொடர்புகள் , அரசின் சட்டம் எத்தன்மை வாய்ந்தது. அரசின் இறைமை என்றால் யாது? அது யாரிடத்தில் எத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்ற வகையில் ஆய்வு செய்தனர். மேலும் இவ் அரசியல் பாடமானது அரசியல் அமைப்பு என்றால் என்ன? அவற்றை பாகுபடுத்துவது எப்படி? ஒற்றையாட்சி என்றால் என்ன? சமஷ்டி ஆட்சி முறை என்னறால் என்ன? இவற்றை வேறுபடுத்தும் அடிப்படை பண்புகள் யாவை? பாராளுமன்ற ஆட்சி முறை என்றால் என்ன? ஜனாதிபதி ஆட்சி முறை என்றால் என்ன? ஜனநாயகம், சர்வாதிகாரம், சோஷலிஷம் போன்ற அம்சங்களை தனது பாடப்பரப்பின் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதைக் காணலாம்.

இவ்வாறு அரசினை முதன்மைப்படுத்தி விளக்கம் கொடுத்தவர்களில் கார்ணர், பிராங்குட்நெவ், பிளன்ட்சிலி, கெட்டல், போலோக், ஸ்ரோங், போன்றவர்கள் முக்கியமானவர்களாக விளங்கினர்.

### ❖ "அதிகாரம் பற்றிய ஆய்வே அரசறிவியலாகும்" ஆராய்க.

அரசறிவியலின் பாடப்பரப்பில் இடம் பெறும் பிரிதொருவிடயம் அதிகாரம் பற்றிய ஆய்வாகும். இந்த ஆய்வு 16ம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியோடு இடம்பெறுகின்றது. அதற்கு முன்வாழ்ந்த அறிஞர்கள் அரசைப்பற்றி பல்வேறு கோணங்களில் ஆய்வுகளை மேற்கொண்டிருப்பினும் அவ்வரசின் அதிகாரத்தினைப் பற்றி ஆராய முற்படவில்லை. இத்தாலிய நாட்டைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்த "மக்கியாவலி" என்பவரே இவ்வதிகாரம் பற்றிய ஆய்வின் பிரதானமானவராகக் காணப்படுகின்றார். இவர் எழுதிய "இளவரசன்" (The Prince) என்ற நூலில் தமது முன்னோர்களைப் போல் அல்லாது சமகாலத்தவர்களைப் போலன்றி அரசு பற்றிக் கூறாது அரசியல் அதிகாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அதிகாரம் என்பது ஒரு குறிக்கோளை அடைவதற்குரிய சாதனம் அல்ல, மாறாக அதிகாரம் என்பது அதிகாரமேயாகும். இவ்வதிகாரத்தைப் பெறுவதும் பாதுகாப்பதும் அரசின் கடமையாகும்,. அதிகாரத்தைப் பெற்ற போது அரசன் சிங்கத்தைப் போன்று பலமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு இல்லாவிட்டால் அதிகாரத்தினை பாதூகாக்க முடியாது என்று மக்கியாவலி குறிப்பிட்டார். அதிகாரத்தை அடைவதற்காக அரசன் எதையும் செய்யலாம். நன்மை, தீமையையினைப் பற்றி கவலைப்பட தேவையில்லை. கொலை செய்யலாம், பொய்யுரைக்கலாம், நன்றிமறக்கலாம், சமயவாதிகளைப்போல் நடிக்கலாம். எனவே அரசின் குறிக்கோள் அதிகாரமே அன்றி வேறொன்றல்ல என்று விளக்கியதன் மூலம் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த ஒரு மரபினை உடைத்து அரசறிவியலில் புதியதொரு மரபினை தோற்றுவித்தார் அதன் விளைவாக அரசறிவியல் என்ற பாடம் அதிகாரதினைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளுகின்ற ஒரு பாடமாக ஒழுங்கமைந்து வளர்ச்சியடைந்ததோடு அரசறிவியலின் பாடப்பரப்பிலே புதியதொரு ஆய்வு முறையும், பரிமாணமும் ஏற்படலாயிற்று. இவ்வாறு மக்கியாவலியினால் ஆரம்பிக்கப்பட்ட இப் புதிய மரபு மேலும் பல அறிஞர்களால் போதிக்கப்பட்டது.

இவருக்கு பின்னர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கொப்ஸ் (Hopps) என்பவர் அரசின் தனி முதன்மை அதிகாரத்தைப்பற்றிக் கூறினார். அவரது கருத்துப்படி அரசியல் அதிகாரம் என்பது சர்வ வல்லமை பொருந்தியது. எவரும் அதனை எதிர்க்கவோ, கேள்வி கேட்கவோ முடியாது. அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்ட கட்டளையே சட்டம். இவ்வாறு அவர் அரசியல் அதிகாரத்தின் முன்னால் ஏனையவை அனைத்தும் பலவீனமானது என்று குறிப்பிடுகிறார்.

19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வாழ்ந்த MOSCA, PARETO என்ற உயர் குலாம் வகுப்பினைப் பற்றிய ஆய்வின் போது அதிகாரத்தினை பற்றிய ஆய்வினை மேற்கொள்கின்றனர். அரசியல் அதிகாரமானது சுழற்சி முறையில் உயர் குலாம் வகுப்பினருக்கிடையில் மாறிக் கொண்டிருக்கின்றது என்று கூறுகின்றனர் . மேலும் 20ம் நூற்றாண்டில் ஆரம்ப பகுதியில் வாழ்ந்த மக்ஸ் வெபர் (MAXWEBER) என்ற ஜேர்மனிய சமூகவியலாளர் கூட தனது ஆய்வில் அரசியல் அதிகாரத்திற்கு பிரதான இடத்தினை வழங்கினார். மக்ஸ் வெபரின் (MAXWEBER) கருத்துப்படி சகல அரசியலும் அதிகாரத்திற்கான போராட்டமாகும். இவர் அதிகாரத்தினை மரபு சார் அதிகாரம், பகுத்தறிவு அதிகாரம் / சட்ட அதிகாரம், வசீகர அதிகாரம் என மூன்றாகப் பிரித்து விளக்கினார்.

மேலும் சர்வதேச அரசியல் பற்றி ஆய்வு செய்த HANS J. MORGENTHALL அரசியல் அதிகாரத்தைப்பற்றி குறிப்பிடும் போது சகல விதமான அரசியலும் அதிகாரத்திற்கான போராட்டமே என்று குறிப்பிடுகின்றார்.

இவர்களை விட லாஸ்வெல் (LASS BELL), C.E. மெரியம் , பேட்டன் ரசல் (BERTANT RUSSEL), வட்கின்ஸ் (WATKUNS), ரொபின் (ROBIN) போன்றவர்களும் அதிகாரம் என்ற கருத்தினை வலிறுத்தியவர்களில் முக்கியமானவர்களாக விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **"சர்வதேச அரசியல் பற்றிய ஆய்வே அரசறிவியலாகும்" இக் கூற்றை ஆராய்க?**

அரசறிவியல் பாடப்பரப்பில் சர்வதேச அரசியலும் ஒரு முக்கிய பிரிவாகக் கொள்ளப்படுகிறது. விஞ்ஞானமும், தொழிநுட்பமும் உலகத்தில் புவியியல் பரப்பை சுருக்குகின்ற அளவு செய்தித் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை படைத்துள்ளன. இன்று உலகிலுள்ள அரசுகள் பல்வேறு காரணங்களுக்காக ஒன்றையொன்று சார்ந்துள்ளன. பிற அரசுகளுடன் தொடர்பற்று தனியான வாழ்க்கையை நடத்த எந்த அரசும் சிந்தித்து பார்க்க இயலாத நிலை நிலவுகிறது. இக் காரணங்களால் சர்வதேச அரசியல் அரசறிவியலில் புதிய பிரிவாக சேர்க்கப்பட்டு வளர்ந்து வருகிறது.

சர்வதேச மட்டங்களில் அரசுக்கிடையிலான உறவுகளை ஒழுங்கு செய்ய சர்வதேச சட்டம் உள்ளது. முதலாம் உலகப் போரின் முடிவில் உலக அமைதியை ஏற்படுத்த சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது. சர்வதேச மட்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட முதல் நிறுவனம் இதுவாகும். இவ்வமைப்பு ஏறத்தாள 20 ஆண்டுகள் செயற்பட்டு மறைந்தது. 2ம் உலகப் போரின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. உலக அமைதியைக் காக்கவும், உலக மக்களின் மேம்பாட்டிற்காகவும் பல்வேறு சேவைகளை இவ்வமைப்பு செய்து வருகிறது. இந்த விடயங்கள் பற்றி கற்றலே சர்வதேச அரசியலாகும்.

இது தவிர நாடுகளுக்கிடையிலான அதிகாரம், அந்த அதிகாரத்தில் பேணப்பட வேண்டிய சமநிலை என்பன பற்றியும் அந்நாடுகளுக்கிடையே கடைப்பிடிக்க வேண்டிய இராஜ தந்திர நடைமுறைகள் பற்றியும் இக் கற்கை நெறி ஆய்வு செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பிராந்திய அமைப்புக்களான அணிசேரா இயக்கம், சார்க் அமைப்பு, ஆசியான் அமைப்பு, வோர்சோ, நேற்றோ அணிகள் என்பன பற்றியும் இக் கற்கை நெறி ஆய்வு செய்கிறது.

இன்றைய சர்வதேச அரசியல் கல்வியில் பின்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

1. உலக சமூக அமைப்பு
2. சர்வதேச கோட்பாடுகள்
3. அதிகாரக் கோட்பாடு, அதிகார சமநிலை
4. போரும் சமாதானமும்.
5. தேசியம், குடியேற்ற நாட்டுக் கோட்பாடுகளும்.

சர்வதேச அரசியலில் ஹென்ஸ் மொகன்தோ, குயின்சி ரைட், ஹெரால்ட், சார்லஸ் ஸ்பென்சர் போன்ற ஆய்வாளர்கள் முக்கியமானவர்களாகத் திகழ்ந்தார்கள்.

## ❖ மோதல் முகாமைத்துவமும் மோதல் தீர்த்தலும் பற்றிய ஆய்வே அரசறிவியலாகும் ஆராய்க?

அண்மைக் காலத்தில் மோதல் முகாமைத்துவமும், மோதல் தீர்த்தல் என்ற பிரிவு அரசறிவியலில் ஆராயப்பட்டு வருவது ஒரு முக்கியமான விடயமாகும். அரசறிவியலின் பாடப்பரப்பில் மோதல் முகாமைத்துவமும் மோதல் தீர்த்தலும் என்ற விடயம் ஒரு பிரிவாக சேர்க்கப்பட்டுள்ளது. சமாதான ஆய்வில் அத்தியாவசியமான ஒரு பகுதியாக முரண்பாட்டுக் கோட்பாடு இருந்து வருகிறது. சமாதானம் பற்றி ஆய்வு செய்த சமூக விஞ்ஞானிகள் பலரது முயற்சிகளுக்கு மத்தியிலும் முரண்பாடு என்ற எண்ணக்கருவை திட்டவட்டமாக விளக்க முடியாத ஒன்றாகவே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே முரண்பாடு என்பது அருமையாக கிடைக்கும் ஒரே வளங்களைப் பெறுவதற்கு ஒரே நேரத்தில் இரண்டு கட்சிகள் முயற்சிக்கும் ஒரு சமூகச் சூழ்நிலை என்றும் பொதுவாக வரைவிலக்கணப்படுத்தலாம். அதன்படி முரண்பாடு என்பது ஒரு சமூகக் காட்சி என்ற கருத்தையும் இல்லாமை அல்லது தாராளமாக கிடைக்காமை என்ற கருத்தையும் குறிக்கிறது.

முரண்பாட்டு முகாமைத்துவம் என்பது முரண்பாடு சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் இடையில் யுத்தம் நிகழாது இரண்டு தரப்பினரையும் ஒருமுகப்படுத்தும் நிலைக்கு கொண்டு வருவதினூடாக முரண்பாட்டின் வளர்ச்சியினை முகாமைத்துவம் செய்தல் என பொருள்படும்.

முரண்பாடுகளுக்கு தீர்வுகாணுதல் என்பது அண்மைக்காலத்தில் முக்கியத்துவம் பெற்ற ஒரு துறையாகும். முரண்பாட்டுத் தீர்வானது முரண்பாடு சம்பந்தப்பட்ட தரப்பினரின் நடத்தை, முரண்பாட்டின் தன்மை, சம்பந்தப்பட்ட தரப்பினர் பயன்படுத்தும் உபாயங்கள், மூன்றாம் தரப்பினர் பங்குபற்றுதல், என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றது. முரண்பாடுகளை முடிவிற்கு கொண்டுவரும் போது கட்டமைப்பு, மனப்பாங்கு, நடத்தை என்பனவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் யுத்தத்தின் மூலம் தாம் அடைய இருக்கும் இலக்கினன யுத்தம் இல்லாமல் சமாதனத்தின் மூலம் அடைய முடியுமாயின் யுத்தத்தை இரண்டு கட்சிகளும் கைவிட்டு ஒரு மூன்றாம் தரப்பினரின் பங்குபற்றுதலுடன் பேச்சுவார்த்தைக்கு வருகின்ற போது முரண்பாட்டுத் தீர்வு காணும் வழிமுறை ஆரம்பிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ பொதுத்துறை நிர்வாகம் பற்றிய கல்வியே அரசறிவியலாகும் ஆராய்க.

அரசறிவியல் பாடப்பரப்பில் ஒரு பிரிவாக பொதுத்துறை நிர்வாகம் உள்ளடக்கப்பட்டு மாணவர்கள் மத்தியில் போதிக்கப்பட்டு வருவது ஒரு சிறப்பான விடயமாகும்.

பொதுச் சட்டங்களையும், திட்டங்களையும், கொள்கைகளையும் பொது நலனுக்காக நடைமுறைப்படுத்தும் ஒன்றே பொது நிருவாகம் எனப்படும். அரசாங்க நடவடிக்கைகளின் அதிகரிப்பும் கைத்தொழில் வாதத்தின் அமுலாக்கமும் இக்கற்கை நெறியின் அவசியத்தினையும் முக்கியத்துவத்தையும் உணர்த்தின. ஆரம்ப கால அரசாங்கங்களின் மிக முக்கியமான பணிகளாக கருதப்பட்ட நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு பாதூகாப்பு என்ற நிலை மாற்றமடைந்து சமுதாய மக்களின் கல்வி, சுகாதாரம் முதலான சமூக நல வசதிகளையும் அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டியதன் அவசியம் பெரிதும் உணரப்பட்டது. இதன் காரணமாக அரசாங்கத்துறைகளும், மக்களின் நலம் பேணும் அமைப்புக்களும் ஒழுங்கமைக்கப்படத் தொடங்கியதைத் தொடர்ந்து அவை பற்றிய ஆய்வுகளும், கல்வியும் முக்கியத்துவம் பெற்ற போது பொது நிர்வாகம் என்ற கல்வி அரசியலில் முக்கியத்துவம் பெற்றது.

பொதுத்துறை நிர்வாகம் எனும் கல்வியை தனியானதொரு கல்வியாக மாற்றிய பெருமை பொதுத்துறை நிருவாகத்தின் தந்தையான வூட்டோ வில்ஷன் (WOODROW WILSON) என்பவரையே சாரும். இவர்தான் 1886ம் ஆண்டில் எழுதிய JOURNAL OF POLITICS எனும் நூலின் THE STUDY OF PUBLIC ADMINISTRATION என்ற ஒரு கட்டுரையை எழுதி இருந்தார். இக் கட்டுரையில் பொதுத்துறை நிர்வாகம் என்பது அரசாங்கத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் வெளிப்படையான அம்சம் எனக் கூறினார். இவரைத் தொடந்து குட்நோ (GOOD NOW), வில்லோபி, பிப்னக், L.D.ஒயிட், சைமன், பிபனர், லூாதர் குல்லிக் டிமோக் Henry Fayol, MP Pollet, L.Urwuck F.W.Taylor, J.D.Mooney போன்றவர்களும், பொதுத்துறை, நிர்வாகத்தை, ஆய்வு செய்தவர்களில் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றனர்.

## ❖ அரசியல் விஞ்ஞானத்திற்கும் ஏனைய துறைகளுக்கும் உள்ள தொடர்பினை பின்வரும் தலைப்பின் கீழ் ஆராய்க.

### 01. அரசியல் விஞ்ஞானமும் வரலாறும் (POLITICAL SCiENCE & HISTORY)

அரசறிவியலுக்கும், வரலாற்றுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி பல அறிஞர்களுக்கிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் அரசியலின் பூரண விளக்கத்துக்கு வரலாற்று ஆய்வு அவசியம் எனக் கூறுகின்றனர். வேறு சிலர் அரசறிவியல் ஆய்வுக்கு வரலாற்றின் தேவையை ஏற்றுக் கொண்ட போதிலும் அது எவ்வகையிலும் தவிர்க்க முடியாதென்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

அரசியல் இல்லாத வரலாற்றில் பயனில்லை. வரலாறு இல்லாத அரசியலில் அடிப்படையில்லை என்ற கருத்தினை பேராசிரியர் சீலி கூறுகின்றார்.

பிரிமென் (FREEMAN) என்பவர் வரலாற்றை கடந்த கால அரசியல் எனவும், அரசியலை நிகழ்கால வரலாறு எனவும் கூறுகிறார். இக் கூற்று வேறுபாட்டுக்குரியது என்றாலும் அரசியலுக்கும், வரலாற்றுக்கும் இடையிலான நெருக்கத்தை இது வெளிப்படுத்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீக்கொக் என்பவர் வரலாறு இன்றி அரசறிவியல் சாத்தியமற்றது. அரசறிவியல் இன்றி வரலாறு தனது சிறப்பை இழந்து விடுகிறது எனக் கூறிப்பிட்டார்.

வரலாறு பல பாடங்களைக் கற்பிக்கிறது. இப் பாடங்கள் அரசியல் வாதிகளுக்கு மிகுந்த பயனுள்ளவைகளாகும். மனிதர்கள் தங்களது எண்ணங்களை காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்கின்றனர். இந்த எண்ணங்களில் ஏற்படும் மாற்றம் அரசியல் நிறுவனங்களிலும் மாற்றம் ஏற்படுகிறது. இதனால் அரசாங்க மாற்றமோ அல்லது அரசியல் முறைமையில் மாற்றமோ நிகழலாம். இவற்றையெல்லாம் புரிந்து கொள்ள அரசியல் தலைவர்கள் வரலாற்றைக் கற்க வேண்டும்.

அரசியலுக்கும் வரலாற்றுக்கும் மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்ட போதிலும் இரண்டுக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளன. அரசியல் ஆய்வாளர்கள் வரலாறு முழுவதிலும் கவனம் செலுத்த அவசியம் இல்லை. அதிலுள்ள அரசியல் வரலாற்றை மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். வரலாறு கால வரிசைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆனால் அரசியல் விஞ்ஞானம் ஒப்பீட்டு முறைமைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

### ❖ அரசியல் விஞ்ஞானமும் பொருளாதாரமும். (POLITICAL SCIENCE & ECONOMICS)

ஆரம்ப காலங்களில் அரசியலும், பொருளியலும் ஒன்றாகவே கருதப்பட்டன. 14ம் நூற்றாண்டில் பொருளியல் "அரசியல் பொருளாதாரம்" என்றே அழைக்கப்பட்டது. எனினும் பிற்காலங்களில் பொருளியல் தனியான துறையாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நவீன காலத்தில் அரசியல் கொள்கைகள் பொருளாதாரம் சார்ந்தவையாக அமைந்துள்ளன. இதனால் அவை வலுவான அரசியல் கொள்கைகளாகத் திகழ்கின்றன. எடுத்துக்காட்டாக சோசலிசம், ஜனநாயக சோசலிசம், கம்யூனிசம், முதலாளித்துவம் ஆகியவை வலுவான அரசியல் கொள்கைகளாகத் திகழ்கின்றன. இவையனைத்தும் பொருளாதாதரம் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன.

சர்வதேச அரசியலில் முதலாளித்துவத்திற்கும், பொதுவுடமைக்குமிடையில் போராட்டம் நடைபெறுகிறது. அதிகாரத்திற்கான இந்த போராட்டமே சர்வதேச அரசியலில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தகைய அம்சங்கள் அரசியலுக்கும், பொருளாதாரத்திற்குமிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இன்றைய உலகில் பொதுநல அரசுக் கொள்கை நடைமுறையில் உள்ளதால் அரசு பல பொருளாதார செயல்முறைகளை மேற்கொள்வதோடு பொருளாதாரத் திட்டமிடலையும் அவசியமாக்கியுள்ளது. இன்று பொருளாதாரக் கொள்கையின் முக்கியத்துவத்தை எந்த அரசியல் வாதியும் குறைவாக மதிப்பிட முடியாது. ஆதலால் அரசியல்வாதிகள் பொருளாதார நிபுணர்களின் உதவியை நாட வேண்டியுள்ளது. இதே போல பொருளாதாரத் திட்டங்களை அமுல் செய்ய பொருளாதார நிபுணர்கள் அரசியல்வாதிகளின் உதவியை நாடவேண்டியுள்ளது.

## ❖ அரசியல் விஞ்ஞானமும் சமூகவியலும். (POLITICAL SCIENCE & SOCIOLOGY)

சமூகவியல் என்பது சமுதாயம் பற்றிய கற்கை நெறியாகும். அது விரிவான பரப்புடையது. குடும்பம், இனம், சாதி, சமயம் போன்ற பல்வேறு அம்சங்களைப் பற்றி சமூகவியலில் கற்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் அரசுக்கு முந்தியது. சமூகம் தோன்றிய பின்னரே அரசு தோன்றியது. மனிதன் ஒரு சமூக மிருகம் ஆனதன் பின்னரே அவன் ஒரு அரசியல் மிருகமானான் எனக் கூறபடுகிறது.

காலமாற்றத்திற்கு ஏற்ப சமூகம் மாறுபாடடைவது தவிர்க்க முடியாதது. சில சமயங்களில் சில சீர்திருத்தவாதிகள் சமூகமாற்றத்திற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்ற போது சில பழைமையான நிறுவனங்கள் வழக்காறுகள் அதற்கு தடையாக இருக்கின்றன. ஆனால் இத்தடைகளை சமூக சீர்திருத்தவாதிகள் அகற்ற விரும்புகின்றனர். இந்த நோக்கத்தை நிறைவேற்ற அரசின் உதவியை நாட வேண்டியுள்ளது. இந்த வகையில் அரசியல் ஆய்வாளர்களும் சமூகவியலாளர்களும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

சமூகவியல் , சமூகத்தின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி உள்ளதால் அது விரிவானது. ஆனால் அரசியல் அரசைப்பற்றி மட்டுமே கூறுகிறது. சமூகவியலின் பரப்பு அரசியலின் பரப்பை விட விரிவானது. அரசுக்கு முந்திய நிறுவனமான சமூகம் பற்றி சமூகவியல் ஆராய்கிறது. இன்று அரசியலின் பாடப்பரப்பில் ஓர் அங்கமாக சமூகவியல் இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

## ❖ அரசியல் விஞ்ஞானமும் உளவியலும்.

அரசறிவியலோடு மிகநெருக்கமான இன்னொரு பாடம் உளவியலாகும். அரசறிவியல் சடப்பொருள்களைப்பற்றி ஆராய்கின்ற ஒன்றல்ல. மாறாக மனிதனின் அரசியல் நடத்தை பற்றி ஆராய்கின்ற ஒன்றாகும். இதனாலே அரசியலுக்கும், உளவியலுக்கும் இடையே மிக நெருக்கமான உறவு காணப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு உள்ளத்தையும் அந்த உள்ளத்திலிருந்து உருவாகும் எண்ணத்தையும் கொண்டவன். அந்த எண்ணங்களும், எழுச்சிகளும் தான் அவன் அரசியல் நடத்தையை தீர்மானிப்பதில் பாதிப்புச் செலுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக ஆட்சியில் மக்களின் கருத்து முக்கியமானதாகும். அபிவிருத்தியடைந்த ஜனநாயக நாடுகளில் மக்களின் கருத்து நல்ல முறையில் உருவாக்கப்பட்டு நன்கு வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால் அபிவிருத்தியடைந்துவரும் ஜனநாயக நாடுகளில் மக்களின் கருத்து தேர்தல் காலங்களில் மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது. ஜனநாயகம் வளராத நாடுகளில் கூட உளவியல் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு அரசியல்வாதி வெற்றி பெற கூட்ட உளவியலை அறிந்தவனாக இருக்க வேண்டும். மக்களின் உளப்பாங்கை அறிந்து கொள்ள முடியாதவர்கள் அரசியலில் உயந்து நீடிக்க முடியாது. இன்றைய ஜனநாயக ஆட்சியில் பிரச்சாரம் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு கட்சியும் தனது கொள்கைகளையும், சாதனைகளையும், மக்களிடையே பரப்ப வேண்டும் அவ்வாறு பரப்புவதற்கு உளவியல் பற்றிய அடிப்படை அறிவு அவசியமாகிறது.

சில அரசுகளில் சில அரச நிறுவனங்கள் வெற்றிகரமாக செயற்படுகின்றன. ஆனால் அதே விதமான அரசியல் நிறுவனங்கள் வேறு சில அரசுககளில் தோல்வியடைகின்றன. இந்த நிலைக்கான காரணங்களை அறிவதற்கு அரசியல்வாதிகள் மக்களின் உளவியல்களைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு அரசியல் ஆய்வாளர் உளவியலில் இருந்து பல விடயங்களைப் பெறுகிறார். தற்கால அரசியல் ஆய்வாளர்கள் அரசியல் நடத்தை, மற்றும் அரசியல் கலாச்சாரம், அரசியல் மாற்றம், அரசியல் அபிவிருத்தி, போன்றவற்றை முக்கியமாக கருதுகின்றனர். இவர்களுக்கு உளவியல் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது. ஆனால் ஒரு உளவியல் ஆய்வாளருக்கு அரசறிவியல் குறைவான பயன்களையே கொடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ அரசியல் விஞ்ஞானமும், புவியியலும்.

புவியியல் என்பது பூமியின் பரப்பு, வடிவம், புறத்தன்மை, காலநிலை, மக்கள் தொகை போன்றன பற்றிய கற்றல் எனலாம். ஓர் அரசின் இயற்கை வளங்களைப் பற்றி புவியியல் ஆராய்கிறது. வெவ்வேறு இடங்களின் வெப்பநிலை, மழை அளவு என்பன பற்றியும் ஆராய்கிறது. ஒரு நாட்டின் புவியியல் தன்மைகள், அந்நாட்டின் வரலாறு, அரசியல் ஆகியவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஒரு குறிப்பிட்ட மக்களின் அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவதில் வெப்பநிலை முக்கிய பங்கு வகிக்கின்றது என்ற கருத்தினை சில அரசியல் எழுத்தாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். குளிர்பிரதேசங்களில் வாழக் கூடிய மக்கள் கடுமையான உழைப்பாளியாகவும், சுதந்திரத்தை விரும்புகின்றவர் களாகவும் திகழ்கின்றனர் என அவர்கள் கருதுகின்றனர். வெப்பப்பகுதிகளில் வாழுகின்ற மக்கள் உழைப்பதற்கு தயாரில்லாதவர்களாகவும், சுதந்திர வேட்கை அற்றவர்களாகவும், இருக்கின்றனர். எனவே அரசியல் நிறுவனங்களின் எழுச்சியில் வெப்பநிலை தனது தாக்கத்தை செலுத்துகிறது எனக் கூறப்படுகிறது. இவ்வாறு அரசறிவியலும், புவியியலும் நெருங்கிய உறவுகளைப் பெற்று வருகின்றன.

## ❖ அரசியல் விஞ்ஞானமும், ஒழுக்கவியலும்.

ஒரு சமுதாயதில் அமைதியான நல்ல வாழ்கை வாழ ஒழுக்கம் அவசியமானதாகும். பழைய காலத்து அரசியல் சிந்தனையாளர்கள் அரசின் ஒழுக்க பெறுமானங்களுக்கு முக்கியத்துவம் அளித்தனர். பிளேட்டோ, அரிஸ்டோட்டில், ஹெகல், ஆகியோர் ஒழுக்கத்திற்கு முக்கிய இடம் அளித்த சிந்தனையாளர்கள் ஆவர். ஒவ்வொரு அரசும் சில ஒழுக்க பெறுமானங்களை அடைவதை இலக்காக கொள்ள வேண்டும். அவ்வாறு அடைவதற்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகைகளை அரசு கண்டறிய வேண்டும். எனவே அரசறிவியலும், ஒழுக்கவியலும் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளது.

ஒழுக்கத்தை நிலைநாட்டுவது அரசின் கடமைகளில் ஒன்றாகும். ஆனால் சட்டத்தினூடாக மட்டுமே ஒழுக்கத்தை நிலைநாட்ட முடியாது. ஒழுக்க விதிகளை மீறியதற்காக எவரையும் அரசு தண்டிக்க இயலாது. அதே சமயத்தில் ஒழுக்க விதிகளை மோசமான அளவில் சிலர் மீறினால் அதனைப் பார்த்திருக்கவும் முடியாது. எனவே அரசு இரண்டிக்கும் இடைப்பட்ட ஒரு நிலையை மேற்கொள்ள வேண்டும். மக்கியாவல்லி அரசியலை ஒழுக்கவியலில் இருந்து முழுமையாக பிரித்தார். எனினும் அவரது கருத்தினை பலரும் விமர்சித்தனர்.

## ❖ அரசியல் விஞ்ஞானத்தை கற்பதற்கான பிரதான அணுகுமுறைகளை இனங்கண்டு விளக்குக.

■ **மெய்யியல் அணுகுமுறை:**

மெய்யியல் கருத்துக்களைப் பயன்படுத்தி அரசியல் நிறுவனங்களை ஆராயும் முறையே மெய்யியல் அணுகுமுறையாகும். இங்கு உண்மையிலே நடைமுறையில் காணப்படும் நிலைகளன்றி எவ்வாறு இருக்க வேண்டும் என்று கருதும் நிலைகளை மெய்யியல் மற்றும் ஒழுக்கவியல் கருத்துக்களைப் பயன்படுத்தி ஆராயப்படுகிறது.

.■ **வரலாற்று அணுகுமுறை :**

அரசியல் தோற்றப்பாடுகளை அவற்றின் வரலாற்று ஆதாரங்களின் ஊடாக, முறையாக ஆய்வு செய்வதே வரலாற்று அணுகுமுறையாகும். இம் முறையின் மூலம் அரசினதும், நிறுவனங்களினதும், தோற்றம், வளர்ச்சி என்பனவற்றை பரீசிலித்து அவற்றின் தன்மைகளையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளையும், புரிந்து கொண்டு அவற்றின் தற்கால நிலைகளையும், எதிர்கால போக்குகளையும் ஆய்வு செய்ய முயற்சிக்கப்படுகிறது. அரசியல் ஆய்வு செய்வதற்கான சிறந்த ஆய்வு கூடம் வரலாறு ஆகும்.

- **ஒப்பீட்டு அணுகுமுறை :**

அரசியல் முறைகளையும், நிறுவனங்களையும் ஒன்றுடன் ஒன்றை ஒப்பீட்டு ஆய்வு செய்யும் முறையே ஒப்பீட்டு அணுகுமுறையாகும். இம் முறையைப் பயன்படுத்தி அரசியல் முறைகளையும், நிறுவனங் களையும் ஆராய்ந்து அதன் மூலம் பெற்றுக் கொள்ளும் தகவல்களின் அடிப்படையில் ஒரு சிறப்புமிகு அரசியல் முறையை ஒழுங்கமைப்பதற்கு தேவையான கொள்கைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இந்த அணுகு முறையின் விளைவாக ஒப்பீட்டு அரசியல் என்ற ஒரு கற்கைநெறி அரசறிவியலில் வளர்ச்சியடைந்துள்ளது.

- **சமூகவியல் அணுகுமுறை :**

இது தற்கால அரசறிவியலாளர்கள் மத்தியில் அதிகம் பிரல்யம் அடைந்துள்ள ஒரு முறையாகும். அரசியலை அதன் சமூகச் சூழலில் வைத்து ஆராயும் முறையே சமூகவியல் முறையாகும். இம் முறையின் மூலம் அரசியல், சமூக, பொருளாதார அடிப்படைகளும், பல்வேறு அரசியல் நிறுவனங்களின் செயற்பாடுகள் ஊக்குவித்து ஒழுங்குபடுத்தும் சமூகக் காரணிகள் மற்றும் ஏனைய காரணிகளும் பரிசீலிக்கப்படுகின்றன. இவ்வணுகுமுறை அரசியல் சமூகவியல் என்ற ஒரு புதிய கற்கை நெறியையும் அபிவிருத்தி செய்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **புள்ளி விபரவியல் அணுகுமுறை :**

வாக்களிப்பு நடத்தை பற்றிய ஆய்வு, பொதுஜன அபிப்பிராயத்தை அளவிடல், சட்டத்துறை உறுப்பினர்களின் நடத்தையை ஆராய்தல் என்ற விடயங்கள் தொடர்பாக இம்முறை பிரபல்யமாகப் பயன் படுத்தப்படுகின்றது.

- **உளவியல் அணுகுமுறை :**

அரசறிவியலில் மனித நடத்தை, உளவியல், முதலானவற்றின் தாக்கம், பெறுமதி என்பனவைபற்றி இவ்வணுகு முறை மூலம் ஆய்வு செய்யப்படுகிறது. உளவியல் கல்வியுடன் மிக நெருக்கம் கொண்டுள்ள அரசறிவியல் பற்றி ஆய்வு செய்வதில் இவ்வணுகுமுறை முக்கியம் பெறுகிறது.

- **நடத்தை வாத அணுகுமுறை :**

இது புதியதும், முக்கியமானதுமான ஓர் அணுகுமுறையாகும். அரசியலில் ஈடுபடும் மனிதர்களினதும், மனிதக் குழுக்களினதும் அரசியல் நடத்தையை ஆராய்ந்து அதனூடாக அரசியலை விளங்கிக் கொள்ளும் முறையே நடத்தை வாத அனுகுமுறை என்று அழைக்கப்படுகின்றது. இங்கு அரசியல் நிறுவனங்களின் அமைப்புக்களின் நடைமுறை நிலைகளிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. இம் முறையின் பிரதான கருப்பொருள் அரசியல் மனிதனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அரசறிவியலைக் கற்பதற்கான மரபு ரீதியான அணுகு முறையினைக் கூறி அதனுடைய பண்புகள் குறைபாடுகளை தெளிவாக விளக்குக.**

மரபுரீதியான ஒப்பீட்டு ஆய்வானது விபரண ரீதீயாக அமைந்ததே தவிர பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண்பதற்காகவோ அல்லது விளக்கங்கள் தருவதற்காகவோ ஆய்வு நோக்கம் மிக்கதாகவோ அமையவில்லை. மேலும் அது கொள்கை ரீதியிலான அபிவிருத்தியை விரும்பியதாகவோ, எடுகோள்களை பரீட்சிப்பதற்காகவோ, புள்ளி விபரங்களைக் கொடுப்பதற் காகவோ இருக்கவில்லை. அது அரசாங்க அமைப்புக்களுடன் மட்டும் தான் இருந்தது.

இவ்வணுகு முறையின் மூலகர்த்தாக்களாக பிளேட்டோ, அரிஸ்டோட்டில் முக்கியமானவர்களாவர். அதே வேளை இவ்வணுகு முறையை மக்கியாவல்லி, மொன்டஸ்கியு, ஜே.எஸ்.மில், ஜீன்போடின், கொப்ஸ், லொக் போன்ற அறிஞர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

மரபுரீதியான அணுகுமுறை விருப்பு வெறுப்புக்களுக்கு உட்பட்டது. இந்த அணுகுமுறை யாப்புக்கள் பற்றியும், அரசின் நிறுவனங்கள் பற்றியும் அவற்றில் ஒழுங்கமைப்புக்கள், அவற்றின் செயற்பாடுகள், கடமை, அதிகாரம் போன்றன பற்றி ஆராய்கின்றது. இது மாத்திரமன்றி குறுகியதாகவும், பரப்புக்குறைந்ததாகவும், நிலையானதாகவும், ஓரினத்தன்மையானதாகவும் காணப்படுகின்றது.

■ **மரபு ரீதியான அணுகுமுறையின் பண்புகள் :**

01. மரபுசார் அணுகுமுறையில் அரசு, அரசும் சமூகமும், இறைமை, அரசாங்கம் போன்ற பேரின விடயங்களே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

02. இவ்வணுகுமுறை அரசின் தோற்றம், தன்மை, கோட்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றனவற்றை கருப்பொருள் சார்ந்த அடிப்படையில் ஆராய்தல்.

03. இவ்வணுகுமுறை தரவிலிருந்து உட்கிடையாக முடிவு பெறப்படுகின்ற விடயங்களுக்கே கூடுதலான முக்கியத்துவம் அளிக்கின்றது.

■ குறைபாடுகள் :

01. சோதனைக்கு உட்படுத்தி பொய்ப்பிக்க முடியாது.

02. கோட்பாட்டுக்கும், நடைமுறைக்கும் இடையில் தொடர்பு காணப்படாமை.

03. நம்பகத் தன்மையை வளர்க்க முடியாமை..

04. துறையிடை அணுகுமுறைக்கு இடமளிக்காமை

05. ஓரினத் தன்மையாகக் காணப்பட்டமை.

06. விஞ்ஞானத் தன்மை கொண்டதாக இல்லை.

07. விபரண ரீதீயாகவும், வரலாற்று ரீதியாகவும், காணப்பட்டமை.

மரபு ரீதியான அணுகுமுறைக்குள் தத்துவார்த்த அணுகுமுறை, வரலாற்று அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை, நிறுவன அணுகுமுறை, சட்ட அணுகுமுறை என்பன உள்ளடக்கப்படுகின்றது.

**❖ அரசியல் விஞ்ஞானத்தை கற்பதற்கான அணுகுமுறைறைகளில் ஒப்பீட்டு அணுகுமுறையைக் குறிப்பிட்டு அவற்றின் நன்மை, தீமைகளைத் தெளிவுபடுத்துக.**

ஒப்பீட்டு அணுகுமுறையை முதன்முதலில் பயன்படுத்தியவர் அரிஸ்டோட்டில் ஆவார். இவர் ஏறத்தாள 158 அரசியலமைப்புக்கள் பற்றிய ஒப்பீட்டினை ஆய்வு செய்தார். அத்தகைய ஒப்பீட்டின் அடிப்படையில் தமது கருத்துக்களை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் முறைமைகளையும், நிறுவனங்களையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பீட்டு ஆய்வு செய்யும் முறையே ஒப்பீட்டு அணுகுமுறையாகும். இம் முறையைப் பயன்படுத்தி அரசியல் முறைமைகளையும், நிறுவனங்களையும் ஆராய்ந்து அதன் மூலம் பெற்றுக் கொள்ளும் தகவல்களின் அடிப்படையில் ஒரு சிறப்புமிகு அரசியல் முறைமையை ஒழுங்கமைப்பதற்கு தேவையான கொள்கைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

மொண்டெஸ்கியு, பிறைஸ், மெயின் போன்றவர்கள் இம் முறையைப் பயன்படுத்தியுள்ளனர். அண்மைக்காலங்களில் அல்மன்ட், மக்ஸ்வெபர், டேவிட் அப்ரட் போன்றவர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

■ **நன்மைகள் :**

01. ஒப்பீட்டு முறையில் ஓர் அரசியல் ஆய்வாளர் பல்வேறு அரசியல் நிறுவனங்களைப் பற்றி ஆய்வு செய்ய முடிகிறது.

02. ஒப்பீட்டு அரசியல் என்கின்ற ஒரு கற்கைநெறி அரசறிவியலில் வளர்ச்சியடைந்துள்ளது.

03. இரண்டு அரசியல் நிறுவனங்களை ஒப்பீடு செய்கின்ற போது அவற்றின் வளர்ச்சி, வீழ்ச்சி, என்பனவற்றை இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

04. பல்வேறு முறைமைகள் ஒப்பிடப்படுவதால் பெறப்படும் முடிவு அதிகளவு உறுதித்தன்மை வாய்ந்ததாக இருப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

05. பல்வேறு அரசியல் முறை அமைவுகள், நிறுவனங்கள், பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொளள்லாம்.

06. சிறப்புமிகு அரசியல் முறைமையை ஒழுங்கமைப்பதற்கான கொள்கைகளைக் கண்டுபிடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ **தீமைகள் :**

01. இம்முறை கடந்த காலத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

02. இம்முறையைப் பயன்படுத்தும் ஆராய்ச்சியாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் இருக்க வேண்டும்.

03. ஆராய்ச்சியாளர்கள் நடுநிலை வகிப்பவர்களாகவும் திகழ்தல் வேண்டும்.

04. பிழையான அவதானிப்பு ஆய்வு முழுவதையும் பாழ்படுத்தி விடும்.

❖ **அரசியலைக் கற்பதற்கான பின்வரும் பிரதான அணுகுமுறைகளின் இயல்புகள், நன்மை, தீமை போன்றவற்றை தெளிவாக அடையாளப்படுத்துக.**

**01. மெய்யியல் அணுகுமுறை :**

இவ்வணுகு முறையில் அரசியல் தத்துவங்களை விளக்குவதன் மூலம் அரசறிவியலின் உட்கிடக்கைகளை விளக்க முற்படுகிறது.

**இவ்வணுகுமுறையின் இயல்புகள் :**

01. முன்வகுக்கப்பட்ட கோட்பாடுகளினதும் கருதுகோள்களிலும் தங்கியுள்ளது.

02. அரசியலின் உண்மை நிலையை பற்றி எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை ஆராய்கிறது.

03. தத்துவ கருத்துக்களின் அடிப்படையில் அரசியல் நிறுவனங்களின் தொழில்பாட்டை மதிப்பிட முயல்கிறது.

04. மிகவும் பழமைவாய்ந்த முறையாக காணப்படல்

05. காரணங்களிலிருந்து விளைவுகளைக் கண்டறிகிறது.

06. தத்துவங்களைக் கொண்டு மனிதனையும், அரசையும் ஆய்வு செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ **நன்மைகள் :**

01. நன்மையிலிருந்து தீமையை வேறுபடுத்திக் காட்ட உதவுகிறது.

02. கோட்பாட்டினை மதிப்பீடு செய்ய உதவுகிறது.

03. தத்துவ முறையில் சில பெறுமானங்கள் உள்ளன. இந்தப் பெறுமானங்கள் ஒரு அரசியல் நிறுவனங்களை வளர்ப்பதற்கு உதவி செய்கின்றன.

04. இம்முறை ஒரு நல்ல முறை என பாராட்டுவதுடன் பரிந்துரைக்கவும் படுகிறது.

05. தத்துவமுறை அரசியலைக் கற்பதற்கு ஏற்றதாக கருதப்படுகின்றது.

■ **தீமைகள் :**

01. தத்துவ முறையில் தத்துவ ஞானி பகுத்தறிவை பயன்படுத்துவதில்லை.

02. இம் முறையில் சில அடிப்படையான உண்மைகளிலிருந்து பொது விதிகளை வடிவமைக்க முடியாது.

03. தத்துவத்தை எளிதாக புரிந்து கொள்ள முடியாது. அதேபோல் தத்துவக் கருத்துக்களை எளிதாக நடைமுறைப்படுத்தவும் முடியாது.

04. விஞ்ஞான யுகதில் தத்துவ முறை பொருத்தமற்றது.

■ **இவ்வணுகுமுறையைபயன்படுத்தியவர்கள் :**

பிளேட்டோ, மூர், பேகன், ஹரிங்டன், கான்ட், கெகல், ரூசோ, சீட்ஜ்விக்.

## ❖ வரலாற்று அணுகுமுறை

வரலாற்றை ஆராய்வதன் மூலம் அரசியல் முறைகளை விளக்குக. முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை இவ் அணுகுமுறை சிறப்பாக குறிப்பிடுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ் அணுகுறையின் இயல்புகள் :**

01. தாபனங்களினதும், எண்ணக்கருக்களினதும் தோற்றம், மற்றும், வளர்ச்சியினூடாக அரசியலைக் கற்க தூண்டுகிறது.

02. வரலாற்று ரீதியாக அரசின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் அறிந்து கொள்ள தூண்டுகிறது.

03. ஓர் ஆராய்ச்சியாளருக்கு கடந்த காலம் பற்றிய அறிவை ஏற்படுத்துகிறது.

**நன்மைகள் :**

01. அரசியல் நிறுவனங்களின் பரிணாம வளர்ச்சியை படம் பிடித்துக் காட்ட உதவுதல்

02. கடந்த காலத்தைப் புரிந்து கொள்ளவும், நிகழ்காலத்தை மதிப்பீடு செய்யவும், எதிர்காலத்தை அனுமானம் செய்யவும் உதவுகிறது.

03. சிந்தனையாளர்கள் இம் முறைக்கு முக்கியத்துவமளித்தனர்.

**தீமைகள் :**

01. எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அது தெளிவாக எதனையும் சொல்லவில்லை.

02. வரலாற்று அணுகுமுறையில் பெறுமானத்திற்கு இடமில்லை.

03. வெவ்வேறு அரசியல் நிறுவனங்களின் குறைநிறைகளை வரலாறு தெளிவாக படம் பிடித்துக் காட்டுவதில்லை.

04. மிகவிரைவாக மாறிவரும் சமுதாயத்திற்கு இம்முறை ஏற்றதல்ல.

05. நடைமுறை சூழ்நிலைகளின் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ள வில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இம்முறையைப் பயன்படுத்தியவர்கள் :**

மக்கியாவல்லி, கெகல், லொக், மில், டனிங், குக், லஸ்கி, சிலி, சுட்லின், அகஸ்டைன்.

### ❖ சமூகவியல் அணுகுமுறை

சமூகநிறுவனங்களையும்,தனிமனிதர்களையும், சமூகக்குழுக்களையும் முதன்மைப்படுத்தி ஆய்வு செய்யும் முறையே சமூகவியல் அணுகு முறையாகும்.

இவ்வணுகுமுறை அரசியல் சமூகமயமாக்கல், அரசியல் கலாச்சாரம், அரசியல் அபிவிருத்தி என்பனவற்றை பிரதானமாக ஆய்வு செய்கிறது. இவ்வணுகு முறை தொடர்பாக மைக்ஐவர், டேவிட் ஈஸ்டன், அல்மன்ட், டேவிட் ரூமன் போன்றவர்கள் முக்கியமானவர்களாவர்.

**நன்மைகள் :**

01. சமூகத்தின் அடிப்படையில் அரசறிவியலை விளக்கிக் கொள்வதற்கு இவ்வணுகு முறை உதவுகிறது.
02. அரசியல் சமூகவியல் எனும் புதிய கற்கைத்துறை அரசறிவியலில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
03. மனிதனும், சமூகமும் சமூகக் குழுக்களும், சமூக நிறுவனங்களும் இம்முறை மூலம் முக்கியத்துவம் பெறும் நிலை ஏற்படுகின்றது.
04. சமூகம் சார்ந்த நாட்டின் அரசியல்கலாச்சாரம் கட்டியெழுப்பப் படுவதற்கு இம் முறை உதவுகிறது

**தீமைகள் :**

01. இவ்வணுகுமுறை சமூக அம்சங்களுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.
02. இவ்வணுகுமுறை அரசியலுடன் தொடர்பான பல விடயங்களைத் தவறி விடுகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. இவ்வணுகு முறை சில சந்தப்பங்களில் நாட்டிலுள்ள பெரும்பான்மை சமூகத்திற்கு சாதகமாக அமைந்து விடலாம்.

### ❖ புள்ளிவிபர அணுகுமுறை

புள்ளி விபரவியல் ரீதியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதனூடாக அரசறிவியல் பற்றிய தெளிவைப் பெறும் ஓர் முறையே புள்ளி விபரவியல் அணுகுமுறையாகும்.

குறிப்பாக தேர்தல் நடத்தை பற்றிய ஆய்வுகளுக்கும் அரசியல் கட்சிகள் பெறுகின்ற வாக்குவீத ஆய்வுகளுக்கும் பொதுசன அபிப்பிராய கணிப்பீடுகளுக்கும் சிறந்த ஒரு அணுகுமுறையாக காணப்படுகின்றது. இவ்வணுகுமுறையை முக்கியப்படுத்தியவர்களுள் காலுப், சார்ல்ஸ் மெரியம், ஹரோல்ட் கொஸ்நெல் போன்ற அமெரிக்க அறிஞர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

**நன்மைகள் :**

01. ஓரளவு உறுதியான எதிர்வு கூறலைப் பெறமுடியும்.

02. இம் முறை மூலம் அரசறிவியல் பற்றிய தெளிவான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. தேர்தல் கணிப்பீட்டுக்கு மிகவும் உகந்த முறை.

04. ஒரு ஜனநாயக ரீதியான அணுகுமுறையாக உள்ளது.

05. பல்வேறு ரீதியான அணுகுமுறைகளை எண் ரீதியாக மாற்றிக் கொடுப்பதற்கு உதவுகிறது.

**தீமைகள் :**

01. அரசறிவியல் சம்பந்தப்பட்ட சகல விடயங்களுக்கும் புள்ளி விபரவியல் ரீதியான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாது.

02. தரவுகள் பிழையாக அமையுமாக இருந்தால் முடிவும் பிழையாக வருவதற்கு வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதனை முறை :

அரசறிவியவிலும் பரிசோதனைகள் செய்ய முடியும் எனச் சில வல்லுனர்கள் கருதுகின்றனர். அரசியல் அறிவியலாளர்களுக்குஉலகம் முழுவதும் பரிசோதனைச் சாலை என அவர்கள் கருதுகின்றனர். இயற்றப்படும் ஒவ்வொரு சட்டமும் ஒரு பரிசோதனைக்குரிய விஷயம் என்கின்றனர். பல்வேறு அரசுகளில் நடக்கின்ற போர் ஒவ்வொன்றும் இரசாயனவியல் பிரிசோதனைச் சாலையில் பயன்படுத்தப்படுகின்ற கந்தகம் அல்லது காரீயம் (Carbon) போன்றவை எனக் கருதுகின்றனர். எங்கெல்லாம் ஒரு புதிய கொள்கை அறிமுகமாகிறதோ அதை ஒரு பரிசோதனை எனலாம். ஓர் ஆராய்ச்சியாளர் அந்த கொள்கையினால் ஏற்படும் விளைவுகளையும், அதன் வெற்றி தோல்விகளுக்கான காரணங்களையும் கண்டறிய வேண்டும்.

நன்மைகள் :

01. விஞ்ஞான பூர்வமான கற்றலுக்கு உதவுகிறது

02. சில அரசியல் நிறுவனங்களின் செயல்திறனை அளவிடுவதற்கு இலகுவான முறையாக உள்ளது.

03. விஞ்ஞானிகள் பரிசோதனை முறையிலான கற்றலுக்கு உதவும் பல கருவிகளை உருவாக்கியுள்ளனர்.

04. இவ்வணுகு முறை ஆராய்ச்சியாளருக்கு பெரிதும் உதவுகிறது.

தீமைகள் :

01. அரசியல் விஞ்ஞானத்தில் பரிசோதனை நடத்துவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது.

02. ஜனநாயக ஆட்சியில் நடத்தப்படும் சில பரிசோதனைகள் அரசியல் தலைவர்களின் வீழ்ச்சியில் முடியலாம்.

03. சரியான முறையில் பரிசோதனையைச் செய்வது கடினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அரசியலைக் கற்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒப்பீட்டு அணுகு முறைக்கும், மெய்யியல் அணுகு முறைக்கு மிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.**

| ஒப்பீட்டு அணுகுமுறை | மெய்யியல் அணுகுமுறை |
|---|---|
| 01. பல அரசியல் முறைகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பெற்றுக் கொள்ளும் முடிவுகளின்படி ஒரு சிறந்த அரசியல் முறைமையை உருவாக்குவதற்கு தேவை இறுதி முடிவினைப் பெறுவதன் அடிப்படையில் ஒப்பீட்டு முறை ஒழுங்கமைந்துள்ளது. | 01. கருதுகோள்களின் அடிப்படையில் ஒழுங்கமைந்துள்ளன. இதன்படி அரசியலின் உண்மை நிலையையன்றி எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை ஆராய்கிறது. |
| 02. நடைமுறை உலகில் உண்மையாகக் காணப்படும் நிலைகளை ஆராய்கிறது. | 02. கற்பனையில் பூத்த ஒன்றை நடைமுறை உலகிற்குப் பொருத்துவதற்கு முயல்கிறது. |
| 03. இறந்தகால, நிகழ்கால அரசியல் முறைமைகளை ஒப்பீட்டு ஆராய்கிறது. | 03. முன்வகுக்கப்பட்ட கோட்பாடுகளினதும் கருதுகோள்களிலும் தங்கியுள்ளது |
| 04. இவ்வணுகுமுறை தரவுகளை சேகரித்தல், தெரிவு செய்தல்,ஒப்பிடுதல், நீக்குதல், ஆய்வு செய்தல் போன்ற செய்முறைகளினூடாக முடிவுகளைத் தீர்மானிக்கிறது. | 04.. இவ்வணுகுமுறை தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதனையும் அரசையும் பற்றி ஆய்வு செய்கிறது. |
| | 05. இம் முறையின் பிரதான பண்பு காரண காரியத் தொடர்புகளின் அடிப்படையில் இறுதி முடிவு ஒன்றிக்கு வராது முதலில் மேற்கொண்ட இறுதி முடிவினை உறுதிப்படுத்துவதற்கு காரண காரியங்களைப் பயன்படுத்துவதாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **நடத்தைவாத அணுகுமுறை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது? என்பதை நுட்பமாக தெளிவுபடுத்துக?**

நடத்தைவாத அணுகுமுறை புதியதும் முக்கியமானதுமான ஓர் அணுகுமுறையாகும். 2ம் உலகப் போருக்கு பின்னர் இம்முறை அதிகம் முக்கியத்துவம் பெற்றது. சில அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இம்முறைக்கு சிறப்பை தேடித்தந்துள்ளனர். இம்முறை மனிதனின் அரசியல் நடத்தையை வலியுறுத்துகிறது.

இம்முறையை வலியுறுத்துவோரிடையே எது அரசியல் நடத்தை என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. சிலரது கருத்துப்படி அரசியல் சூழ்நிலைகள் தனிநபர்களின் உளப்பாங்கே நடத்தை என்கின்றனர். வாக்காளர்களின் நடத்தையே அரசியல் நடத்தை என சிலர் கருதுகின்றனர். மனிதனின் அரசியல் நடத்தை அவனது நோக்கங்கள், உணர்வுகள், நம்பிக்கைகள், செயல்கள்,மனப்பான்மை போன்றவற்றின்வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது எனக் கருதுகின்றனர் நடத்தைவாதம் இத்தகைய விடயங்கள் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட வாதமாகும்.

அரசியலில் ஈடுபடும் மனிதர்களினதும், மனித குழுக்களினதும் அரசியல் நடத்தையை ஆராய்ந்து அதனூடாக அரசியலை விளங்கிக் கொள்ளும் முறையே நடத்தை வாத அணுகுமுறையாகும். இம் முறை அரசியல் நிறுவனங்களில் கட்டமைப்பேயன்றி அவற்றின் நடைமுறைப் பகுதியிலேயே கவனம் செலுத்துகின்றது. இதனால் இங்கு மனிதனே அரசியல் ஆய்வில் மையப் பொருளாக விளங்குகின்றான்.

சாள்ஸ் E மெரியம், லாஸ்வெல், கிரகம்வொலாஸ், பென்ளி, கிர்க், டேவிட் ஈஸ்டன், டேவிட் அப்ரர், GA அல்மன்ட் போன்றவர்கள் நடத்தைவாத அணுகுமுறையில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ **நடத்தைவாத அணுகுமுறையின் பண்புகள் :**

01. ஒரு அரசியல் சமூகத்தில் இடம்பெறும் மாணவப் போராட்டங்கள், வகுப்பு வாத போராட்டங்கள், தேர்தல் நடத்தை, அரசியல் வன்முறை போன்ற சிற்றின விடயங்களே இவ்வணுகுமுறையில் ஆய்வு பொருளாகக் கொள்ளப்படுகிறது.

02 நடத்தைவாதம் தத்துவார்த்த அணுகுமுறைக்குப் பதிலாக விஞ்ஞானம் சார்ந்த அல்லது செயல்முறை சார்ந்த அணுகுமுறைக்கு முக்கியத்துவம் வழங்கியது.

நடத்தை வாதிகள் தமது ஆய்வில் பேட்டி முறை, வினாக்கொத்து முறை, ஏடுகளின் ஆய்வு, அட்டவணை தயாரிப்பு போன்ற விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

03 நடத்தைவாதம் பிற சமூக விஞ்ஞானங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக : அரசறிவியல், சமூகவியல், மானிடவியல், பொருளியல்

04 அனுபவரீதியான தரவுகளையும், தகவல்களையும் கொண்டு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முடிவு நடத்தைவாத அணுகுமுறை மூலம் பெறப்படுகின்றது.

05 நம்பகத் தன்மை கொண்ட எதிர்வு கூறலை தரக் கூடிய தன்மையைக் கொண்டிருத்தல்.

06 அரச ஸ்தாபனங்கள் தொடர்புபடுகின்ற மனித நடத்தையை ஆராய்கின்ற ஒரு துறையாக இருத்தல்.

■ **நன்மைகள் :**

01. இவ்வணுகு முறையினால் அரசறிவியல் விஞ்ஞானமாக மாற்றடைந்தமை.

02 இவ்வணுகு முறையின் மூலம் அரசறிவியலின் பாடப்பரப்பு விரிவாக்கம் அடைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 இவ்வணுகு முறை மூலம் அரசறிவியல் என்பது வரலாறு கற்கின்ற பாடமாக இருந்த நிலை மாறி தற்போது மனிதனோடு சம்பந்தப்பட்ட நாளாந்த பிரச்சனையை ஆராய்கின்ற ஒரு துறையாகமாறியுள்ளது.

04 பிரச்சினைகளை தீர்க்கும் கற்கை நெறியாக மாற்றமடைவதற்கு காரணம் நடத்தைவாதம் ஆகும்.

05 இவ்வணுகுமுறையின் மூலம் மனிதர்களும், மனித குழுக்களும் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

06 மனிதர்களுடைய அரசியல் நடத்தைகளை ஆய்வு செய்வதனால் மனித உரிமைகளைப் பாதூகாப்பதற்கு இவ்வணுகுமுறை உதவுகிறது.

07 இவ்வணுகுமுறையால் மதிப்புமிக்க புள்ளி விபரங்களைச் சேகரிக்கலாம்.

■ **தீமைகள் :**

01 நடத்தைவாதம் விளைவைக் காட்டிலும் செயல்முறைகள் மூலமே அதிக ஆர்வம் காட்டப்படுகிறது. இதனால் அரசியல் கோட்பாட்டின் முக்கியத்துவம் குறைகின்றது.

02 நடத்தைவாதம் முடிவுகளைவிட தொழிநுட்ப உத்திகளில் கூடிய கவனம் செலுத்துகின்றது.

03 அரசியல் உலகம் அனைவரினதும் விருப்பங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் நடத்தைவாதம், அமெரிக்க நிறுவனங்களை நிலைநிறுத்துவதிலேயே கவனம் செலுத்துகிறது. ஆனால் மேற்குலக அரசியல், நடைமுறைக்கு சார்பாக அவை இயங்குவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

04 நிறுவனங்களை முற்று முழுதாக ஒதுக்கிவிட்டு தனி மனித நடத்தையிலே நடத்தைவாதம் கவனம் செலுத்துகிறது.

05 நடத்தைவாதிகள் தேங்கிய சூழ்நிலைகளை ஆய்வு செய்வதில் கவனம் செலுத்தியமையால் சச்சரவு, வன்முறை சார்ந்த புரட்சி, சூழ்நிலைகள், அரசியல் மாற்றங்கள் ஆகியவை பற்றிய ஆய்வினை மேற்கொள்ள தவறிவிட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06 நடத்தைவாதிகள் குறிப்பிடுவது போல் மனித நடத்தைகளை பொதுவாக வகுக்க முடியாது.

**மாணவர்களின் கவனத்திற்கு :**

அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பை சுருக்கமாக குறிப்பிட்டு அதன் ஆய்வுக்கான பிரதான அணுகுமுறைகளைப் பரிசீலிக்குக என்ற வினா வருகின்ற போது :

01. அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை முதலில் எழுதுதல் வேண்டும்.

02. ஆய்வுக்கான பிரதான அணுகுமுறைகளை குறிப்பிடல் வேண்டும்.

1. ஒப்பீட்டு அணுகுமுறை.
2. வரலாற்று அணுகுமுறை.
3. மெய்யியல் ரீதியான அணுகுமுறை
4. சமூகவியல் ரீதியான அணுகுமுறை
5. நடத்தை வாத அணுகுமுறை போன்ற அணுகுமுறைகளை சுருக்கமாக எழுதுதல் வேண்டும்.

# அரசு (STATE)

### ❖ அரசு என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

அரசு என்பது ஒரு அரசியல் ஒருங்ககம் (அமைப்பு). அரசு என்பதும் அரசாங்கம் என்பதும் ஒரே பெயருடைய சொற்களாக பயன்படுத்தப் படுகின்றன. ஆனால் அவை ஒன்றல்ல. அரசின் ஒரு அங்கமே அரசாங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு ரீதியாக அரசு என்பது பிரிக்கமுடியாத உணர்வு வெளிப்படாத கற்புலனாகாத இலட்சிய மாதிரியாகும்.

எல்லைப்படுத்தப்பட்ட ஒரு நிலப்பிரதேசத்திற்குள் ஏனைய சமூக நிறுவனங்களை மிஞ்சிய கட்டுப்பாடற்ற மக்களே அரசு எனப்படும்.

அரசு பற்றி ஒரு பொதுவான கருத்து இல்லாமல் இருந்தாலும் நிச்சயமான நிலப்பரப்பு எல்லைகளைக் கொண்ட ஒரு நிலப் பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மக்களே அரசாகும் என்று எளிமையான பொருள் கூறலாம்.

அரசறிவியலில், நிலப்பரப்பு, மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை போன்ற நான்கு பிரதான சிறப்பியல்புகளைக் கொண்ட சமூக நிறுவனமே அரசு என்றும் அழைக்கப்படுகின்றது.




நிலப்பரப்பு, மக்கள் தொகை, அதிகாரப்பலம் என்பனவற்றில் அரசு வேறுபடலாம். ஆனால் அரசறிவியலில் சகல அரசுகளும் சட்ட ரீதியாக ஒத்தவையாகும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி ஜனநாயக அரசு, சோசலிச அரசு, பாசிச அரசு என பல்வகைப்படும். தற்காலத்தில் அரச முறைமையில் தேசிய அரசு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனின் ஒரு தேசம் ஒரு அரசு என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அரசு பற்றி அரசியல் சிந்தனையாளர்கள் கூறுகின்ற வரைவிலக்கணத்தை தருக.**

01. பிளேட்டோ (குடியரசு என்ற நூல்) :

மனிதனை நல்வழிப்படுத்தும் ஒரு தாபனமாகவே அரசு குறிப்பிடப் படுகின்றது. அரசில் ஒருவர் வாழ்வதன் மூலமே நல்லவனாகின்றான். நல்ல மனிதன் ஒரு நல்ல அரசில் அன்றி. வேறு எங்கும் இருக்க முடியாது. அரசு தரும் சமூக வாழ்கையில் ஒரு மனிதன் பங்கு கொள்ளாத வரை அவன் பூரணத்துவம் அடைய முடியாது.

02. அரிஸ்டோட்டில் (அரசியல் நூல்) :

இயற்கையான உணர்வினாலும், நம்பிக்கையினாலும் கூடி வாழ்ந்த மக்கள் முதலில் குடும்பமானார்கள். இக் குடும்பமே பின்னர் கிராமமாகி சமுதாயமாக மாறி சமூகத்தினுடைய தேவைகளை நிறைவேற்று வதற்காக தோன்றிய ஒன்றே அரசு என்றார்.

இவ்வரசு சமூக நலனை முன்னிட்டு தோன்றியிருப்பதால் மக்கள் அரசுக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகின்றது.

சமூகம் நல்லவற்றை அறிந்து கொள்ள ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பையே இவர் அரசு எனக் கூறுகின்றார். . மனிதனுக்கென்று தனித்துவம் இருந்தபோதும் அரசு வேறாகவும் மனிதன் வேறாகவும் தொழிற்பட முடியாது. அரசின் உள்ளேயே மனிதன் வாழ வேண்டியவனாக இருக்கின்றான். மனிதனை உள்ளடக்கியே அரசு தொழிற்படுகின்றது.

அரசினுள் வாழ முடியாத மனிதன் மிருகமாகின்றான் என அரிஸ்டோட்டில் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 கெகல் என்பவர் மனிதனது அக உணர்வின் அடிப்படையில் எழுந்த நடவடிக்கையே அரசு என்றார்.

04. அகஸ்தின் அரசு என்பது சென்ம பாவத்தின் மறுவிளைவு என்றார்

05 மனிதனது சிறந்த படைப்பே அரசு என **மக்கியாவல்லி** கூறுகின்றார்.

06. நிச்சயிக்கப்பட்ட நிலப்பகுதியினுள் வாழுகின்ற மக்கள் சட்டத்துக்காக ஒழுங்கமைக்கப்படும் போது அது அரசு என அமெரிக்க ஜனாதிபதி **வூட்டோ வில்ஸன** கூறுகின்றார்.

07. குறிக்கப்பட்ட எல்லைக்குட்பட்ட சமுதாயதில் மிக உயர்ந்த அதிகாரத்துடன் கூடிய அரசாங்கம் ஒன்றினால் பிரகடனம் செய்யப்பட்ட சட்டதினூடாக சமூக ஒழுங்கை நிலைநாட்டும் சங்கமே அரசு எனக் மைக்கைவர் கூறுகின்றார்.

## ❖ அரசின் பணிகளைக் குறிப்பிடுக.

01. தனிமனிதனின் சொத்துக்களையும், உயிரையும் அரசு பாதூகாக்க வேண்டும்.
02. மனிதனுக்கு இருக்கும் அடிப்படை உரிமைகளை பாதூகாத்து மேம்படுத்த வேண்டும்.
03. அக, புறத் தாக்கங்களிலிருந்து மக்களை பாதூகாக்க வேண்டும்.
04. சமுதாய வாழ்க்கையை சீர் செய்வதற்கு பாதூகாப்பு அமைப்புக் களையும், சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.
05. இறைமையை நிலைநிறுத்தவும், சட்டத்திற்கு கீழ் படிதலை செயற்படுத்தவும் அரசு சட்டங்களை உருவாக்க வேண்டும்.
06. எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க பொதுச் சட்ட முறை ஒன்றின் கீழ் சமூக மோதல்களை தீர்த்து வைத்தல்.
07. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பாகுபாடற்ற முறையில் நீதித்துறை வாயிலாக நிதி வழங்கல் வேண்டும்.

09. மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

10. கல்வி நிலைகளை ஏற்படுத்தி கல்வி வசதியை மேம்படுத்த வேண்டும்.

11. சட்ட விரோதமான சமத்துவமின்மையை ஒழித்தல்.

12. அயல் நாடுகளுடன் தந்திரமான உறவுகளை வைத்தக் கொள்ள வேண்டும்.

13. யுத்தத்தை தடுக்கும் வகையில் அண்டை நாடுகளுடன் நல்ல உறவுகளை வளர்த்தல் வேண்டும்.

14. போதுமான போக்குவரத்து, ஊடக தொடர்பாடல்களை மக்களுக்கு அளித்து விடல் வேண்டும்.

## ❖ அரசு மக்களுக்கு செய்யக் கூடாதவையை குறிப்பிடுக.

01. தேவையில்லாமல் மக்களின் பழக்க வழக்கங்களிலும், மரபுகளிலும், வழக்காறுகளிலும் குறிக்கிடக் கூடாது. ஆனால் மக்களின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் பழக்கங்களை தடை செய்யலாம்.
உதாரணம் : சாதி ஒழிப்பு, இன வேறுபாடு, ஒதுக்கி வைத்தல்.

02. மக்களின் சமயத்தில் குறுக்கிடக் கூடாது.

03. பொது மக்களின் எண்ணங்களுக்கு தடை விதிக்கக் கூடாது.

04. மக்களின் குடும்பம், தனிவாழ்க்கை போன்றவற்றில் அரசு தலையிடக் கூடாது.

05. கலை, இலக்கியம், ஆகியவற்றின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கக் கூடாது.

06. உடல் வளர்ச்சிக்கு இடையூரானவற்றை அரசு செய்யக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ அரசின் நோக்கங்கள் யாவை?

அரசின் நோக்கங்களைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறுவிதமான கருத்துக்களைக் கூறுகின்றனர்.

01. ஜோன்லொக்கின் கருத்துப்படி அரசின் நோக்கம் மனித நலன் என்றார்.
02. வில்லோபி, கார்ணர் ஆகியோரின் கருத்துப்படி தனிமனித நலன் தேசத்தின் நலன்,மனித நாகரீக வளர்ச்சி ஆகியவையே அரசின் நோக்கங்கள் என்று கூறுகின்றனர்.
03. அடம்ஸ்மித் என்பவர் அரசின் நோக்கங்களை மூன்றாக வரையறுத்துக் கூறுகின்றார்.
    1. அயல்நாட்டு ஆக்கரமிப்புக்களிலிருந்து நாட்டைக் காத்து உள் அமைதியினையும் பாதூகாப்பினையும் நிறுவுதல்
    2. சமுதாயத்தின் பிற உறுப்பினர்களின் அநீதி, கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து சமுதாயத்தை பாதூகாப்பது.
    3. சமுதாய வாழ்க்கை வசதிகளை பெருக்கும் வகையில் பொது அமைப்புக்களை உருவாக்கி பொதுப் பணிகளை மேற்கொள்ளுதல்.
04. அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி நற்பண்புகளைப் பெற வழிசெய்து மேன்மையான மனித வாழ்க்கையை மக்களுக்கு அமைத்துக் கொடுப்பதே அரசின் நோக்கம் என்றார்.
05. தோமஸ் கொப்ஸ் இன் கருத்துப்படி சட்ட திட்ட அடக்கு முறையை செயற்படுத்தி அதன் மூலம் சமுதாயத்தைக் காப்பது அரசின் நோக்கம் என்றார்.
06. J.S.மில்லின் கருத்துப்படி அரசு நேரடியாக பணிகளை மேற்கொண்டு சமுதாயக் கூட்டு நலனைக் கூடுதலாக மென்மேலும் பரவலடையச் செய்வதே அரசின் நோக்கம் என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. ஜெரமி பெந்தம் கூறுகையில் மிகக் கூடுதலான மக்களுக்கு கூடுதலான மகிழ்ச்சியை ஈட்டித்தரும் நோக்குடன் அரசு செயற்பட வேண்டும் என்றார்.

## ❖ ஒரு குடிமகன் அரசுக்கு செய்ய வேண்டிய கடமைகளைக் குறிப்பிடுக.

**01. நேரான கடமைகள:**

அரசு மக்களிடம் எவற்றையெல்லாம் செய்ய வேண்டுமென எதிர்பார்கின்றதோ அவை அனைத்தையும் குடிமக்கள் செய்ய வேண்டும். இதைத் தான் நேரடியான கடமைகள் எனக் கூறுவர்.

01. அரசுக்கு வரி செலுத்துதல்
02. வயது வந்தோர் வாக்களித்தல்
03. அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள கடமைகளைச் செய்தல்
04. சமுதாயப் பணியில் ஈடுபடல்

**02. எதிர்மறையான கடமைகள் :**

மக்கள் செய்யக்கூடாதென அரசு தடை விதித்திருக்கும் கடமைகள் எதிர்மறைக் கடமைகளாகும்.

01. பிறரை ஏமாற்றுதல்
02. பிறரைக் கொலை செய்தல்
03. சட்டத்தினால் தடுக்கப்பட்டவற்றை செய்தல்.
04. உள்நாட்டில் அமைதி ஒழுங்கினை குலைத்தல்.

**03. முதன்மைக் கடமைகள்**

01. சட்டங்களுக்கு கீழ்படிதல்
02. தீய சட்டங்களை எதிர்த்தல்
03. அரசுக்கு முழு விசுவாசம் காட்டுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. அரச பணியில் முழுமனதுடன் பங்கேற்றல்

05. பொதுப் பணியில் ஈடுபடல்

06. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட அரசுடன் ஒத்துழைத்தல்

❖ **சமுதாயத்திற்கு உண்மையில் அரசு அவசியமானதா?**

மனிதரினதும் சமூகத்தினதும் நன்மைக்காக உணவு, உடை, உறைவிடம் போன்ற தேவைகளை பூர்த்தி செய்தல். தமது இருத்தலுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தல். சமூக முன்னேற்றத்திற்காக பொது பரிபாலனம் ஒன்றை தாபித்தல் என்ற தேவைகளை நிறைவு செய்வதற்கு போதிய கால அவகாசம் இன்மையாலும் தொழிநுட்ப திறன் இன்மையாலும் மனிதனால் இவற்றை தனியாக பூர்த்தி செய்து கொள்ள முடியாது. இத் தேவைகளை பொதுச் செயற்பாட்டினூடாக அனைவருக்கும் பொதுவாக நிறைவு செய்வதற்கு அரசின் அவசியம் இன்றியமையாதது.

மனித சமூகம் ஒரு தேசமாக ஒழுங்கமைவதற்கு அரசு அவசியமாகின்றது. ஏனெனில் பலரையும் ஒன்றினைக்கும் திறன் அரசுக்கிருத்தலாகும். அரசு இன்றி மனித சமுதாயம் ஒரு தேசியத்தை உருவாக்கிக் கொள்ள முடியாது.

அரசின் அவசியம் பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன.

01. அராஜகவாதிகளின் கருத்துப்படி மனிதனின் சுதந்திரமான இருத்தலை அரசு செயற்கையான முறையில் கட்டுப்படுத்துவதனால் அவ்வரசு முழுமையாக அவசியமற்றது.

02. மாக்சீயவாதிகள் விளக்கத்தின் படி வர்க்கங்கள் அற்ற சமூதாயத்தை உருவாக்கும் வரை அரசு அவசியம். அச் சமுதாயம் உருவாக்கப்பட்டதன் பின்னர் அரசு உதிர்ந்து விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. நவீன உலகமயமாதலின் கருத்துப்படி சமூகத்தை ஒழுங்குபடுத்தவும், மக்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வினைக் குறைக்கவும், பிணக்குகளைத் தீர்க்கவும் அரசு சமுதாயத்திற்கு அவசியமாகும்.

04. அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அரசு அவசியம் என்பதை இவர் வலியுறுத்துகிறார். அத்தோடு சமூகத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி அமைதியைப் பேணுவதற்கும் சட்டங்களை ஆக்கி அதனை மக்கள் பின்பற்றச் செய்வதன் மூலம் சமூக சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அரசு அவசியமாகிறது என்கிறார்.

## ❖ ஒரு குடிமகனுக்கும் அரசுக்குமுள்ள தொடர்புகளைத் தெளிவுபடுத்துக.

அரசின் செயற்பாட்டில் குடிமகன் கேந்திர ஸ்தானத்தை வகிக்கின்றான். மனிதர் தமது பொதுத் தேவைகளையும், நலன்களையும் பாதூகாத்துக் கொள்வதற்கும், நிறைவு செய்வதற்கும் அரசை தாபித்துக் கொண்டனர். அரசின் உறுப்புரிமை குடிமகனுக்கு மட்டுமே உரித்தாகும். அதன் உறுப்புரிமை வலுக்கட்டயமானதாகும். ஒரு குடிமகன் ஒரு சந்தப்பத்தில் ஒரு அரசில் மட்டுமே உறுப்பினனாவான்.

அரசியல் சமுதாயத்தில் குடிமக்களுக்கிடையிலும், மனித குழுக்களுக் கிடையிலும் எழும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் உயர் தீர்வாளன் அரசாகும். சட்டத்தையும், ஒழுங்கையும் தமக்காக நிலைநாட்ட வேண்டும் என குடிமக்கள் எதிர்பார்கின்றனர். அதற்காக அரசு குடிமக்கள் மீதும் மனிதக் குழுக்கள் மீதும் உயர் அதிகாரத்தைப் பிரயோகித்துச் செயற்படுகின்றது. இதனால் அரசு பிறப்பிக்கும் சட்டங்களுக்கு குடிமக்கள் கீழ்படிகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமக்களுக்கும் அரசுக்குமிடையிலான தொடர்பு பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன.

- மாக்சீயவாதிகளின் கருத்துப்படி சமூகத்தில் சொத்துடைய வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாத்து சொத்தில்லாத வர்க்கத்தினரை அடக்கியாளும் கருவியாக அரசு செயற்படுகிறது.
- தாராண்மைவாதிகளின் கருத்துப்படி அரசு முழுச் சமூகத்தினதும் நலன்களையும், தேவைகளையும் நிறைவு செய்கிறது. அரசு என்பது பொது நன்மைக்காக செயற்படும் நிறுவனமாகும்.
- குடிமக்கள் தமது தனிப்பட்ட செயற்பாடுகளை உச்சமாக பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சமூகச் சூழலை உருவாக்கிக் கொண்டு பேணி நடாத்துகின்றனர்.

இத்தகைய பல்வேறு வகையான தொடர்புகள் ஒரு குடிமகனுக்கும் அரசுக்குமிடையில் காணப்படலாம்.

### ❖ அரசுக்கும் சமூகத்திற்ககுமிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துக.

அரசு, சமூகம் ஆகிய இரண்டினையும் சிலர் ஒரே பொருளில் பயன்படுத்தினர் அரிஸ்டோட்டில் அரசு, சமூகம் ஆகியவற்றிக்கிடையே வேறுபாடு எதையும் காட்டவில்லை. ஆனால் பல வகையிலும் இரண்டும் வேறானவை.சமூதாயம் என்பது சமூக அமைப்பு, அரசு என்பது அரசியல் நிறுவனம். மனிதர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள கூட்டமாக வாழ்வதையே சமூகம் என்று லஸ்கி குறிப்பிட்டார்.

அரசும், சமூகமும் சமமானவை என்று எட்மன்ட் பேர்க் கூறுகின்றார். ஆனால் மைக்ஐவர் என்ற அரசியல் வல்லுனர் அரசிற்கும், சமூகத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைத் தெளிவாக்குகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு என்பது ஒரு குறிப்பிட்ட எல்லையில் வாழும் சமூகத்தின் மீது அதிகாரம் செலுத்துவதற்காக சமூகத்தின் விருப்பத்தினாலோ அல்லது விருப்பமின்றியோ உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். இவ்வரசு ஒரு சமூகத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பல சமூகங்களையும் கொண்டிருக்கலாம்.

உதாரணமாக இலங்கை, இந்திய அரசுகள் பல்வேறு சமூகங்களைக் கொண்ட அரசாக விளங்குகிறது.

**ஒற்றுமை :**

சமூகம் மனிதர்களால் ஆனது. இதே போல் அரசும் மனிதர்களால் ஆனது. சமூகமும் அரசும் பொது நலனை குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவை. அரசுக்கென சில பொதுவான இலட்சிய எல்லைகள் உள்ளன. அதே போன்று சமூகத்திற்கென சில இலட்சிய எல்லைகள் உள்ளன. அரசின் சமூக மேம்பாட்டிக்கு ஒற்றுமை அவசியமாகின்றது. அரசுக்கும், சமுதாயத்திற்கும் ஒரே விதமான அறம் சார்ந்த இலட்சிய நோக்கங்கள் உள்ளன. எனவே தான் அரசும், சமூகமும் ஒன்றானவை எனும் கருத்து வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

**வேற்றுமை :**

01. அரசு செயற்கையானது ஆனால் அது அத்தியவசியமான நிருவனமாக மாறியுள்ளது. சமூகம் இயல்பாகத் தோன்றியது.
02. அரசு ஒரு நிச்சயமான ஆள்புல பிரதேசத்தை உடைய நிறுவனமாகும். ஆனால் சமூகத்திற்கு நிச்சயமான ஒரு நிலப்பிரதேசம் அவசியமில்லை. அதன் கிளைகள் உலகலாவிய ரீதியில் பரந்திருக்கும்.
03. அரசு கட்டளைகளை பிறப்பிப்பதற்கு இறைமை அதிகாரத்தைப் பெற்றுள்ளது. ஆனால் சமூகத்திற்கு அவ்வாறான இறைமை அதிகாரம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. வரலாற்று ரீதியாக சமூகம் அரசுக்கு முந்தியதாகும். குடும்பம், ஜனசமூகம் என்பன மிகப் பழமையான நிறுவனங்களாகும். ஆனால் மனிதன் நாகரீக வாழ்க்கைக்கு பழக்கப்பட்டு பொது நோக்கத்திற்கு ஒழுங்கமைந்ததன் பின்னரே அரசு தோன்றியது. ஆதலால் அரசு சமூகத்தை விடப் பிந்தியது.

05 அரசில்லாமல் சமூகம் அமையலாம். உதாரணமாக கால்மாக்ஸ் பொதுவுடமை அமைப்பில் அரசற்ற சமூகம் அமையுமென ஆணித்தரமாகக் குறிப்பிட்டார். மகாத்மா காந்தியும் அரசற்ற சமூக அமைப்புப் பற்றி கனவு கண்டார். ஆனால் சமூகமில்லாமல் அரசு இருக்காது.

06. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி அமைதியைப் பேணுதல் அரசின் பிரதான கடமையாகும். ஆனால் சமூகமோ பல்வேறு கடமைகளை நிறைவேற்றுகிறது.

உதாரணம் :

அரசுக்கு வரி செலுத்துதல்

சட்டங்களுக்கு கீழ்படிதல்

அரசுக்கு முழுமையான விசுவாசங் காட்டுதல்.

07. சட்டத்தின்வாயிலாக அரசு மக்களின் புற உறவுகளை சீராக்குகிறது. ஒரு குடிமகன் மற்றொரு குடிமகனை தாக்கி கேடு விளைவித்தால் அரசு தனது சட்டத்தின் ஊடாக அவனைத் தண்டிக்கும். ஆனால் சமூகத்திற்கு அத்தகைய சட்டங்கள் கிடையாது.

08. சமூக வாழ்க்கையின் சம்பிரதாயங்கள், சடங்குகள் பாரம்பரிய அடிப்படைகள் எவ்வித கேள்விகளும் இடமில்லாமல் செயல்படுத்தப்படும். ஆனால் அரசுகளின் செயல்முறைகள் சரி, பிழை, உண்மை, பொய், எனும் பகுத்தறிவு விளக்கத்திற்கு உட்பட்டவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. சில சமூகங்கள் அரசினைவிடப் பெரியதாகவும், சில சமூகங்கள் அரசினை விட சிறியதாகவும் உள்ளன. உதாரணமாக முஸ்லீம் சமூகம் இலங்கை அரசைவிடப் பெரியதாகும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் அவர்கள் வசிப்பதினாலேயே அச் சமூகம் பெரியதாக உள்ளது. அதேவேளை சிங்களவர் சமூகம் அரசினை விட சிறிதாக உள்ளது. இலங்கையில் ஏனைய சமூகங்கள் வாழ்ந்தாலும் சிங்களவர் சமூகம் இலங்கையில் மட்டுமே வாழ்வதாலும் அரசினைவிட சிறிதாக உள்ளது.

10. குறிப்பிட்ட அரசுக்குள் முரண்பட்ட பல சமூகக் குழுக்கள் வாழலாம். உதாரணமாக முஸ்லிம் சமூகம், தமிழர் சமூகம், பறங்கியர் சமூகம் போன்ற இனச் சமூகங்கள் இலங்கையில் வாழ்கின்றன.

### ❖ அரசுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் நீர் காணும் வேறுபாடுகளைக் குறிப்பிடுக?

அரசு என்பது பிரிக்க முடியாத உணர்வு வெளிப்படாத, கட்புலனாகாத இலச்சிய மாதிரியாகும். ஆனால் அரசாங்கம் என்பது சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை என்பனவற்றைக் கொண்டமைந்த நிறுவனமாகும். அத்துடன் கட்புலனாகும் நிறுவனமும் நடைமுறைச் செயற்பாட்டை உடையனவுமாகும்.

அரசாங்கம் என்பது அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகவராகும் அதேவேளை, அரசின் விருப்பையும், நோக்கங்கங்களையும், நடைமுறைப்படுத்துகின்றது. இதன்படி அரசு, எஜமானும், அரசாங்கம் சேவகனுமாகும்.

சாதாரண மக்களுக்கு அரசும், அரசாங்கமும் ஒன்றாகும். ஆனால் அரசியல் விஞ்ஞான மாணவர்களுக்கு வெவ்வேறுதான் எனும் கருத்தினை லஸ்கி எனும் அறிஞர் வலியுறுத்துகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோமஸ் கொப்ஸ் என்பவர் இரண்டு சொற்களையும் ஒரே பொருளில் பயன்படுத்தியுள்ளார். அதே போல ஜோன்லொக் என்பவர் அரசையும், அரசாங்கத்தையும் முதன் முதலாக வேறுபடுத்தினார்.

**வேறுபாடுகள்**

01. அரசு என்பது ஆள்புலம், மக்கட் தொகை, அரசாங்கம், இறைமை என்ற காரணிகளின் சேர்மானமாகும். அரசாங்கம் அரசின் ஒரு அங்கம் மட்டுமே.

02. அரசில் வாழும் சகல பிரஜைகளும் அரசின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். ஆனால் அரசாங்கத்தின் உறுப்புரிமை கட்டாயமானதல்ல.

03. மக்கள் அரசுக்கு கட்டாயமாக அடிபணிய வேண்டும். ஆனால் அரசாங்கத்துக்கான அடிபணிவு கட்டாயமானதல்ல.

04. அரசுக்கு இறைமை அதிகாரமுண்டு. அரசு ஒப்படைக்கும் அதிகாரத்தையே அரசாங்கம் பெறுகிறது.

05. அரசின் இருப்புக்கு ஒரு நிச்சயமான ஆள்புலப் பிரதேசம் தேவைப்படுகிறது. சில சந்தப்பங்களில் அரசாங்கத்திற்கு அது அவசியமானதல்ல.

06. அரசு மாற்றமுறாது நிலையானதாய் இருக்கும் ஆனால் அரசாங்கம் காலத்திற்கு காலம் மாறும். உதாரணமாக அரசாங்கம் சட்ட அடிப்படையிலோ அல்லது வேறு வகையிலோ மாறுதலுக்கு உட்பட்டவை. அரசாங்கம் அரசியல் காரணங்களால் கவிழக் கூடும். இரண்டாம் உலகப் போரின் போது இருந்த அரசாங்கம் போரின் முடிவில் இல்லை.

07. அரசு என்பது சீரானது. ஆனால் அரசாங்கம் பல வகையினைச் சேர்ந்தது. உதாரணமாக இங்கிலாந்து, இந்தியா, இத்தாலி போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் மந்திரி சபை அரசாங்கம் உள்ளது. அமெரிக்கா, இலங்கை, பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஜனாதிபதி முறை அரசாங்கம் உள்ளது.சீனா, கியூபா, வடகொரியா போன்ற நாடுகளில் பொதுவுடமை அரசாங்கம் நிலவுகின்றது. சவுதிஅரேபியா, பூட்டான் போன்ற நாடுகளில் முடியாட்சி அரசாங்கம் நிலவுகின்ற அதேவேளையில் பர்மா, பிஜி, சூடான் போன்ற நாடுகளில் இராணுவ அரசாங்கம் செயற்படுகின்றது.

08. ஓர் அரசில உள்ள அனைத்து மக்களும் அரசின் முதன்மைக் கூறாக விளங்குகின்றனர். ஆனால் அரசாங்கத்தில் யார் தீவிரப் பங்கேட்கின்றனரோ அவர்களே அரசாங்கத்தின் கூறாகின்றனர்.

09. மக்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழ முடியாது. அரசாங்கத்துக்கு எதிராகக் கிளந்தெழும் உரிமை மக்களுக்குண்டு.

10. ஓர் அரசின் எல்லைக்குள் ஓர் அரசு மட்டுமே செயற்பட முடியும். ஆனால் ஒரு அரசுக்குள் பல அரசாங்கங்கள் இருக்கலாம். உதாரணமாக இந்தியா, ஒரு சமஷ்டி நாடு என்ற படியால் அந்த நாட்டிலே மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் என்ற இரண்டு அரசாங்கங்கள் காணப்படுகின்றன.

### ❖ அரசுக்கும் சமூக ஸ்தாபனங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?

அரசு ஒரு சமூகத் தாபனமாகும். ஆனால் ஏனைய சமூகத் தாபனங்களோடு ஒப்பிடும் போது அரசே உயர் சமூக தாபனமாக விளங்குகின்றது.

சங்கம் என்பது சில குறிப்பிட்ட நோக்கங்களை சாதித்துக் கொள்வதற்காக மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். உதாரணமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் ,இலங்கை தாதிமார் சங்கம், மாதர் சங்கம், கிராமிய அபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராண்மை வாதிகளின் கருத்துப்படி அரசும், மக்களின் நலன் பேணுவதற்காக மக்களினால் உருவாக்கப்பட்ட சங்கமாகும் எனக் கூறுகின்றனர்.

லஸ்கி, மைக்னகவர் போன்றவர்களின் கருத்துப்படி அரசும் ஏனைய சங்கங்களைப் போன்ற சமமான சங்கம் எனக் குறிப்பிடுகின்றனர். எனினும் நடைமுறையில் அரசுக்கும் ஏனைய சங்கங்களுக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

01. சமூகத்தில் சகலரதும் பங்கேற்போடு அரசு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சமூகத்தில் ஏனைய சங்கங்கள் சமூகத்தின் ஒரு சிலரின் பங்கேற்போடு ஒழுங்கமைந்துள்ளது.

02. சமூகத்தில் உள்ள மக்கள் சகலரும் அரசின் உறுப்பினராவர். ஓர் அரசின் எல்லைக்குள் பிறக்கின்ற ஒவ்வொருவனும் அதில் உறுப்பினராய் இருத்தல் என்பது வலுக்கட்டாயமாகும். உதாரணமாக இலங்கையில் ஒருவர் பிறந்தவுடன் இலங்கை அரசின் உறுப்பினராகி விட்டார். இது அவரை அறியாமலே ஏற்பட்டுவிடும்.
ஆனால் ஏனைய சங்கங்களின் உறுப்புரிமை விருப்பத்திற்குரியனவை யாகும். ஒருவர் விரும்பினால் சங்கத்தில் சேரலாம் அல்லது சேராமல் விடலாம். அது அவருடைய விருப்பத்தின்படியே நிகழும்.

03. ஒரு மனிதன் ஒரு அரசில் மட்டும் உறுப்புரிமை பெறலாம். ஆனால் அவன் ஏக காலத்தில் பல சங்கங்களின் உறுப்புரிமை பெறலாம். அதாவது ஒருவன் எத்தனை சங்கங்களிலும் தலைவராகவோ அல்லது செயலாளராகவோ அல்லது உறுப்பினராகவோ இருக்கலாம்.

04. ஒரு மனிதன் அரசின் உறுப்புரிமையை கைவிட முடியாது. அவ்வாறு கைவிட்டால் உடனடியாக பிறிதோர் அரசின் உறுப்புரிமையைப் பெற வேண்டும். ஆனால் தான் விரும்பும் போது ஏனைய சங்கங்களின் உறுப்புரிமையைத் துறக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. அரசு சமூகத்தின் பொது முன்னேற்றம் என்ற நோக்கினைக் கொண்டுள்ளது. அரசு சகலரினதும் பங்கேற்போடு ஒழுங்கமைந்து அனைவர் சார்பாகவும் செயற்படுகின்றது. அரசினுடைய நோக்கம் பரந்து, விரிந்தது. இன,மத, மொழி, சமயம் என்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. ஆனால் ஏனைய சங்கங்களின் நோக்கம் குறுகியது. அவை தமது உறுப்பினர்களின் நன்மைக்காகவே செயற்படுகின்றன. உதாரணம் : பாடசாலை அபிவிருத்தி சங்கம் அந்தக் குறிப்பிட்ட பாடசாலையின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டே செயற்படும். இதனால் குறுகியது.

06. அரசு நிலையானதாகும். ஏனைய சங்கங்கள் நிலையற்றவையாகும். காலத்துக்கு காலம் அவற்றின் இருப்பு மாற்றமுறும். ஏனைய சங்கங்களின் இருப்பு அரசின் விருப்பின் அடிப்படையில் அமையப் பெறும். ஏனைய சங்கங்களை அரசின் விருப்பமின்றி உருவாக்கவோ, நடைமுறைப்படுத்தவோ முடியாது.

07. உறுப்பினர் மீது செலுத்தும் அதிகாரத்தைப் பொறுத்து, அரசின் ஓர் உறுப்பினர் குற்றம் புரிந்தால் வழங்கப்படும் தண்டனை எளிமையான எச்சரிக்கையிலிருந்து மரண தண்டனை வரை வேறுபடும். ஏனைய சங்கங்களில் வழங்கப்படும் உச்சத் தண்டனை உறுப்புரிமையிலிருந்து வெளியேற்றி விடுதலாகும். அதிகாரத்தைப் பயன்படுத்தி அடிபணிய வைக்கும் திறன் அரசுக்கிருப்பினும் ஏனைய சங்கங்களுக்கு இவ்வதிகாரமில்லை.

08. பரவலின் அடிப்படையில் அரசு ஒரு நிச்சயமான ஆள்புலப் பிரதேசத்தில் ஒழுங்கமைந்த ஒரு தேசிய ஒழுங்கமைப்பாகும். ஏனைய சங்கங்களுக்கு ஒரு நிச்சயமான ஆள்புலம் அவசியமாவதில்லை. சில சங்கங்கள் தேசிய எல்லைகளைத் தாண்டி சர்வதேச மட்டத்திலும் செயற்படுகின்றன.

09. ஓர் அரசின் எல்லைக்குள் ஓர் அரசு மட்டுமே தொழிற்படும். அரசினுடைய முகவராக அரசாங்கம் செயற்படும். ஆனால் ஒரு அரசின் எல்லைக்குள் பல சங்கங்கள் அமையலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஒரு அரசுக்குள் செயற்படும் சங்கங்களுக்கிடையே மோதல்கள் நிகழலாம். ஒரு சங்கம் மற்றொரு சங்கத்திற்கு எதிராக செயற்படலாம். உதாரணமாக ஒரு வியாபாரிகள் சங்கம் விலையை ஏற்றுமாறு கூறும் போது நுகர்வோர் சங்கம் விலையைக் குறைக்குமாறு கோரலாம். அதேபோல தொழிற்சாலை உரிமையாளர் சங்கம் போனசைக் குறைக்க விரும்புகையில் தொழிலாளர் சங்கம் அதைக் கூட்டுவதற்காக போராடலாம்.
சங்கங்களுக்கிடையே மோதல்கள் நிகழ்ந்தால் அதனை அரசு தலையிட்டு சமரசம் செய்ய முயல்கிறது.

### ❖ அரசு என்பது தனிப்பட்டவர்களின் சங்கமாகும், அரசு என்பது ஒரு வர்க்க கருவியாகும், ஆராய்க?

அரசு என்பது தனிப்பட்டவர்களின் சங்கமாகும் என்பதை அரசு பற்றிய தாராள ஜனநாயகக் கருத்தையும், அரசு என்பது ஒரு வர்க்க கருவியாகும் என்பதை மாக்ஸியக் கருத்தாகவும் விளக்குகின்றது.

### ❖ அரசின் தோற்றம்

தாராளவாதக் கொள்கையின் படி அரசு என்பது மனிதர்கள் தமது பொது நன்மைக்காக உருவாக்கிக் கொண்ட ஒரு மனித சங்கமாகும். இக் கருத்து புராதன கிரேக்க அறிஞர்களான பிளட்டோ, அரிஸ்டோட்டில் முதல் இன்றுவரை பல லிபரல்வாதிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மனிதன், நாகரீக சமூக வாழ்க்கையை வாழத் தொடங்கியதன் பின்னர் தமது பௌதீக தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் ஒழுங்கமைய ஆரம்பித்ததோடு அவ்வொழுங்கமைதல் செயன்முறையின் இறுதியானதும் உயர்ந்ததுமான சந்தப்பம் அரசாக ஒழுங்கமைந்தமையாகும் என லிபரல்வாதிகள் கூறுகின்றனர். இதன்படி மனிதனின் சமூகச் செயற்பாட்டின் தவிர்க்க முடியாத இயல்பின் பெறுபேறே அரசாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு பற்றிய மாக்சீயக் கருத்துப்படி அரசு என்பது ஒரு வர்க்க கருவியாகும். இக் கருத்தின்படி அரசு என்பது மனிதனின் சமூகச் செயற்பாட்டின் இயல்பான பெறுபேறன்று. சமூக முன்னேற்றச் செயன் முறையின் ஒரு கட்டத்தில் தோன்றிய தனியார் சொத்துடமையின் காரணமாக சமூகம் உள்ளோர், இல்லாதோர் என்ற இரு சமூகவர்க்கங்களாக பிளவுபட்டதால் உள்ளோர் வர்க்கம் தமது வர்க்கச் சலுகைகளைப் பாதுகாப்பதற்கும், இல்லாதோர் வர்க்கத்தினர் மீது தமது ஆதிக்கத்தினை நிலை நிறுத்தி சுரண்டலைக் கொண்டு நடத்துவதற்கும், சுரண்டலுக்கு எதிராக இல்லாதோர் வர்க்கம் கிளர்தெழும் போது அவர்களை அடக்குவதற்கும் உருவாக்கிக் கொண்ட அடக்குமுறைக் கருவியாகும். இவ்வாறு மாக்சீயக் கருத்துப்படி செல்வந்த வர்க்கத்தின் நலன்களையும், தேவைகளையும் அடிப்படையாகக்கொண்ட ஒரு வர்க்க கருவியே அரசாகும்.

❖ **அரசின் வளர்ச்சி:**

லிபரல்வாதத்தின் படி அரசு எப்போது தோற்றம் பெற்றது என்பதை நிச்சயமாக கூற முடியாது இருப்பினும் தற்கால தேசிய அரச முறைமை நீண்ட படிமுறை வளர்ச்சியின் பெறுபேறாகும். கிரேக்க கால நகர அரசு முறையிலிருந்து ஆரம்பித்து உரோம காலப் பேரரசு முறைமை, மத்திய கால மானிய அரச முறைமை ஈறாக நவீன தேசிய அரச முறைமை வரை அரசு வளர்ச்சியடைந்து வந்துள்ளது .நவீன தேசிய அரச முறைமை 15ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தோற்றம் பெற்றதுடன் அத் தேசிய அரசு, ஒரு தேசம் - ஒரு நாடு என்ற மூலக்கொள்கையை அடித்தளமாக் கொண்டு நிலம், மக்கள், இறைமை, அரசாங்கம் என்ற நான்கு கூறுகளின் சேர்க்கையாக அமைந்தது.

மாக்சீயவாதிகளும் அரசு நீண்ட படிமுறை வளர்ச்சியின் விளைவினதாகும் என்று ஏற்றுக்கொள்கின்றனர். எனினும் அவர்கள் அந்த முறைபடி வளர்ச்சிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையை லிபரல்வாதிகளை விட முழுமையாக வேறுபட்ட வகையிலே விளங்குகின்றனர். சமூக வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் அரசு தோன்றியிருக்கவில்லை. அக் கட்டத்தை அவர்கள் ஆரம்ப கால கம்யூனிச சமூகம் என்றழைக்கின்றனர். அச் சமூக முறைமையில் தனியார் சொத்துடமை நிலவவில்லை என்றும் அதன் காரணமாக அங்கு உள்ளோர், இல்லாதோர் என்ற வகையில் சமூகம் வர்க்கங்களாகப் பிளவுபடவில்லை என்றும் கூறுகின்றனர். வர்க்க முறைமை நிலவாமையால் ஒரு வர்க்கம் பிறிதொரு வர்க்கத்தைச் சுரண்டும் நிலை காணப்படவில்லை. அதனால் சுரண்டல் மற்றும், அடக்குமுறைக் கருவியான அரசும் அச் சமூகத்திலிருக்க வில்லை. மனித சமூகப்படிமுறை வளர்ச்சிச் செயன்முறையில் தனியார் சொத்துடமை ஆரம்பமாகியதன் பின்னர் உள்ளோர். இல்லாதோர் என்ற வகையில் இரு வேறுபட்ட வர்க்கங்களாக சமூகம் பிளவு பட்டதால் உருவாகிய சமூக மோதலின் விளைவாக அரசு தோன்றியது. மனித வரலாற்றில் அடிமைமுறைச் சமூகத்திலேயே முதன்முதலாக அரசு என்ற தாபனத்தின் செயற்பாடு ஆரம்பமாகியது. பின்னர் அது மானிய முறைச் சமூகத்தில் நுழைந்ததுடன் தற்கால முதலாளித்துவ சமூகமுறை வரை மாற்றமுற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இந்த மாற்றமடைந்த செயன்முறையின் செயற்பாட்டுச் சக்தியுள்ளோர், இல்லாதோருக் கிடையிலான வர்க்கப் போராட்டமாகும். உற்பத்தி முறையின் வளர்ச்சியின் போது உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தித் தொடர்புகளுக்குமிடையிலான முரண்பாடுகள் வர்க்க மோதல்களுக்கு காலாய் அமைந்தது. அரசானது அளவு மற்றும் பண்பு ரீதியாகவே வளர்ச்சியடைகின்றது. மறுவார்த்தையில் கூறின் உற்பத்தி நுட்ப முறையிலும் தொடர்புகளிலும் ஏற்படும் வளர்ச்சிகளாகும். இவ்வாறு இடம்பெற்ற வளர்ச்சிச் செயன்முறையின் மூன்றாவது கட்டம் முதலாளித்துவ அரச முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அரசின் இயல்பு:**

லிபரல்வாதக் கருத்துப்படி அரசு என்பது மனிதர் பொது நன்மைக்காக உருவாக்கிக் கொண்ட ஒரு பொதுச் சமூகத்தாபனமாகும். லிபரல் வாதத்திற்கு அடித்தளமிட்ட ஆரம்ப அறிஞர்களுள் ஒருவரான அரிஸ்டோட்டில் குறிப்பிடுவதன்படி, மனிதர் மகிழ்ச்சியானதும் திருப்திகரமானதுமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கே அரசை அமைத்துக் கொண்டனர். அரசின் கடமை அந் நோக்கை நிறைவேற்றுவதாகும். இக் கருத்தின் அடிப் படையிலேயே அரசின் இயல்பு பற்றிய லிபரல் வாதக் கருத்து ஒழுங்கமைந்துள்ளது. லிபரல் வாதத்தின் படி பல்வேறு பண்புகள், கருத்துக்கள், நடத்தைப் பாங்குகள், விருப்பு வெறுப்புக்கள் என்பனவற்றைக் கொண்ட இலட்சக்கணக்கான மக்கள் வாழும் சமூகத்தில் மனிதர்களை ஒரு பொதுக் கட்டுப்பாட்டிற்குள் உட்படுத்தி வழிப்படுத்தினால் மட்டுமே தனிப்பட்ட முறையில் தனிமனிதனினதும் பொதுவாக சமூகத்தினதும் முன்னேற்றத்தை அடைய முடியும். இந் நோக்கத்திற்காகவே அரசு சட்டங்களைப் பிறப்பிக்கின்றது. இதன்படி அரச சட்டங்களுக்கு கீழ்படிதல், அதன்படி ஒழுகுதல் என்பனவற்றை பிரஜைகள் நிறைவேற்றல் வேண்டும். அவ்வாறின்றேல் சமூகம் அராஜக நிலையினதாக மாறிவிடும். மறுபுறம் அரசு பிறப்பிக்கும் சட்டங்கள், பிரசைகளுக்கு இன்னல்களை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது. அச் சட்டங்கள் மனித முன்னேற்றத்தையே இலக்காக கொண்டிருக்க வேண்டும். இதன்படி அரசு என்பது கட்டாயமாக மனிதனின் சமூக முன்னேற்றத்திற்கு வழி காட்டியாகவும் , ஒழுங்குபாட்டாளராகவும், பாதுகாவலராகவும் இருக்க வேண்டும்.

அரசின் இயல்பு பற்றிய மாக்சீய கருத்து லிபரல் கருத்தை விட முழுமையாக வேறுபட்டதாகும். அரசு என்பது சொத்தினைப் பெற்ற வர்க்கத்தின் கருவியாகும். அது சுரண்டலையும், அடக்கு முறையையும் அடிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. அரசின் நோக்கததிற்காக "பொது நன்மை" என்ற மாயையான திரைக்குள் மறைந்து சட்டங்களைப் பிறப்பிக்கின்றது. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொலிஸ், நீதிமன்றம், சிறைக்கூடம், தூக்குமரம் போன்ற அடக்குமுறை நிறுவனங்களைக் கொண்டுள்ளது. சட்டங்கள் மூலம் சொத்துடைய வர்க்கத்தின் நலன்களும், தேவையும் பாதூகாக்கப் படுகின்றனவேயன்றி பொது நன்மை பேணப்படுவதில்லை. அரசு உருவாகிய காலத்திலிருந்து இன்றுவரை இவ்வாறே செயற்பட்டுள்ளது. இதன்படி அடக்கப்படும் மக்கள் அரசில் வாழ்வதன் மூலம் அன்றி அதனை அழித்தொழித்து விட்டு உருவாக்கிக் கொள்ளும் வர்க்கங்களற்ற கம்யூனிச சமூகத்திலேயே தமது உண்மையான சுதந்திரத்தையும், முன்னேற்றத்தையும் அடைய முடியும்.

❖ **அரசின் எதிர்காலம்**

லிபரல்வாதக் கருத்தின்படி, அரசு மனிதனின் சமூக இருப்புக்கு அத்தியவசியமாக இருப்பதால் மனித இனம், இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் வரை அரசு இல்லாதொழியாது, நிலைத்திருக்கும் எனினும் காலத்தின் தேவைக்கேற்ப பொது நன்மைக்காக அரசு செயற்படும் விதம் மாறலாம்.

கிரேக்க கால நகர அரசு முறைமையிலிருந்து இன்றைய தேசிய அரச முறைமை வரை அரசின் வளர்ச்சியைப் பார்க்கும் போது இது நன்கு தெளிவாகிறது. இன்று போன்றே எதிர்காலத்திலும் அரசு மாற்றமுற்று வளர்ச்சியுறும். என்ன மாற்றங்கள் நிகழ்ந்தாலும் மனிதன் இவ்வுலகில் வாழும் வரை அரசு அழிவுறாது நிலைத்திருக்கும்.

மாக்சீய வாதத்தின்படி அரசு நிரந்தரமானதன்று. அது சமூகத்தில் தனியார், சொத்துடமை உருவாகி சமூகமானது உள்ளோர், இல்லாதோர் என்று இரு வர்க்கங்களாக பிளவடைந்ததன் பின்னரே உருவாகியது.அவ்வாறாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் சொத்துடமை இல்லாதொழிக்கப்பட்டு வர்க்க பேதமற்ற ஒரு சமூகம் உருவாக்கப்பட்டால் அரசு இருப்பதற்கான தேவை எழமாட்டாது. பொது நன்மைக்காக இது நிறைவேற்றப்பட வேண்டும். இவ்வரலாற்றுக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பு தொழிலாளர் வர்க்கத்திற்குரியது என்று மாக்சீயவாதிகள் வலியுறுத்துகின்றனர். இந் நோக்கத்தினைக் கொண்ட ஒரு சோசலிச புரட்சியின் மூலம் வீழ்த்திவிட்டு ஒரு சோசலிச அரசைத் தாபித்து அதன் பின்னர் கம்யூசிச சமூகத்தை உருவாக்குவதற்கு தேவையான அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். கம்யூனிச சமூகம் தனியார் சொத்துடமை நிலவாத வர்க்கங்கள் இல்லாத சமூகமாகும். அங்கு மனிதனை மனிதன் சுரண்டும் நிலை காணப்பட மாட்டாது. ஆதனால் கட்டுப்படுத்தும், அடக்கியாளும், தேவையும் எழ மாட்டாது. அதனால் அடக்குமுறைக் கருவியான அரசின் தேவையும், இல்லாதொழிவதால் அரசும் இல்லாதொழியும். இச் செயன்முறையின் படி இறுதி விளைவு கம்யூனிச சமூகத்தில் அரசானது நிரந்தரமாகவே இல்லாதொழிவதாகும்.

❖ **அரசும், தேசமும் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.**

அரசு, தேசம் என்பதிலிருந்து வேறுபட்டது. அரசை விட தேசம் என்பது விரிந்த பொருளைக் குறிக்கின்றது. பொதுவான வாழ்விடம் வரலாற்றுப் பின்னனி என்பனவும் பொதுவான இன மொழிக் கலாச்சார அரசியல் உணர்வு என்பனவும் கொண்ட மக்கள் வெகு இலகுவாக ஒரு தேசமாகிவிடுவார்கள். இத் தேசத்திற்கு அரசாங்கமோ, இறைமையோ இல்லாமையினால் அது அரசாக முடிவதில்லை. அதே போல எல்லா அரசுகளும் தேசமாகி விடுவதில்லை.

அரசையும், தேசத்தையும் வேறுபடுத்துகின்ற போது அரசு கருப்பொருள் கொண்ட கண்ணுக்குத் தொரியாத ஒரு அரசியல் எண்ணக்கருவாகும். ஆனால், தேசம், காட்சிப் பொருள் கொண்ட ஒரு நாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக்கு இறைமை, அதிகாரம் உண்டு. ஆனால் தேசத்திற்கு இறைமை அதிகாரம் இல்லை.

அரசுக்கு வரையறுக்கப்பட்ட எல்லை முக்கியமானதாகத் தென்பட்டிருக்கும். ஆனால் தேசம் பரந்து விரிந்தவையாக இருக்கும்.

தேசத்திற்கு உணர்வு அவசியமானது . ஆனால் அரசுக்கு உணர்வு தேவையில்லாமல் இருக்கும்.

அரசு, நாடு ஆகியவற்றிக்கிடையே வேறுபாடுகள் உள்ளன. ஒரு நாட்டினை உருவாக்க உளவியல் சார்ந்த உணர்வு தேவைப்படுகிறது. நாடு என்பது பண்பாட்டு அடிப்படையில் ஒத்த தன்மையைப் பெற்றுள்ள மக்கள் கூட்டத்தைக் குறிக்கும். அம் மக்கள் உளப்பாங்கு வளர்ச்சியால் விடாப்பிடியான ஒற்றுமை உணர்வை உடனடியாக வெளிக் காட்டக் கூடிய வழிப்புணர்வுடயவர்கள் என்று கார்ணர் குறிப்பிட்டார்.

நாடு என்பது அரசுடன் சேர்ந்த வேறு ஒரு கூறினைக் கொண்டது என கில்கி ரைஸ்ட் கூறினார். அக் கூறுதான் உள்ளார்ந்த ஒற்றுமை உணர்வு என்றும் குறிப்பிட்டார். இறைமையே ஒரு அரசையும் நாட்டையும் வேறுபடுத்திக் காட்டும் அடிப்படைக் கூறாகும்.

**❖ அரசின் வளர்ச்சிக் கட்டங்களை பின்வரும் தலைப்பின் கீழ் விளக்குக.**

**கிழக்குப் பேரரசு :**

கி.மு. சுமார் 5000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பாகவே நதியோரங்களில் வாழ்ந்த மக்களிடையே அரசுகள் நிலை பெற்றிருந்தன. மக்களின் சுய தேவைப் பூர்த்திக்கு இவ்வாறான வாழ்க்கை முறை மிகப் பொருத்தமானதாக காணப்பட்டதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டே உலகின் சிறந்த நாகரீகங்களும் தோன்றியிருந்தன. இவ்வாறு நதியோரங்களில் வாழ்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடையே தோன்றிய அரசுகள் பல வழிகளிலும் பலமுடையனவாகக் காணப்பட்டன. மக்கள் சுயதேவைப் பூர்த்தி நிலையை அடைவது இலகுவானதாகக் காணப்பட்ட போது சேமிப்பு தோன்றுவதற்கும் வாய்ப்பிருந்தது. இவ்வாறு சேமிப்பின் வழியாக சொத்துடமைப் பிரச்சினைகளும் நிலவுடைமைப் பிரச்சினைகளும் தோன்றிய போது அவற்றினைத் தீர்க்கும் நோக்கிலும் ,கட்டுப்படுத்தும் எண்ணத்தாலும் கிழக்கு பேரரசு பலமடைந்து வந்தது. இருந்தாலும் காலகட்டத்தில் அரசு அதிகார துஷ்பிரயோகம் செய்ததால் மக்களினுடைய ஆதரவை இந்த கிழக்கு பேரரசுகள் இழந்தன. இவ்வாறு இவ்வரசுகள் நீடித்து நிலைக்காவிடினும் குறிப்பிட்டளவு காலம் உலகில் நிலைத்திருந்து புகழ்பெற்ற நாகரீகங்களை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது. கிழக்கு பேரரசுக்கள் எகிப்து, சீனா, இந்தியா போன்ற நாடுகளில் முதன்முதலாக உருவாகியிருந்தன.

**கிரேக்க நகர அரசுகள்**

உலகில் மிக ஆரம்பங்களிற் தோன்றிய கிழக்கின் நாகரீகம் பல்வேறு வடிவங்களில் ஐரோப்பாவில் நுழைந்து கொண்ட போது அந்த நாகரீகத்தின் மிகக் கூடிய மட்ட வெளிப்பாடு கிரேக்க நகர அரசுக்களால் வேறுபடுத்தப்பட்ட போது சிறிய நிலப்பரப்புக்களைக் கொண்ட அரசுகளாகக் காணப்பட்டன.

**கிரேக்க நகர அரசுகளின் பொது இயல்புகள் :**

01 சிறிய நிலப்பிரதேசத்தைக் கொண்டவையாக இருந்தமை.

02. நிலப்பரப்பினால் சிறிய அரசுகளாகக் காணப்பட்டமையால் சுதந்திரத்தையும், மக்களாட்சியையும் மக்கள் விரும்பியவர்களாகவும் அரசாங்க நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர்களாகவும் இருந்தனர்.

03. நிருவாக நடவடிக்கைகளில் நேரடி ஜனநாயகம் காணப்பட்டமை

04. மக்களின் நலம் அரசியல் சார்ந்திருந்தமை.

05. மக்கள் சிறிய தன்னிறைவுடைய சமூகமாகக் காணப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. ஒவ்வொரு கிரேக்க நகர அரசுகளாலும் பிரபுக்கள் ஆட்சி, உயர் குடியாட்சி, தனியாட்சி, போன்ற ஆட்சிமுறைகள் நிலவியிருந்தமை.

07. நகரை மையமாகக் கொண்டு அமைந்திருந்தமை.

08. குடிமக்கள், பெண்களும் பிள்ளைகளும், அடிமைகள், அந்நியர்கள் என 4 தொகுதியினரான மக்களைக் கொண்டிருந்தமை.

09. குடியுரிமை கிரேக்க ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது.

10. ஒவ்வொரு நகர அரசுக்கும் அதிபதியாக ஆண் அல்லது பெண் தெய்வம் ஒன்றிருந்தது.

11. அத் தெய்வத்திற்கு அஎக்ரோபொலிஸின் அதி உயர்ந்த இடத்தில் கோவில் ஒன்று கட்டப்பட்டது. உதாரணமாக எதென்ஸ் நகரத்தின் அதிபதி எதீனா தேவதைக்கு "பாதினன்" ஆலயம் கட்டப்பட்டிருந்தது.

**ரோமானியப் பேரரசு:**

ஒரு நகர அரசாகவே ரோம் ஆரம்பத்தில் காணப்பட்ட போதும் படைவலிமையால் நிலங்களை ஆக்கிரமித்தும், ஆதிக்கம் செலுத்தியும் நாட்டை ரோமானியர்கள் விரிவாக்கிக் கொண்ட போது ரோமானிய சாம்ராச்சியம் நிலை பெற்றது. ரோமில் ஜூலியர் சீசர் பதவிக்கு வந்த போது ரோமானிய சாம்ராச்சியம் பரிணமித்தது. ஆரம்பத்தில் ரோம் நகர அரசில் காணப்பட்டிருந்த மக்களாட்சி நிறுவனங்கள் தொடர்ந்தும் ரோம் சாம்ராச்சியமான போதும் நிலைபெற்றிருந்தது. இங்கும் கிரேக்க நகர அரசுகளைப் போன்றே வேறுபட்ட ஆட்சிமுறைகளான முடியாட்சி, உயர் குடியாட்சி, மக்களாட்சி என்ற வடிவங்களில் நிலைபெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படைமானிய அரசு அல்லது படைமானிய பிரபுக்கள் ஆட்சி :**

ரோமானியப் பேரரசு அழிவுற்றவுடன் ஐரோப்பாவில் படைமானியப் பிரபுக்கள் ஆட்சி செய்யத் தொடங்கினர். இம் முறையால் அரசியல் அதிகாரம் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு அமையலாயிற்று. அரசன் குத்தகைகாரர்களின் தலைவர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்து அளித்தான். அத் தலைவர்கள் பல குத்தகைக்காரர்களுக்கு அந் நிலத்தைப் பகிர்ந்தளித்தார்கள். அங்கு அரசன் இறைமை அதிகாரமின்றி இருந்தான். குத்தகைதாரர்களின் தலைவர்கள் குறிப்பிட்ட அளவே அரசனுக்கு அடங்கி நடக்கலாயினர். இதனால் நிலப்பிரபுக்கள் அரசர்களை விட அதிகார மிக்கவர்களாக விளங்கினர். அரசனின் ஆணையைவிட பிரபுக்களின் கட்டளைகள் மக்களை வெகுவாக பாதித்தது. இதனால் அரசு அதிகாரத்தை இழக்கலாயிற்று. இதன் பின்னர் மக்கள் மத்தியில் புதிய சிந்தனைகளும் மக்களாட்சி பற்றிய கருத்துக்களும் உருவானதன் காரணமாக படைமானிய அரசு வீழ்ச்சியடையலாயிற்று.

**நவீன அரசு அல்லது தேசிய அரசு :**

தேசிய அரசு என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த மக்களால் தமக்கேயுரிய கலாச்சாரம், மொழி, சமய தனித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அத்துடன் அந் நிறுவனத்திற்கும் உலக அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.

தேசிய அரசின் ஆரம்பம் 18ம் நூற்றாண்டில் ஏற்பட்டதாக நம்பப்படுகின்றது. பிரித்தானியா, பிரான்ஸ், ஆகிய நாடுகளில் முதலாவது தேசிய அரசுகள் உருவாகின. அதனைத் தொடர்ந்து ஜேர்மன், இத்தாலி ஆகிய நாடுகளில் தேசிய அரசுகள் உருவாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 20ம் நூற்றாண்டில் உலகம் பூராகவும் தேசிய அரசுகள் தோன்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய அரசுகள் தோன்றியதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்:**

01. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டமை.
02. கிறிஸ்துவ மதச் சீர்திருத்தம்.
03. விஞ்ஞான மறுமலர்ச்சி
04. மானிய முறையின் வீழ்ச்சி
05. கைத்தொழில் புரட்சி.
06 முதலாளித்துவத்தின் எழுச்சி
07. 1789ம் ஆண்டில் ஏற்பட்ட பிரான்சியப் புரட்சி.
08. மக்கியாவலின் அதிகாரம் பற்றிய சிந்தனை.
09. அமெரிக்க புரட்சி
10. சோவியத் ரஷ்யாவின் 1917ம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சி
11. முதலாம் உலகப் போரும், 2ம் உலகப் போரும்
12. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி

**சிறப்பான தேசிய அரசுகளாக எழுச்சி பெற்றமைக்கான காரணங்கள் :**

01. தேசிய ஒருமைப்பாடு
02. இராணுவ கடற்படைப்பலம்
03. முன்னேற்றமான பொருளாதாரம்
04. நாடுகளின் ஆக்க திறன்.
05. அரசியல் சிந்தனைப் புரட்சிகள்
06. இறைமை பற்றிய எண்ணக்கரு வலுப்பெற்றமை
07. மத்திய தர வர்க்கத்தின் தோற்றம்.

பிரித்தானியா, போத்துக்கல், ஒல்லாந்து, பிரான்ஸ், ஆகிய நாடுகள் உலகின் சிறந்த நாடுகளாக எழுச்சி பெற மேற்கூறிய காரணங்கள் ஏதுவாயிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அரசுகளின் உருவாக்குதலில் கடந்து வந்த விருத்திக் கட்டங்கள் நவீன சமூகவியலாளர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

நவீன தேசிய அரசு
மானிய முறை அரசு
உரோம பேரரசு
கிரேக்க அரசு
கீழைக்தேய அரசுகள்
கோத்திர அரசுகள்

**தேசிய அரசின் பண்புகள் :**

01. ஒரு தேசத்திற்காக ஒரு அரசு காணப்படல்.
02. அரசுகள் ஒவ்வொன்றும் இறைமை உள்ளவை
03. அரசுகளின் பூகோள எல்லை வரையறை செய்யப்பட்டது.
04. அரசு 4 பிரதான கூறுகளைக் கொண்டிருத்தல்

    உதாரணம் : குறிப்பிட்ட நிலப்பரப்பு, மக்கள் தொகை அரசாங்கம், இறைமை,.
05. நவீன அரசில் உள்ள எல்லா மக்களும் அரசின் உறுப்பினர்கள்
06. பழைய அரசுகளை விட முற்றிலும் வேறுபட்டது.
07. அரசு நிரந்தரமானதும், மாற்ற முடியாததுமான ஒரு சங்கம்.
08 அரசின் பிரதிநிதியாக அரசாங்கம் செயற்படல்
09. எல்லா அரசுக்களும் சமமானவை.

❖ **பின்வரும் தலைப்புக்களின் கீழ் பிரஜைகளுக்கும், அரசுக்கு மிடையிலான தொடர்பை பகுப்பாய்வு செய்க.**

**01. சோசலிச அரசு :**

சோசலிச அரசு என்பது கம்யூனிச சமூக முறைமையை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டு முதலாளித்துவ அரசு முறைக்கும் கம்யூனிச சமூக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைக்குமிடையில் அரசின் செயற்பாட்டைக் காண முடிகிறது. இவ்வகையில் அரசியல் மற்றும் பொருளாதார முறைகளை முகாமைப் படுத்துவதற்கு சோசலிச கருத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. கம்யூனிசக் கட்சியின் விருப்புக்களின் படியே அரசியல் நிறுவனங்கள் செயற்படும்.
2. தனிப்பட்ட முறையிலன்றி கூட்டுறவு முறையின் அடிப்படையில் சமூக முறை ஒழுங்கமைத்தல்.
3. தனியார் சொத்துடமைக்கு பதிலாக பொதுச் சொத்துடமை நிலவுதல்.
4. திறந்த சந்தையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் பங்கீட்டு முறைக்கு பதிலாக மத்திய மயப்படுத்தப்பட்ட திட்டமிடல் முறையின் அடிப்படையிலான உற்பத்தியும் பங்கீடும் செயற்படுதல்.
5. அரசியல் உரிமைகளுக்கன்றி பொருளாதார உரிமைகளுக்கு முதலிடம் அளித்தல். இதன் பொருள் தனியார் சொத்துடமையன்றி பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துதல்.
6. சமுதாய நலனை நோக்கமாகக் கொண்டு தொழிற்சாலைகள் இயங்க வேண்டும்.
7. சமுகத்திற்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதில் தொழிற்சாலைகள் ஈடுபட வேண்டும்.
8. பசி, பஞ்சம், வறுமை போன்றவற்றிலிருந்து மனிதன் விடுதலை பெற வேண்டும்.
9. சமுதாயத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகள் மறைய வேண்டும்.
10. நகர்புறத்திற்கும், கிராமப் புறத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் குறைய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தொழிலாளர்களைச் சுரண்டும் முதலாளித்துவ வர்க்கம் ஒழிக்கப்பட வேண்டும்.

மேலே உள்ள கருத்துக்கள் சோசலிச அரசில் மனிதனுக்கும், அரசுக்குமுள்ள தொடர்பின் இயல்பை நிர்ணயிக்கும் காரணியாகும். இவற்றின் இறுதி இலக்கு தனி மனிதனன்றி சமூகமாகும். லிபரல்வாத நோக்கில் பார்க்கும் போது மனிதனுக்கும் அரசுக்குமுள்ள தொடர்போடு சம்பந்தப்பட்ட பெரும்பாலான சித்தாந்தங்களை சோசலிச அரசில் காண முடியாது. உதாரணமாக தனி மனிதனுக்கும் அவனது செயற்பாட்டிற்கும் முதலிடமளித்தல், சொத்துச் சுதந்திரம், அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் சுதந்திரம், அரசியல் கட்சிகளை அமைப்பதற்கான சுதந்திரம், சமயச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் போன்றவற்றை மனிதன் தனது சுய விருப்பத்தின்படி மேற்கொள்வதற்கு சுதந்திரம் பெறுவதில்லை. இதன்படி சோசலிச முறையில் மனிதன் அரசின் அடிமையாக மாறுகின்றான். கம்யூனிசக் கட்சியின் விருப்பின் படியே அரசு செயற்படும். அரசின் ஊடாக வெளியிடப்படும் கம்யூனிசக் கட்சியின் விருப்புக்கு எதிராக மனிதனோ, சமூகமோ எதையும் செய்ய முடியாது.

**லிபரல் சனநாயக அரசு:**

லிபரல் சனநாயகக் கருத்தின்படி அரசு என்பது மக்களால் உருவாக்கப்பட்ட உயர் சமூக நிறுவனமாகும். தனிப்பட்ட வகையில் தனிமனிதனதும் பொதுவாக சகல மக்களினதும் முன்னேற்றத்தை சாத்தியமாகக் கொள்வதற்கே அரசை உருவாக்கிக் கொண்டனர். இதன்படி லிபரல் சனநாயக அரசில் தனிமனிதனதும், அவனது தன்மையுமே முதலிடம் பெறுகிறது. மனித முன்னேற்றத்தை உச்சப்படுத்தும் வகையில் அரசியல், பொருளாதார முறைகளை முகாமைப்படுத்துவதே அரசின் பொறுப்பாகும். லிபரல் ஜனநாயகக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை முகாமைப்படுத்தி தனியார், சொத்துரிமை, சுயாதீன முயற்சி , திறந்த சந்தை போன்ற முதலாளித்துவக் கொள்கையின் படி பொருளாதார முறைமையும் முகாமைப்படுத்தப்பட வேண்டும். இந்த அரசியல் பொருளாதார முகாமைத்துவ மூலக் கொள்கைகளின் நோக்கம் மனிதனின் தனிப்பட்ட திறன்களை விருத்தி செய்து கொள்வதற்குரிய வாய்ப்பினை உருவாக்கி அவனது முன்னேற்றத்திற்கு வழியமைப்பதாகும். இந்த நோக்கத்திற்காகவே

01 அரசு சட்டங்களை பிறப்பிக்கின்றது.

02 அரசு சட்டத்தையும், ஒழுங்கையும் பேணி மனிதர் தமது செயற்பாடுகளை சுதந்திரமாக செய்வதற்கு வாய்பளிக்க வேண்டும்.

03. மனித உரிமைகளை பாதூகாத்து அவற்றை சுதந்திரமான முறையில் அனுபவிப்பதற்கு வழியமைக்க வேண்டும்.

04. மனிதனின் சுதந்திரமான செயற்பாடு, சமூக ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படுத்தினால் மட்டுமே மனிதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் அரசு தலையிட வேண்டும்.

05. தனி மனிதனின் அடிப்படைத் தேவைகளை அறிந்து அதைப் பூர்த்தி செய்தல்.

06. தனி மனித சுதந்திரத்தைப் பாதூகாத்தல்.

இந்த அடிப்படையில் லிபரல் ஜனநாயக அரசில், அரசுக்கும், தனிமனிதனுக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அரசின் வழிகாட்டலும், வழிப்படுத்தலுமின்றி மனிதனால் தனது முன்னேற்றத்தை நோக்கி செல்ல முடியாது என்று லிபரல் ஜனநாயகம் ஏற்றுக் கொள்கிறது.

மறுபுறம் மனிதர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசை அமைத்துக் கொண்டமையால் அரசுக்காக, குறிப்பாக அரசின் இருப்பை பாதூகாத்து நிலைநிறுத்துவதற்கு மனிதர் சில கடமைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்குகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று லிபரல் சனநாயகம் ஏற்றுக் கொள்கிறது. அவை பிரசைகளின் கடமைகள் என அழைக்கப்படுகின்றன.

01 சட்டத்தையும் அமைதியையும் நிலைநிறுத்துவதற்கு உதவுதல்.

02. அரசின் சட்டங்களுக்கு கீழ்படிதல்

03 வரிகளைச் செலுத்துதல்

04. பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யாது பாதுகாத்தல்

05. அரசுக்கு விசுவாசமாக நடத்தல்

06. பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு வாக்களித்தல் போன்ற கடமைகள் பிரதானமானதாகும்.

மேற்கூறிய விடயங்களின் படி லிபரல் ஜனநாயக அரசில் ,அரசு மட்டுமன்றி மனிதனும் தத்தமது இருப்பினை உறுதிப்படுத்தி நிலைநிறுத்துவதற்கு பரஸ்பரம் பொறுப்புக்களை பெற்றுக் கொள்கின்றனர் எனத் தெரிகிறது. அரசு மனிதனுக்காக கடமையாற்ற வேண்டும். அச் சேவையை முறையாக நிறைவேற்றுவதற்கு மனிதனும், அரசுக்காக சேவையாற்ற வேண்டும். இவை இரண்டும் சமமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மனிதனுக்கும் அரசுக்குமிடையிலான தொடர்பு குழப்பத்திற்குள்ளாகும்.

**பாசிச அரசு :**

பாசிச அரசு என்பது ஒரு தனிமனிதனின் சர்வாதிகாரத்தின் அடிப்படையில் செயற்படும் சர்வாதிகார அரசாகும். அரசு தான் எல்லை, அரசுக்காகத் தான் தனிமனிதன். இதுவே பாசிச அரசின் அடிப்படைக் கொள்கையாகும். அரசு முழுமையானது அரசு எவராலும் எதிர்க்கப்பட முடியாது. ஒவ்வொருசெயலும் அரசுக்காகவே செயற்பட வேண்டும். அரசுக்கு எதிராகவோ அரசுக்கு வெளியிலோ எதுவும் கிடையாது. தனிமனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் ஒழுங்கு செய்யவும் கட்டுப்படுத்தவும் வலிமை பெற்ற அரசாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் சர்வாதிகாரியின் சுய விருப்பின் அடிப்படையில் எதனைச் செய்ய வேண்டுமென்பது சந்தப்பத்திற்கேற்ப தீர்மானிக்கப்பட வேண்டும். பாசிச அரசின் பிரதான கருத்துக்கள் பின்வருமாறு:

01. லிபரல் சனநாயகத்தையும், சோசலிசத்தையும் எதிர்க்கும் அதேவேளை, பாசிசம் நடைமுறைச் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறை என்றும் வலியுறுத்தப்படுகிறது.

02. பாசிசவாதமானது சந்தப்பத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள், நோக்கங்கள், இலக்குகள் என்பனவற்றின் அடிப்படையிலேயே செயற்படுகிறது.

03. பாசிசம் அறிவையும், பகுத்தறிவையும் எதிர்கின்றது. அது உணர்வுகள், உணர்ச்சிகள், கருதுகோள்கள், அதிகாரத்தின் மீதான ஆசை என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டது.

04. ஆணை அதிகாரம், கீழ்படிவு, கௌரவம் மற்றும் அந்தஸ்து, கடமைகள், ஒழுக்கம், தேசபற்று, இனப்பரிசுத்தம், தலைமைத்துவத்தின் மீதான பக்தி மற்றும் நம்பிக்கை, தலைமைத்துவத்திற்கு வழிப்படுத்தல் என்பன பெரும்பாலும் தர்க்க ரீதீயற்றவையாகும். இந்த உணர்வுகளும், உளவியல் வெளிப்பாடுகளும் பிரசாரத்தின் மூலமே மக்கள் மனதில் புகுத்தப்படுதல்.

05. மூடநம்பிக்கைகள், கல்வி மற்றும் பிரச்சாரம் மூலம் மக்கள் மனதில் புகுத்தப்படுதல்.

06. தனிமனிதனையும், சமூகத்தினையும் விட அரசு உயர் தன்மை பொருந்தியது.

07. தனிமனிதனதும், சமூகத்தினதும் இருப்பு அரசின் இருப்பிலேயே தங்கியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. அரசின் இருப்புக்காக தனிமனிதனும் சமூகமும் தனது சுய இருப்பை தியாகம் செய்ய வேண்டும்.

09. தனிமனிதர்கள் நிபந்தனை இன்றி அரசுக்கு கீழ்படிவதோடு சட்டத்திற்கும் அடிபணிய வேண்டும்.

10. தனிமனிதர்கள் அரசின் விருப்புக்கு எதிராக இருத்தல் மரண தண்டனைக்குரிய குற்றமாகும்.

11. சமாதானம் என்பது செயற்திறன் குன்றிய பலவீனமான ஒரு தேசதின் மரண ஓலமாகும்.

12. சர்வதேச சட்டத்தையும், சர்வதேச வாதத்தையும் எதிர்த்தல்.

13. வன்முறையும், பயங்கரவாதமும் பாசிசத்தின் முக்கியமான பண்பாகும்.

14. திறந்த பொருளாதாரத்தினை பாசிசவாதிகள் நிராகரிக்கின்றனர் அதற்குப் பதிலாக பாசிசவாதிகள் அரசின் தனியுரிமையின் கீழ் அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஒரு பொருளாதார முறையை வலியுறுத்து கின்றனர். .

15. லிபரல் ஜனநாயகத்தினை ஓர் அரசியல் முறையாகவோ அரசியல் விழுமியமாகவோ பாசிசவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

மேற்கூறப்பட்ட கருத்துக்களின் ஊடாக பாசிச அரசுக்கும் தனி மனிதனுக்குமிடையிலான தொடர்பு அமைந்து காணப்படுகின்றது. இதன்படி மனிதன் என்பவன் அரசின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு கருவியே அன்றி வேறொன்றும் அல்ல. பாசிச அரசு மனிதன் என்பவன் சுதந்திரமும், தனிப்பட்டதன்மையும் முழுமையாக இல்லாத அரசு எனும் பலிப்பீடத்தில் தன்னை அர்ப்பணம் செய்யும் அரசின் அடிமையாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அரசு என்பது இறைவனின் படைப்பாகும் என்ற கூற்றை பரிசீலிக்குக.**

இது அரசு பற்றிய தெய்வீக கோட்பாட்டின் கருப்பொருளாகும். அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் மிகப் பழமையான கோட்பாடு தெய்வீகக் கோட்பாடாகும். அரசு என்பது இறைவனின் படைப்பு என்ற கருத்தை இக் கோட்பாடு முழுமையாக வலியுறுத்துகின்றது. அரசு இறைவனால் படைக்கப்பட்டது மட்டுமன்றி அவ்வரசில் மேற்கொள்ளப்படுகின்ற நிருவாகம் யாவும் இறைவனாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. அரசர்கள் அல்லது ஆட்சியாளர்கள் இறைவனின் பிரதிநிதிகள் என்றும், இறைவனிடமிருந்து அதிகாரங்களைப் பெறும் அரசர்களே சமுதாயத்தில் சட்டத்தை உருவாக்குகிறார்கள் என்றும் இதனால் அச் சட்டங்களுக்கு கீழ்படிதல் மக்களின் கடமை என்றும் கூறப்படுகிறது. மக்கள் சட்டங்களை உருவாக்க முடியாது எனவும் இறைவனின் பிரதிநிதியான மன்னன் மட்டுமே சட்டங்களை உருவாக்க முடியும் எனவும் விரும்பியோ, விரும்பாமலோ சட்டங்களுக்கு கீழ்படிதல் மக்களின் கடமை எனவும் கூறுகின்றது. இங்கு மன்னனின் நிலை இறைவனுக்கு சமமாக மதிக்கப்படுவதனால் அச் சமூகத்தில் மன்னனே மிக உயர்ந்தவனாகவே கருதப்படுகிறான். அம் மன்னன் தெய்வீகச் சட்டத்திற்கு கட்டுப்பட்டவன் எனக் கூறப்பட்ட போதிலும் தெய்வீகச் சட்டத்தையும் பிறப்பிப்பவன் மன்னனாகவே இருப்பதனால் அச் சமுதாயத்தில் அரசனே மிக உயர்ந்தவனாக காணப்படுகிறான்.

அரசென்பது இறைவனின் படைப்பு என்ற கருத்து ஏதோ ஒரு வகையில் நம்பிக்கையின் அடிப்படையிலாயினும் மக்களின் கீழ்படிவை வலியுறுத்திப் பெற்றுக் கொண்டு, சட்டத்தையும் ஒழுங்கையும் சமுதாயத்தில் நிலைநாட்ட உதவியதோடு ஒழுக்கத்தையும், அறநெறியையும் வழியுறுத்துவதற்கு காரணமாக அமைந்தது. இது மாத்திரமன்றி சமுதாயத்தில் ஐக்கியத்தைக் கூட வலியுறுத்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தலைமைத்துவத்திற்கு கட்டுப்படுகின்ற பயிற்சியை பெறுவதற்கும் நாட்டில் குழப்பங்களை இல்லாமல் செய்வதற்கும், முடியாட்சி அதிக முக்கியத்துவம் பெறுவதற்கும், இறைவனின் படைப்பு அரசு என்ற கருத்து உதவியளித்திருந்தது.

இருந்தாலும் அரசென்பது இறைவனின் படைப்பு என்ற கருத்து, மதத்தின் தலையீட்டினை அரசியலில் கண்டிக்கும் மக்கியாவல்லியின் சிந்தனைகள் வலுப் பெற்றதனாலும், மொண்டஸ் கியூவின் வலு வேறாக்கக் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டதாலும், தோமஸ் கொப்ஸ், லொக், ரூசோ போன்றவர்களால் விளக்கும் சமூக ஒப்பந்தக் கோட்பாடு முதன்மை பெற்றதனாலும், மக்களாட்சியினை வலியுறுத்தும் பிரான்சியப் புரட்சி இடம்பெற்றதனாலும் தனது முக்கியத்துவத்தை இழந்து வீழ்சியடைந்தது என்பது முக்கியமானதாகும்.

❖ **மக்களினால் செய்யப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் விளைவே அரசாகும் என்ற கருத்தை விளக்குக.**

இக் கருத்து சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் கருப் பொருளாகும். அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியதும் முக்கியமானதுமான கோட்பாடாக இது அமைகின்றது.

சமூக ஒப்பந்தக் கோட்பாடு 18ம் நூற்றாண்டில் இறுதிக்காலம் வரை தோமஸ் ஹொப்ஸ் (1588-1679), ஜோன் லொக் (1632 -1704),. ஜீன் ஜக்கியூஸ் ரூசோ (1712 -1778) என்பவர்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இவர்களே சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் மூலகர்த்தாவாகத் திகழ்கின்றனர். இக் கோட்பாட்டின் மிகத் தெளிவான கருத்து யாதெனில், அரசென்பது ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக மனிதனால் உருவாக்கப்பட்டது என்பதாகும். இந்தக் கருத்தில் மூன்று சிந்தனையாளர்களும் ஒற்றுமைப்படுகின்றனர். ஆனால் இயற்கை நிலையில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர், அவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண இயல்புகள் யாவை? எங்கனம் அவர்கள் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர் இறைமை யாரிடம் இருந்தது, அரசின் தன்மை போன்ற முக்கிய விடயங்களில் முரண்பட்ட பல சிந்தனைகளை மூன்று சிந்தனையாளர்களும் முன்வைக்கின்றனர். தோமஸ் ஹொப்ஸ் இங்கிலாந்தில் பிறந்தார். சிறுவனாக இருக்கும் போது புத்திக் கூர்மை உள்ளவராக காணப்பட்டார். ஆறாவது வயதில் கிரேக்கம், இலத்தின் ஆகிய மொழிகளைக் கற்றார். 15 வயதில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். 1640ல் ஏற்பட்ட குழப்பம் காரணமாக பெரிஸுக்கு(peris) தப்பியோடினார்.

1651ம் ஆண்டில் **<u>லெவியதான்</u>** என்ற நூலை வெளியிட்டார். இந்த நூலின் மூலமாகவே மக்களின் இயற்கை நிலையைப்பற்றி தெளிவாகக் கூறுகிறார். ஜோன்லொக் என்பவர் இங்கிலாந்தில் பிறந்தார். 1688ம் ஆண்டில் இடம் பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியின் போது இங்கிலாந்திலேயே வாழ்ந்தார். 1690ம் ஆண்டில் சிவில் அரசாங்கத்துடைய **<u>இரண்டு உடன்படிக்கைகள</u>** என்ற நூலை வெளியிட்டார். இந்த நூலின் மூலமே மக்களின் இயற்கை நிலையைப்பற்றி ஆராய்கிறார்.ரூசோ என்பவர் சுவிற்சர்லாந்தில் பிறந்த போதும் பிரான்சிலேயே வாழ்ந்தார். 1762ம் ஆண்டில் சமூக ஒப்பந்தம் என்ற நூலை வெளியிட்டார். இந்த நூலின் மூலமே மக்களின் இயற்கை நிலையைப் பற்றி ஆராய்கிறார். தோமஸ் கொப்ஸ் இயற்கை நிலையில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர், அவர்களுடைய குண இயல்புகள் யாவை என்பன பற்றிக் கூறுகின்ற போது மனிதன் சுயநலமிக்கவனாகவும், இயற்கை நிலையில் மனிதன் காட்டுமிராண்டியாகவும், வாழ்க்கை குறுகியதாகவும், மரணப்பயம் நிறைந்தவனாகவும், வாழ்க்கை தனிமையானதாகவும் இருந்தது எனக் கூறுகின்றார்.

மேலும் சமூகதில் நீதியோ, பாதுகாப்போ நிலவவில்லை. ஒருவருக்கொருவர் சண்டை பிடிப்பவனாக வாழ்ந்தான். ஓநாய் போன்று அலைந்து திரிந்தான் , மிருகத்தைவிட மோசமானவனாக வாழ்ந்தான் என்றும், இச் சமூகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடும் இல்லை, வசதியான கட்டடங்களும் இல்லை. கலைகள், இலக்கியங்கள் எதுவும் இல்லை எனவும் கூறுகின்றார்.

இவ்வாறு காட்டுமிராண்டிகளாக உறவு அற்ற முறையில் ஒருவருக்கொருவர் முரண்பட்ட வகையில் வாழ்க்கை நடாத்திய மக்கள் தமது பாதுகாப்புக் கருதி தமக்கிடையே ஒரு ஒப்பந்தத்தைச் செய்து அவ் ஒப்பந்தத்தின் மூலம் வாழத் தலைப்பட்டனர். இதுவே சமூக ஒப்பந்தம் எனக் கூறுகின்றார். **ஜோன் லொக்** மக்களின் இயற்கை நிலையைப்பற்றிக் கூறுகின்ற போது மனிதன் சுயநலம் கொண்டவனாக வாழவில்லை என்றும், மனிதன் அமைதியும், நல்லொழுக்கம் உடையவனாகவும் இருந்ததனால் பாதுகாப்பாக வாழ்ந்தான் என்றும், மக்கள் சகல உரிமைகளைப் பெற்று ஒருவருக் கொருவர் ஒத்துழைத்து சமாதானமாகவும் வாழ்ந்தனர் என்றும் லொக் குறிப்பிடுகிறார். மேலும் உடைமைகள் அதிகமாக இருந்தமையாலும் அவை பொதுச் சொத்தாக இருந்தமையாலும் பிரச்சினை ஏற்படவில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல சொத்துக்களில் பிரச்சினை ஏற்பட்டு இயற்கை நிலையில் குறைபாடு ஏற்பட்டது. . இயற்கை நிலையில் போர் ஏற்படு வதற்கான சூழ்நிலை இருந்தது. எந்த நேரமும் போர் ஏற்படலாம் என்ற அச்சம் இருந்தாகவும் லொக் கூறுகிறார். அத்தகைய போர் நிகழ்வதைத் தடுக்கவே மக்கள் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர் எனவும் கூறுகிறார்.

**ரூசோ** மக்களின் இயற்கை நிலையைப்பற்றிக் கூறுகின்ற போது ஹொப்ஸின் சிந்தனையில் உருவானதைப் போல முழு காட்டு மிராண்டிகளாகவோ அல்லது லொக் குறிப்பிடுவது போல நாகரீகமடைந்தவர்களாகவோ இல்லாமல் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட பண்புகள் உடையவர்களாக காண்கிறார். மேலும் இந்த இயற்கை நிலையில் வாழ்ந்த மக்கள் சகல உரிமைகளையும் பெற்று வாழ்ந்தனர் என்றும், இதனால் சமத்துவம் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி சமாதானமும் அச் சமுதாயத்தில் நிலவியது என்றும் ரூசோ கூறுகிறார். அக் காலதில் சமுதாயதில் ஏற்பட்ட வளர்ச்சியால் பொருளியல் ரீதியாக பொருட்கள், சேவைகள் என்பனவற்றின் சேமிப்பு தோன்றிய போது அமைதிக்கு பாதகமான நிலை ஏற்பட்டது. இந்த பாதிப்பில் இருந்து தம்மை பாதுகாக்க மக்கள் தமக்கிடையே ஓர் உடன்படிக்கை செய்து பொது நலனைக் கருத்தில் கொண்டு தமது உரிமைகளை அரசிடம் ஒப்படைத்தனர் என ரூசோ கூறுகின்றார்.

மக்கள் ஒப்பந்தம் செய்த பின்னா், அவர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் எவ்வாறு கொடுக்கின்றனர் என்பதில் மூன்று சிநதனையாளர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருந்தன. தோமஸ் ஹொப்ஸ் மக்கள் தமது உரிமைகள் அனைத்தையும் ஒரு மனிதனிடம் ஒப்படைத்து அம் மனிதனின் ஆணைக்கு கீழ்படிந்து வாழ உடன்பட்டு கொண்டனர் எனக் கூறுகின்றார். இங்கு இந்த தனிமனிதனே இறைமையாளன் என்றும் அவனுடைய ஆணைகளே சட்டங்கள் என்றும் அச் சட்டங்களுக்கு சமூகத்தில் சகலரும் கீழ்படிய வேண்டும் எனவும் ஏன், எதற்கு என்ற வினாக்களை மக்கள் முன்வைக்க முடியாது என்றும் கூறுகின்றார்.

ஜோன்லொக் ஒப்பந்தம் செய்த பின்னர் மக்களின் உரிமைகளையும் கடமைகளையும் தனிமனிதனிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக மன்னனிடமும் மக்களிடமும் ஒப்படைத்தனர் எனக் கூறுகின்றார். ரூசோ கூறுகின்ற போது, மக்கள் ஒப்பந்தம் செய்த பின்னர் தமது உரிமைகளையும், கடமைகளையும் ஆட்சியாளனிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக சமூகத்திடம் ஒப்படைக்கின்றனர். சமூகத்திலுள்ள மக்களே இறைமையாளன் எனக் கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை முழுமையாக ஆராய்ந்து நோக்குகின்ற போது, தோமஸ் ஹொப்ஸ் பாதுகாப்பின் அடிப்படையில் முடியாட்சியை அல்லது தனிமனித சர்வதிகார ஆட்சியை அல்லது வரம்பில்லாத முடியாட்சியை கூறுவதையும், ஜோன்லொக் சுதந்திரத்தின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சியை கூறுவதையும், ரூசோ சமத்துவத்தின் அடிப்படையில் மக்களாட்சியைக் கூறுவதையும் நோக்கக் கூடியதாக உள்ளது. மொத்தத்தில் இவர்கள் ஒவ்வொருவரும் தமது காலப்பகுதியின் சூழ் நிலைக்கு இணங்க சிந்தனைகளை முன்வைத்துள்ளனர் என்ற உண்மையை அவர்களது கோட்பாடுகளை நோக்குகின்ற போது புரிந்து கொள்ள முடியும்.

### ❖ "அரசு ஒரு சமூகத் தாபனமாகும்" என்ற கூற்றை பரிசீலிக்குக.

இது அரசு பற்றிய தாராளவாத கருத்தின் சாரம்சமாகும். மனிதர், நாகரீக வாழ்க்கைக்கு உட்பட்டதன் பின்னர் தனது தனிப்பட்டதும் பொதுவானதுமான நலன்களுக்காக ஒழுங்கமைய முற்பட்டதடன் அந்த ஒழுங்கமையும் நலன் இறுதியானதும், உச்சமானதுமான கட்டம் அரசாக ஒழுங்கமைந்தமையாகும். என்று தாராளவாதிகள் கருதுகின்றனர். மனிதர் சுயமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாத பௌதீக நலன்கள், பாதுகாப்பு, பொதுநலச் சேவைகள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் களைதல், குறைந்த வருமானம் பெறுவோருக்கு மானியங்கள் வழங்குதல், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல், உரிமைகளை பாதுகாத்தல், கல்வி, சுகாதாரம் போன்றவற்றை வழங்குதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு சகலரினதும் பங்குபற்றலோடு அரசை ஒழுங்கமைத்துக் கொண்டனர். இதன்படி அரசின் பிரதான நோக்கம் மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றி மனிதருக்கு மகிழ்ச்சியானதும் கௌரவமிக்கதுமான ஒரு சமூக வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றிக் கொள்வதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதாகும் என்று தாராளவாதிகள் கூறுகின்றனர்.

அரசு ஒரு சமூகத்தாபனமாயினும் அரசு பெற்றுள்ள இறைமை அதிகாரத்தின் காரணமாகவே அது ஏனைய சமூகத்தாபனங்களை விட வேறுபட்டதாகவும், உயர்ந்தததாகவும் காணப்படுகின்றது. இவ்வதிகாரத்தின் மூலமே அரசு சமூகத்தின் பொது நன்மைக்காகச் சட்டங்களைப் பிறப்பித்து நடைமுறைப் படுத்துகின்றது.இவ்வாறான சட்டங்களின்றி தனிப்பட்டதும் பொதுவானதுமான நன்மையை அடைவதற்கு மனிதரை ஒழுங்குபடுத்த முடியாது என்று தாராளவாதிகள் வலியுறுதிதுகின்றனர்.

**குறிப்பு :**

"அரசென்பது பொதுநலம் பேணும் அமைப்பாகும்" என்ற கூற்றைப் பரிசீவலிக்குக என்ற வினா வந்தாலும் மேலுள்ள விடையே எழுத வேண்டும்.

### ❖ "அரசு வர்க்கப் போராட்டத்தின் விளைவாகும்" என்ற கூற்றை பரிசீலிக்குக.

இது அரசுபற்றிய மாக்சீயக் கருத்தின் சாரம்சமாகும். சமூகப் படிமுறை வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் உருவாகும் தனியார் சொத்துடமை முறையினை அடிப்படையாகக் கொண்டு மனித சமூகத்தில் உள்ளோர், இல்லாதோர் என்ற இரு வர்க்கங்கள் தோன்றியதுடன் சமூகத்தின் இருப்பு தொடர்பாக அவ்விரு வர்கக்ங்களுமிடையில் ஏற்பட்ட மோதலின் விளைவாக முதலாளித்துவ வர்க்கம் தனது வர்க்க நலன்களைப் பாதுகாப்பதற்கும் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதற்கும், அடக்கியாள்வதற்கும் அரசைத் தாபித்தனர் என்று மாக்சீயவாதிகள் கூறுகின்றனர். இதன் அடிப்படையில் மாக்சீயவாதிகள் அரசை ஒரு வர்க்கக் கருவியாகவே கண்ணுற்றனர். இவ்வாறு வர்க்கப்போராட்டத்தின் விளைவாக அடிமை முறைச் சமுதாயத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய அரசு பின்னர் மானிய முறைச் சமுதாயத்தினூடாகத் தற்கால முதலாளித்துவ சமூகம் வரை வளர்ச்சியடைந்துள்ளது.

அடிமை முறை சமுதாயத்தில் அடிமைகள், அடிமைகளின் சொந்தக்காரர்கள் என்ற இரு வர்க்கங்கள் உருவாகி இவ்வர்க்கங்களுக்கிடையே முரண்பாடு தோன்றும் வேளையில் அடிமைகளின் சொந்தக்காரர் வர்க்கத் தன்மையும், தனது சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக அரசைத் தோற்றுவித்தனர். இங்கே அடிமைகளின் சொந்தக்காரர்களுக்கு அரசு தோன்றுவதால் அரசு ஒரு வர்க்கக் கருவி எனலாம்.

மானியமுறை சமுதாயத்தில் பிரபுக்கள், குடியான் என்ற இருவர்க்கங்கள் உருவாகி அந்த இரு வர்கங்களுக்கிடையே முரண்பாடு வளர்ந்த போது பிரபுக்கள் வர்க்கம் தன்னை பாதுகாப்பதற்காக அரசு என்ற தாபனத்தை அமைத்தனர். இங்கேயும் பிரபுக்களுக்காகவே அரசு அமைக்கபடுவதனால் அரசு ஒரு வர்க்கக் கருவியாகும்.

முதலாளித்துவ சமூகத்தில் முதலாளி, தொழிலாளி, என்ற இரு வர்க்கங்கள் தோன்றும். இந்த இரு வர்கங்களுக்கிடையே போராட்டம் ஏற்படுகின்ற போது முதலாளித்துவ வர்க்கம் தங்களையும், தங்களது உடமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அரசைத் தாபிப்பர். இங்கேயும் முதலாளிகளின் நலனைப் பேணுவதற்காகவே அரசு அமைக்கப்படுவதால் அரசு ஒரு வர்க்கக் கருவி என மாக்சீயவாதிகள் கூறுகின்றனர்.

பின்னர் முதலாளிக்கும், தொழிலாளிக்குமிடையே ஏற்படும் போராட்டத்தில் தொழிலாளிகள் வெற்றி பெற்று கம்யூனிச சமூகம் உருவாகி முதலாளித்துவ அரசு அழிக்கப்பட்டு விடும். கம்யூனிச சமூகத்தில் அரசு இருக்கமாட்டாது என்று மாக்சியவாதிகள் கூறுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **"அரசு சர்வ வல்லமை பொருந்தியதாகும்" என்ற கூற்றை பரிசீலிக்குக.**

இது அரசு பற்றிய இலட்சியவாதத்தினதும் அதனை அடியொற்றி உருவாகும் பாசிசவாதத்தினதும் கருப்பொருளாகும். இக்கருத்து மனிதனையும் சமூகத்தையும் விட அரசை உயர்ந்ததாகவும் சிரேஷ்டமானதாகவும் காட்டுகிறது.

அரசின் தன்னிகரற்ற அதிகாரத்திற்கு மனிதனைக் கீழ்படிய வைத்து ஆட்சி புரிதல் பாசிசத்தின் பிரதான பண்பாகும். இதற்கு அரச அதிகாரம் தன்னிகரற்றதாக ஆக்குதல் அவசியம். மனிதத் தாபனங்களில் அரசே உயர்ந்ததும் சிரேஷ்டமானதுமாகும். அரச அதிகாரத்திற்குச் சமமானதும் அதற்கு சவால் விடுவிக்க கூடியதுமான வேறு எந்தவொரு அதிகாரமும் இல்லை. அரசின் தன்னிகரற்ற அதிகாரம் மனித வாழ்க்கையின் சகல பகுதிகளிலும் பரவிக் காணப்படுகின்றது. அதற்கு சவால் விடுவதற்கோ, அடிபணியாமல் இருப்பதற்கோ மனிதனுக்கு உரிமையில்லை. அரசுக்கேயுரிய விருப்பும், நோக்கங்களும் மேலானவையாகும். மனிதர் தமது தனிப்பட்ட விருப்பங்களையும், நோக்கங்களையும் அரசுக்கு கீழ்ப்படுத்த வேண்டும். மனிதனின் இருப்பு அரசின் இருப்பிலேயே தங்கியுள்ளது. அரசின் விருப்பின் படியே மனித விருப்பின் ஆரம்பமும் இறுதியும் நிர்ணயமாகின்றது. இவ்வாறு அரசின் தன்னிகரற்ற அதிகாரத்தை உருவாக்கும் பாசிசவாதிகள் அவ்வதிகாரத்தை அனைத்துக்கும் மேலானதாக விளங்கும் சர்வ வல்லமை பொருந்தியதாகும் என்று வலியுறுத்துகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாராண்மை வாதம்

### ❖ தாராண்மை வாதம் (தாராண்மை ஜனநாயக் கோட்பாடு) என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

தாரண்மை வாதம் என்பது ஏனைய அரசியல் சிந்தனைகளைப் போன்று தெளிவான தத்துவத்தைக் கொண்ட ஒரு கோட்பாடல்ல. அது முதலாளித் துவத்தின் தோற்றத்தோடு ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்த அரசியல், பொருளாதார, சமூகக் கருத்துக்களின் குவியலாகும். அதற்கு காரணம் அக் கோட்பாடு உருவாகிய காலம் முதல் இன்று வரை பல நாடுகளையும் சேர்ந்த பல்வேறு அறிஞர்களாலும் அவ்வக் காலத்தின் பொருளாதார, அரசியல் சமூக சூழ்நிலைகளுக்கேற்ப முன்வைக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களைக் கொண்டு வளர்ச்சியடைந்து வந்திருப்பதனாலாகும். இந்த வகையில் தாராண்மை வாதமானது

01. பழம் தாராண்மை வாதம்

02. நவீன தாராண்மை வாதம்.

03. பின்வந்த நவீன தாராண்மை வாதம். என்ற கட்டங்களினூடாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

தாராண்மை வாதத்தைப்பற்றி பின்வரும் விளக்கங்கள் கவனிக்க கூடியதாக உள்ளது.

01. சமூக, சமய, பொருளாதார அரசியல் பரப்பில் மனிதனின் சுதந்திரத்தை வலியுறுத்தும் ஓரு கோட்பாடே தாராண்மை வாதமாகும்.
02. சமய ஒழுக்க செயற்பாடுகளை மனித சுதந்திரத்துடன் தொடர்பு படுத்துகிறது. அதனால் தாராண்மை வாதம் உலோகாயத் தன்மையைக் கொண்டுள்ளது.
03. பொருளுற்பத்தி, பங்கீடு, வர்த்தகம், ஏற்றுமதி, இறக்குமதி போன்றவற்றில் சுதந்திரத்தை வலியுறுத்துகின்றது.
04. அரசின் கட்டுப்பாட்டை குறைந்த மட்டத்திற்குக் கொண்டு வந்து அரசில் சுதந்திரத்தை உறுதிப்படுத்த முயல்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **அரசினது தாராண்மை வாத ஜனநாயக் கோட்பாட்டின் அபிவிருத்தியை விபரிக்குக.**

அரசின் தாராண்மை ஜனநாயகக் கோட்பாடானது பல நூற்றாண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்துள்ள ஒரு கோட்பாகும். அதன் வரலாறு புராதான கிரேக்கம் வரை நீண்டு செல்கின்றது. தற்காலத்தில் அது ஐரோப்பாவில் 18 ஆம் நூற்றாண்டிலேயே அறிமுகமாகின்றது. ஜோன்லொக், அடம் ஸ்மித், டேவிட் ரிகாடோ போன்ற பழம் தாராண்மைவாதிகள் அரசின் தலையிடாக் கொள்கையின் மூலம் அரசு சமூகத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் கருமத்தோடு மட்டும் சுருங்கிய ஒரு பொலீஸ் அரசாக அறிமுகப்படுத்தினர்.

அரசாங்கம் மிகக் குறைவாக ஆட்சி புரியும் நிலையின் கீழ் தனி மனித சுதந்திரத்தை உச்சமாக அனுபவிக்க கூடிய ஒரு சமூக முறையை தோற்றுவிப்பதே தலையிடாக் கொள்கையின் பிரதான தாத்பரியமாகும். வணிகமயமாக்கம், கைத்தொழில்மயமாக்கம் என்பவற்றால் 19ஆம் நூற்றாண்டில் முதலாளித்துவ முறையில் உருவான பாரிய பிரச்சினை களுக்கு பரிகாரம் காண்பதற்கும் அப்பிரச்சினைகளுக்கு அவற்றைத் தோற்றுவித்த முதலாளித்துவத்தை எதிர்பதற்காக உருவாகிய சோசலிசத்தை எதிர்கொள்ளுவதற்கும் ஏதுவான வகையில் பழம் தாராண்மைவாதத்தின் சீர்திருத்தமே நவீன தாராண்மை வாதம் என்று அழைக்கப்பட்டது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியால் உருவாகிய பொருளாதார சமத்துவம், வறுமை, வாழ்க்கை பிரச்சினைகள், சமூக மற்றும சுகாதாரப் பிரச்சினைகள் வேலை நேரம், மற்றும் ஓய்வு நேரப் பிரச்சினைகள், தொழிலாளர்களின் உரிமைப் பிரச்சினைகள் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியாததனால் அரசின் தலையிடாக் கொள்கை கைவிடப்பட்டு அரசின் தலையீடு அவசியமானது என்று வலியுறுத்தப்பட்டது. இதன் விளைவாக புதிய எண்ணக் கருக்கள் வலியுறுத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பொதுநல வாதம் :

அரசு மனித வாழ்கையின் பொதுத் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்யும் பணியை நிறைவேற்ற வேண்டும். இதுவே நலன்புரி அரசு என அழைக்கப்படுகின்றது.

02. வரையறுக்கட்பட்ட மனித சுதந்திரம்.

03. சமூக சீர்திருத்தம்

இக் கருத்துக்கள் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் முன்வைக்கப்பட்டது. இதனால் அரசின் தலையிடாகக் கொள்கை பழமையாக்கப்பட்டது.

21ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் குறைந்தபட்ச அரசு பற்றிய கொள்கை, அரசின் பொதுநல பணிகளைப் தனியார்மயமாக்குதல், அரசாங்கத்தை மீளமைத்தல் போன்ற கருத்துக்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. எதிர்காலத்தில் இக் கொள்கை மேலும் மாற்றத்திற்கு உட்படுத்தப்படலாம்.

## ❖ ஒரு தாராண்மை ஜனநாயக அரசின் பிரதான இயல்புகள் யாவை?

01. சமூகத் தாபனங்களில் உயர்தாபனமாக அரசு இருத்தல் வேண்டும்.
02. பொது நன்மையை நிறைவேற்றிக் கொள்வதற்கு மனிதனால் உருவாக்கப்பட்ட ஓர் தாபனமாக அரசு இருத்தல் வேண்டும்.
03 அரசு சகலருக்கும் சமத்துவத்துடன் செயற்பட்டு மனித உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும்.
04. சமூகத்தின் பொது நலனைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
05. சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாத்தல் மற்றும் நிலைநாட்டுதல்.
06. பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் மேற்கொள்ளுதல்.
07. மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல்.
08. சகலரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு பொதுச் சட்டத்தின் கீழ் சமூக மோதல்களைத் தீர்த்து வைக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம்

❖ **"அரசாங்கம் என்றால்" நீர் விளங்கிக் கொள்வது யாது?**


அரசின் அடிப்படை இயல்புகளில் அரசாங்கம் ஒன்றாகும். அரசாங்கம் என்பது குறிக்கப்பட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் நலன்களைப் பேணவும் பாதுகாக்கவும் அரசின் பெயரால் தொழிற்படும் ஒரு முகவராகும்.

இந்த வகையில் அரசும், அரசாங்கமும் ஒன்றல்ல, அரசின் ஒரு கருவியே அரசாங்கம் ஆகும். அரசின். செயற்பாட்டை அரசாங்கம் வாயிலாகவே காணலாம். ஓர் அரசினுடைய நிலைப்பேற்றிற்கு அரசாங்கம் அவசியமானாதாகும். அரசு நிலையானது, ஆனால் அரசாங்கம் மாறக்கூடியது. தெளிவில்லாமல் இருக்கின்ற ஓர் அரசுக்கு உருவம் கொடுப்பதற்காக இவ்வரசாங்கம் அமைகிறது. ஒவ்வொரு அரசாங்கமும் மூன்றுவிதமான பணிகளை மேற்கொள்கின்றன. சட்டமியற்றுதல், நிர்வகித்தல், நீதி பரிபாலனம் செய்தல் என்பனவே அம் மூன்று பணிகளுமாகும். சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய பிரிவுகளே இப்பணிகளை மேற்கொள்கின்றன. நீதித்துறை ஏனைய பிரிவுகளையும் கட்டுப்படுத்துகின்றது.

பேராசிரியர் கார்ணர் அரசாங்கத்தினைப் பற்றிக் கூறுகின்ற போது அரசின் அல்லது மக்களின் விருப்பங்களை, கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்கு கொண்டு வரும் பிரதிநிதி அரசாங்கமாகும் என்று கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் அமைப்பை ஒரு படரீதியாக விளக்கலாம்.




❖ **அரசாங்கத்தின் தன்மையைக் குறிப்பிடுக?**

01 அரசியல் யாப்பு வரையறைகளுக்கு உட்பட்டே தனது அதிகாரத்தை அரசாங்கம் பிரயோகிக்கின்றது.

02. சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை ஆகிய நிறுவனங்களால் அரச அதிகாரத்தை நிலைநாட்டுகிறது.

03. சர்வதேச சட்டங்கள் அரசுகளை அங்கீகரிக்கின்றதே ஒழிய அரசாங்கங்களை அல்ல.

04. அரசின் செயற்பாடுகள் கண்ணுக்கு புலனாகுவது அரசாங்கத்தின் மூலமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. அரசாங்கம் இல்லாமல் அரசு நிலைபெறவோ, செயற்படவோ முடியாது.

06. அரசாங்கமானது தனது அடையாளம், அதிகாரம், நடவடிக்கை என்பனவற்றினால் அரசுடன் ஒன்றினைந்துள்ளது.

07. அரசாங்கமானது, சட்டத்துறை,நிர்வாகத்துறை,நீதித்துறை ஆகிய நிறுவனங்களைக் கொண்டு அதிகாரத்தை நிலைநாட்டுகிறது.

## ❖ ஒரு நாட்டிற்கு ஏன் அரசாங்கம் அவசியமானது?

01 அராஜகத் தன்மையை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் அவசியம். உதாரணம் மோதல் ஏற்படும் போது சமூகப் பொருளாதார அரசியல் முன்னேற்றங்கள் ஏற்படாது.

02. தனிப்பட்ட வகையில் தனி மனிதனதும் பொதுவான முழுச் சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறைப்படி மக்களைக் கட்டுப்படுத்தி ஆட்சி புரிவதற்கும் அரசாங்கம் அவசியம்.

03. நாட்டை முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான பொதுத்துறைக் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் அவசியம்.

04. அரசின் இருப்புக்கு அரசாங்கம் அவசியம். அரசாங்கம் இன்றேல் அரசு செயலற்றுப் போகும்.

05. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கம் அவசியம்.

06. தேசிய பாதுகாப்பையும், அரசியல் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காக அரசாங்கம் அவசியம்.

07. பிரஜைகளுக்கு அடிப்படைப் பொது நலன்களை வழங்குவதற்கு அரசாங்கம் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசாங்கத்தின் பணிகளைக் குறிப்பிடுக.**

அரசாங்கத்தின் பணிகளை வெளிவாரியானவை, உள்வாரியானவை என்று இரண்டாகப் பிரிக்கலாம்.

**வெளிவாரியான பணிகள் :**

01 தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல். இது மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

அ. ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல்

ஆ. அரசின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்

இ. அரசின் பௌதீக இருப்பை பாதுகாத்தல்.

02. தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்தல்.

03. தேசிய பொது நலனை மேம்படுத்துதல்

04. தேசிய கௌரவத்தை பாதுகாத்தல்

05. தேசிய அரசியல் கருத்தியலைப் பாதுகாத்தல்

**உள்வாரியான பணிகள் :**

01 சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுதல்.

**பொருளாதார முகாமைத்துவம் :**

01 பொருளாதாரத்தின் நிலைபற்றி அவதானமாக இருத்தல்

02. பொருளாதார விருத்தியை வேகப்படுத்தல்

03. பொருளாதாரத்தின் போக்கை நிலைப்படுத்துதல்

04. பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை விருத்தி செய்தல்.

05. கீழ்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல்

06. அரச தொழில்களைத் தாபித்து நடைமுறைப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகப் பொதுநலன் :**

01 முதியோர், அங்கவீனர்கள், தொழிலற்றவர்கள் மற்றும் நாதியற்றவர்களுக்கு உதவி புரிதல்.

02. சுகாதார மற்றும் சுக நலச் சேவைகளை நடாத்துதல்.

03. வீடமைப்பு, வீடு நிர்மானிப்பதற்கு உதவி புரிதல்.

04. சமூகக் காப்புறுதி

05. தொழில் வாய்ப்புகளைக் கூட்டுதலும், தொழில் பயிற்சிகளை நடாத்துதலும்

06. இராணுவத்திலிருந்து இளைப்பாறியோர் மற்றும் அநாதை போன்ற விஷேட பகுதியினருக்கு உதவுதல்.

**சமூக முகாமைத்துவம் :**

01 மோதல் முகாமைத்துவமும், மோதல் தீர்த்தலும்

02. தொழிலாளர் பிணக்குகளைத் தீர்த்தல்

03. அனர்த்த மற்றும் நிவாரணச் சேவைகளை மேற்கொள்ளுதல்.

**சூழல் முகாமைத்துவம் :**

01 இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்

02. பொதுப் பூங்காக்களையும் பொது நிலங்களையும் பரிபாலித்தல்.

03. சுத்தமான காற்றையும், நீரையும் வழங்குதல்.

04. பாதகமானதும் கதிர் இயக்கமும் உடைய பொருட்களைக் கட்டுப் படுத்தலும் அழித்தலும்.

**கல்வி மற்றும் அடையாளப் பணிகள்:**

01 கல்வியை வழங்குதல்

02. கலாச்சார மரபுரிமைகளைப் பாதுகாத்தலும், விருத்தி செய்தலும்.

03. அரும் பொருட்காட்சிச்சாலைகள், மிருகக்காட்சிச் சாலைகள், தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனப்பூங்காக்கள், பொதுமக்கள் நாடக அரங்குகள், கலாச்சார நிலையங்கள் என்பனவற்றைக் கொண்டு நடாத்துதல்.

04. தேசிய சின்னங்களை பேணுதலும் அவற்றின் கௌரவத்தைப் பாதுகாத்தல்.

05. தேசப்பற்றையும், தேசிய ஐக்கியத்தையும் விருத்தி செய்தல்.

**அரசாங்கங்களை வகைப்படுத்துக.**

அரசாங்கங்கள் பற்றிய வகையீட்டை முதன்முதலாக மேற்கொண்டவர் பிளேட்டோ ஆவார். அவர் அரசாங்கங்களை நல்லவை, தீயவை என 7 ஆக வகைப்பாடுத்தினார். அவையாவன .

01 இலட்சிய அரசாங்கம்

02. முடியாட்சி

03. பிரபுக்களின் ஆட்சி

04. சனநாயக ஆட்சி

05. சர்வாதிகார ஆட்சி

06. சில்லோராட்சி

07. புதிய சனநாயக ஆட்சி

இவற்றுள் 1-4 வரையுள்ளவை நல்லரசாங்கங்கள் என்றும் 5 - 7 வரையுள்ளவை தீய அரசாங்கங்கள் என்றும் குறிப்பிடுகின்றார். மக்களின் நன்மை, மற்றும் பொதுநலன்களுக்காக செயற்படும் அரசாங்கங்கள் நல்லரசாங்கங்கள் என்றும் ஆட்சியாளர்களின் நன்மைக்காக மட்டும் செயற்படும். அரசாங்கங்கள் தீய அரசாங்கங்கள் என்றும் வகைப்படுத்து கிறார். அரசாங்கங்களை வகைப்படுத்திய பிறிதொரு அறிஞா அரிஸ் டோட்டிலாவார். அரசாங்கத்தை இயக்கும் மனிதர்களின் எண்ணிக்கை ,அரசாங்கத்தின் நோக்கங்கள் என்பனவற்றின் அடிப்படையில் அவர் அரசாங்கங்களை பின்வருமாறு வபைப்படுத்துகின்றார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| ஆட்சியில் பங்கேற்கும் ஆட்களின் எண்ணிக்கை | நல்லரசாங்கம் | தீய அரசாங்கம் |
|---|---|---|
| 1. தனியாள் (அரசாங்கம்) | முடியாட்சி | சர்வாதிகாரம் |
| 2. சிலர் (அரசாங்கம்) | பிரபுக்களின் ஆட்சி | சில்லோராட்சி |
| 3. பலரின் அரசாங்கம் | சனநாயகஆட்ச | தீயசனநாயகம் |

இவற்றுள் செல்வந்தர்களான சிறுபான்மையினரின் பொருளாதாரப் பலமும் வறியவர்களின் அரசியல் அதிகாரமும் கலந்த அரசியல் யாப்பின் கீழ் ஒழுங்கமைந்த மத்தியதர வர்க்கத்தினரால் நடாத்தப்படும் அரசாங்கம் சிறந்த அரசாங்கமாகும் என்று கருதுகின்றார்.

நவயுகத்தில் உருவாகிய அரசாங்கங்களின் இயல்புகளுக்குகேற்ப அரசாங்கங்கள் பற்றிய வகையீடும் மாற்றமுற்றது. J.A.R மரியட் அரசாங்கங்களை பின்வருமாறு வகைப்படுதினார்.


01. அதிகாரப்பங்கீடு செய்யப்பட்டிருக்கும் விதத்தின்படி சமஷ்டியாட்சி, ஒற்றையாட்சி.

02. யாப்பு திருத்த முறையின்படி நெகிழும், நெகிழாயாப்பு அரசாங்கங்கள்.

03. சட்ட நிறைவேற்றுத் துறைகளின் தொடர்புகளின் படி சனாதிபதி அரசாங்கம், கபினட் அரசாங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்டீவன் லீகொக் நவீன அரசாங்கங்களை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **சர்வாதிகார அரசாங்கம் :**

ஒரு தனி மனிதன் தனக்கு தேவையான வகையில் அதிகாரத்தை பிரயோகித்தல், மக்களுக்கு பொறுப்புக் கூறாமை அரசாங்கத்தின் அமைப்பையும், பணிகளையும் வேறுபடுத்தாமை அவ்வாறு செய்யின் அது ஆட்சியாளரின் தேவைக்கேற்ப மேற்கொள்ளுதல்.

02. **வரையறுக்கப்பட்ட முடியாட்சியுடைய ஒற்றையாட்சி மற்றும் பாராளுமன்ற அரசாங்கங்கள்**

அரசின் தலைவர் முடியாயினும் அதன் அதிகாரம் வரையறுக்கப்பட்டிருத்தல், உண்மையான நிறைவேற்று அதிகாரத்தை கபினட் கொண்டு நடாத்துதல், அரசியல் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் மத்திய அரசின் உயர்தன்மை.

உதாரணம்: பிரித்தானியா, டென்மாக், ஜப்பான், நோர்வே, சுவீடன்.

03. **வரையறுக்கப்பட்ட முடியாட்சியுடைய ஒற்றையாட்சி மற்றும் பாராளுமன்றம் அல்லாத அரசாங்கங்கள் :**

அரசின் தலைவர் முடியாயினும் அதன் அதிகாரம் வரையறுக்கப்பட்டிருத்தல், ஜனாதிபதியின் தலைமையின் கீழமைந்த அரசாங்கத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல், மத்திய அரசு உயர் தன்மை பொருந்தியதாக இருத்தல்.

உதாரணம்: 1914க்கு முன்னர் லக்சம் பேர்க், பிரஷ்யா, சர்பியா, போன்ற நாடுகளில் இருந்த அரசாங்கங்கள்.

04. **வரையறுக்கப்பட்ட முடியாட்சியையுடைய சமஷ்டி மற்றும் பாராளுமன்ற அரசாங்கங்கள்:**

உதாரணம்: அவுஸ்ரேலியா, கனடா, இந் நாடுகள் இன்றும் பிரித்தானியா மகா ராணியாரை தமது அரசுத் தலைவராக ஏற்றுக் கொள்ளுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05. வரையறுக்கப்பட்ட முடியாட்சியையுடைய சமஷ்டி மற்றும் பாராளுமன்ற அல்லாத அரசாங்கங்கள்:**

1914 க்கு முன்னர் ஜேர்மனி, ஹங்கேரி, ஆஸ்திரியா போன்ற நாடுகளில் இவ்வரசாங்க முறை நிலவியது.

**06. குடியரசு - ஒற்றையாட்சி - பாராளுமன்றமுறை அரசாங்கம்:**

உதாரணம்: பிரான்சின் 4ஆம் குடியரசு.

**07. குடியரசு-ஒற்றையாட்சி - பாராளுமன்ற முறையல்லாத அரசாங்கம்:**

உதாரணம்: தற்போதைய பிரான்சின் 5ஆம் குடியரசு அரசாங்கம், பொலிவியா, சிலி, கியுபா, பனாமா, கொஸ்டாரிக்கா, ஹொண்டுராஸ் போன்ற இலத்தின் அமெரிக்க நாடுகளிலும் இம் முறை நிலவுகிறது.


**08. குடியரசு - சமஷ்டியாட்சி - பாராளுமன்ற அரசாங்கம் :**

இந்தியா, ஜேர்மன் போன்ற நாடுகளில் இம்முறை காணப்படுகிறது.

**09 குடியரசு-சமஷ்டியாட்சி - பாராளுமன்ற முறையல்லாத அரசாங்கம்:**

உதாரணம்: ஐக்கிய அமெரிக்கா, சுவிஸ்சர்லாந்து, பிரேசில், மெக்சிக்கோ போன்ற நாடுகளில் உள்ள அரசாங்கங்கள்.

லீகொக்கின் வகையீட்டின் சில முறைகள் இன்று காணப்படுவதில்லை. அதனால் தற்கால அரசாங்கங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட இராணுவ ஜுண்டாக்கள் நடாத்தும் (இராணுவ ஆட்சி) அரசாங்கங்களும் தற்போது காணப்படுகின்றன. உ-ம் : பாகிஸ்தான், சூடான், சிலி, மியன்மார், பிஜி.

**ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் பிரதான பண்புகள் யாவை?**

01 **சட்டமுறைத் தன்மை :**

அரசாங்கங்கள் சட்டரீதியான முறையில் தெரிவு செய்யப்படுதலே இதன் பொருளாகும். அதாவது பெரும்பான்மையினரின் விருப்பின் பேரில் ஜனநாயக பிரதிநிதித்துவ சித்தாந்தங்களின் அடிப்படையிலே அரசாங்கம் தெரிவு செய்யப்படும்.

02 **மக்கள் இறைமை என்ற தளத்தைக் கொண்டிருத்தல் :**

அரசியல் அதிகாரதின் ஊற்று மக்களே என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளுவதும், அரசாங்கம் அவ்வதிகாரத்தின் பொறுப்புதாரி என்பதன் அடிப்படையில் செயற்படுவதுமே இதன் பொருளாகும்.

03 **மக்கள் பிரதிநிதிகள் என்ற தளத்தைக் கொண்டிருத்தல் :**

மக்கள் விருப்பப்படி தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளாலேயே அரசியல் அதிகாரம் நடைமுறைப்படுதல் என்பதே இதன் பொருளாகும்.

04. **காலத்திற்கு காலம் சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் நடாத்தப்படும் தேர்தல்கள் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுதல்:**

மக்கள் இறைமையை நடைமுறைப்படுத்தும் ஜனநாயக் கருவிகளுள் தேர்தல்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. மக்களின் அதிகாரத்தை யார் எவ்வளவு காலத்திற்குப் பிரயோகிக்க வேண்டும் என்பதை மக்கள் தேர்தல்கள் மூலமே தீர்மானிக்கின்றனர். அதனால் அச்சமின்றி தமது விருப்பப்படி வாக்குகளை வழங்குவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. **அரசியல் யாப்பினைக் கொண்டிருத்தல் :**

ஜனநாயகத்தின் அடிப்படைக் கருவி அரசியல் யாப்பாகும். ஆள்வோரின் தன்னிச்சையான ஆட்சியைக் கட்டுப்படுத்தி ஆள்வோர் - ஆளப்படுவோர் உறவை - முறையான வகையில் யாப்புறு ஆட்சியின் மூலமே பேணி நடத்தலாம்.

06. **பொறுப்புக் கூறல் :**

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மக்கள் தமக்கு ஒப்படைத்த அதிகாரத்தின் அடிப்படையில் செயற்படுவதே ஜனநாயக அரசாங்கமாகும். பிரதிநிதிகள் அவ்வதிகாரத்திற்கு மக்களுக்குப் பொறுப்புகள் கூறக் கடமைப்படுகின்றனர்.

07. **சட்டத்தின் ஆட்சி :**

தன்னிச்சையான ஆட்சியிலிருந்து மனிதனையும், தனிமனித சுதந்திரத்தையும், பாதுகாக்கும் ஜனநாயகக் கருவியே சட்டதின் ஆட்சியாகும். சட்டத்தின் முன் ஆள்வோரும், ஆளப்படுவோரும் சமமானவர்களாவர். சகலருக்கும் சமமான சட்டப் பாதுகாப்புண்டு.

08. **நீதித்துறையின் சுதந்திரம் :**

கல்வி மற்றும் தொழில் திறமைகளின் அடிப்படையில் மட்டும் தெரிவு செய்யப்படுவதும், சட்டம் மற்றும் நிறைவேற்றுத்துறைச் செல்வாக்கு களுக்குட்படாது சுயதீனமாகச் செயற்படுவதுமான நீதித்துறை காணப்படுதலே நீதித்துறை சுதந்திரமாகும்.

09 **போட்டிக்கட்சி முறை :**

ஜனநாயகத்தையும், அரசியல் கட்சிகளையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. சமூகப் பல் தன்மையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குமான போட்டிக் கட்சிமுறை ஜனநாயக அரசாங்கதின் செயற்பாட்டிற்கு அவசியமாகிறது.

10. **சுதந்திரமான அமுக்கக் குழுக்களின் செயற்பாட்டிற்கும் பொதுசன அபிப்பிராயத்தைச் சுதந்திரமாக வெளியிடுவதற்குமான வாய்பிருத்தல்:**

**அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு மக்கள் காட்டும் துலங்கல் யாது?** மக்கள் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்ப்பது என்ன என்பதனை அறிவதற்கு இவ்விரு கருவிகளும் அவசியமாகின்றன.

11 **சுதந்திரமான ஊடகம் :**

அரசாங்கத்தின் நெருக்குதலின்றி சுதந்திரமாக அச்சமின்றி செயற்படக் கூடிய வாய்ப்பு ஊடகங்களுக்கு இருக்க வேண்டும்.

12 **பிரஜைகளின் உரிமைகளையும், சுதந்திரங்களையும், சமத்து வத்தையும் பாதுகாத்தல்:**

மக்களின் மேம்பாட்டிற்கு இவற்றைப் பாதுகாத்தல் ஜனநாயக அரசாங்கத்தின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்துறை

## ❖ சட்டத்துறை என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

அரசாங்கத்தின் அதிகாரம் 3 பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றுள் சட்டத்துறை அதிகாரம் பிரதானமாகும். சட்டம் இயற்றுவது ஒரு நாட்டின் இன்றியமையாத தேவையாகும். அத் தேவையை நிறைவேற்றிக் கொள்ள ஒவ்வொரு அரசிலும் சட்டமன்றம் அமைக்கப்பட்டிருக்கும். அதனையே சட்டத்துறை என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. அரசின் விருப்புக்கள் சட்டம் எனும் உருவில் சட்டத்துறையினூடாக வெளிவருகின்றன. அதன்படி சட்டவாக்கமே அரசின் பிரதான அதிகாரமாக உள்ளது.

<u>கில்கிறைஸ்ட்</u> என்பவரின் கருத்துப்படி சட்டத்துறையின் அதிகாரம் அரசின் முகவுரையாக இடம்பெறுவதற்கு சட்டத்துறை மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும். அதேவேளை, அது மக்களுக்கு பொறுப்புச் சொல்லவும் கடமைப்பட்டுள்ளது என்றார். இதனால் தற்கால பிரதிநிதித்துவ ஆட்சி முறையில் சட்டத்துறை பிரதான இடத்தினைப் பெறுகின்றது.

தற்கால அரசுகளில் சட்டத்துறை நிறைவேற்றும் பல்வேறு கடமைகளினால் அரசாங்க அமைப்பே பிரதான இடத்தைப் பெறுகின்றது. அது பெற்றுள்ள அதிகாரங்களும் கடமைகளும், முறையாக நிறைவேற்றப்படாவிடின் ஆட்சிமுறை பிரச்சினைகளுக்குட்பட்டு வீழ்ச்சியடையலாம். நாடு எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தீர்த்து நாட்டின் நல்லாட்சிக்கு துணை செய்யும் பொறுப்பு சட்டத்துறையினைச் சார்ந்ததாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **சட்டத்துறையின் பணிகளைக் குறிப்பிடுக.**

01. **சட்டவாக்கம் செய்தல**

சட்டத்துறை நிறைவேற்றும் பல்வேறு கடமைகளுள் சட்டவாக்கக் கடமை முக்கியமானதாகும். சட்டவாக்கத்தின் மூலம் ஒரு நாட்டின் தேவைகளை நிறைவேற்றும் போது நல்லாட்சி நிலவுகின்றது. ஆதலால் சட்டங்கள் சமூகத்தின் சமூகப், பொருளாதார மாற்றங்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் காணப்படும். இங்கு காலம் கடந்த சட்டங்களை ரத்துச் செய்தும் காலத்திற்கு தேவையான சட்டங்களை உருவாக்கியும் சட்டத்துறை தனது சட்டவாக்கக் கருமத்தினை நிறைவேற்றும் பொழுது அனுபவம் வாய்ந்த நிருவாகத்துறையின் வழி நடத்தலோடும் துணையோடும் செயல்படுவதை நாம் காணலாம்.

02. **நிருவாகததுறையைக் கட்டுப்படுத்தல்**

நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலமும், நிறைவேற்றுத்துறை சமா்ப்பிக்கும் மசோதாக்களை நிறைவேற்றாமை மூலமும், கேள்வி கேட்டல்,மற்றும் விமா்சனம் செய்வதன் மூலமும் நிறைவேற்றுத் துறையைக் கட்டுப்படுத்துகிறது.

03. **நிறைவேற்றுத் துறைக்குத் தேவையான பெரும்பான்மை பலத்தை வழங்குதல் :**

அரசாங்கத்தின் உறுதிப்பாட்டிற்குத் தேவையான பெரும்பான்மையை வழங்குதல் என்பதே இதன் பொருளாகும்.

04. **வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு:**

அரச கருமங்களை மேற்கொள்ளுவதற்குத் தேவைப்படும் பணத்தின் அளவு, அதனைப் பெற்றுக் கொள்ளும் முறை என்பனவற்றை அனுமதித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 05. நீதித்துறை பணிகளை நிறைவேற்றல் :

உயர் நீதிமன்ற, மேல்நிலை நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரித்தல், பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறல்களை விசாரித்தல் போன்றன முக்கியமானவைகளாகும். சில நாடுகளில் உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கெதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரித்து அவர்களை பாராளுமன்ற அங்கத்தவர்களின் பெரும்பான்மையுடன் பதவிவிலகச் செய்கிறது.

உதாரணம் : இலங்கை

### 06. நியமனப் பணிகள்:

உதாரணமாக இந்தியப் பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் உள்ள உறுப்பினர்களாலும் மானில சட்ட மன்ற உறுப்பினர்களாலும் இந்திய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுகிறார்.

இந்திய துணை ஜனாதிபதி இந்தியப் பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படுகிறார்,

அமெரிக்க ஜனாதிபதி, உயர் நிதிமன்றம் மற்றும் சமஷ்டி நீதிமன்றங்களின் நீதியரசர்கள், உயர் அரசாங்க அதிகாரிகள் போன்றோரை நியமிக்கும் போது, அமெரிக்க செனற் சபையின் அங்கீகாரத்தைப்பெற வேண்டும்.. சுவிட்சர்லாந்தில், சமஷ்டிக் கவுன்சிலின் உறுப்பினர்களையும், சமஷ்டி நீதிமன்ற நீதிபதிகளையும் நியமித்தல்

### 07. எதிர்கால அரசியல் தலைவர்களை உருவாக்குதல்:

தற்கால அரசுகளில் சட்டத்துறை, அரசியல் தலைவர்களை அரசியல் கருமத்திற்காக பயிற்றுவிக்கும் அரசியல் பயிற்சிக் கூடமாகவும் செயற்படுகின்றது. பெரும்பாலான அரசியல் தலைவர்கள் முதலில் சட்டத்துறையில் அங்கம் வகிக்கின்றனர். அதன் பின்னரே அவர்கள் சிரேஷ்ட நிலையை அடைந்து அரசியல் தலைவர்களாக மாறுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. அரசியல் யாப்பைத் திருத்துதல்:

சகல நாடுகளிலும் யாப்புத் திருத்தம் சட்டத்துறையிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. யாப்புத்திருத்தம் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உதாரணம் :

1. பிரித்தானியப் பாராளுமன்றம், பிரித்தானிய யாப்புத் திருத்தத்தை சாதாரண சட்டத்தை இயற்றுவது போல் மேற்கொள்கிறது.
2. சில நாடுகளில் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை உறுப்பினரின் சம்மதத்தோடு யாப்புத்திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.
   உதாரணம் : இலங்கை
3. வேறு சில நாடுகளில் யாப்புத் திருத்தம் சட்டத்துறையில் கொண்டு வரும் போது அந்த சட்டத்துறை கலைக்கப்பட்டு புதிய அரசாங்கத்தினால் அமைக்கப்படும் சட்டத்துறையினால் யாப்புத்திருத்தம் செய்யப்படுகின்றது.
   உதாரணம் : பெல்ஜியம், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே, சுவீடன்
4. தென்னாபிரிக்கா நாட்டின் யாப்புத்திருத்தம் சட்டத்துறையின் இணைப்புக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது.
5. சில நாடுகளில் யாப்புத் திருத்தம் சட்டத்துறையின் (பாராளுமன்றம்) இரு மன்றங்களினூடாக நிறைவேற்றப்படுகின்றது.
   உதாரணம் இந்தியா
6. சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, போன்ற நாடுகளின் யாப்புத் திருத்தம், அந்த நாடுகளின் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பின்பு மக்களின் சம்மதத்திற்காக ஒப்பங்கோடலுக்கு விடப்பட்டு மக்களின் அனுமதியைப் பெற வேண்டும்.
7. இன்னும் சில நாடுகளில் யாப்புத்திருத்தம் சட்டத்துறையினால் நிறைவேற்றப்பட்டு அந்த நாட்டின் மாநிலங்களின் 3/4 பங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலங்களின் அனுமதியினைப் பெற வேண்டும்.

உதாரணம் : அமெரிக்கா, அவுஸ்ரேலியா

9. **விமர்சனங்களை மேற்கொள்ளுதல், கேள்வி கேட்டல், மனக்குறைகளை முன்வைத்தல், வேண்டுகோள் விடுத்தல்.**

❖ **சட்டத்துறையின் அமைப்பை வரையறுக்குக.**

மக்களாட்சி நாடுகளில் சட்டத்துறை மிகச் சிறந்த இடத்தைப் பெற்று விளங்குகின்றன. இன்றைய உலகின் சட்டத்துறையின் அமைப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. சில நாடுகளில் ஒரு மன்ற முறையும் வேறு சில நாடுகளில் இருமன்ற முறையும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக நியூசிலாந்து, இலங்கை, இஸ்ரேல், மாலைதீவு போன்ற நாடுகளில் ஒரு மன்ற (ஓரவை) சட்டமன்றம் காணப்படுகின்றது.

அதேவேளை அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, சுவிற்சிலாந்து, இந்தியா, முன்னாள் சோவியத் யூனியன், அவுஸ்ரேலியா, கனடா, மலேசியா போன்ற நாடுகளில் இருமன்ற (ஈரவை) சட்டமன்றம் காணப்படுகின்றது. குறிப்பாக

01 பிரித்தானிய சட்டத்துறையான பாராளுமன்றம், கீழ் சபையான பொதுமக்கள் சபையையும், மேல்சபையாக பிரபுக்கள் சபையையும் கொண்டுள்ளது.

02. அமெரிக்காவின் சட்டத்துறையான காங்கிரஸ், மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட்சபை என்ற இரு சபைகளைக் கொண்டுள்ளது.

03. இந்தியாவின் சட்டத்துறையான பாராளுமன்றம், கீழ்சபையை லோக் சபா என்றும், மேல்சபையை ராஜ்ய சபா என்றும் அழைக்கப்படுகிறது.

04. பிலிப்பைன்சின் சட்டத்துறையான காங்கிரஸ், பிரதிநிதிகள் சபை, செனட்சபை என்ற இரு சபைகளைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. முன்னாள் சோவியத் யூனியனின் சட்டத்துறையான சுப்றீம் சோவியத், முதலாம் மன்றமாக ஒன்றியங்களின் சோவியத்தையும், இரண்டாம் மன்றமாக தேசிய இனங்களின் சோவியத்தையும் கொண்டுள்ளது.

06. மலேசியப் பாராளுமன்றம், பிரதிநிதிகள் சபை, செனட்சபை, என்ற இரு சபைகளைக் கொண்டுள்ளது.

07. ஜப்பானின் சட்டத்துறையான டயற், பிரதிநிதிகள் சபை என்ற கீழ்சபையையும், ஆலோசகர் சபை என்ற மேல் சபையையும் கொண்டுள்ளது.

08. பிரான்சியப் பாராளுமன்றம், தேசிய பேரவை, செனட்சபை, என்ற இரு சபைகளைக் கொண்டுள்ளது.

09. அவுஸ்ரேலிய சட்டத்துறையான பாராளுமன்றம் கீழ்சபையாக பிரதிநிதிகள் சபையையும், மேல்சபையாக செனட் சபையையும் கொண்டுள்ளது.

## ❖ ஒரு மன்ற முறையின் (ஓரவை) நன்மை, தீமைகளைக் குறிப்பிடுக.

சட்டத்துறையானது, பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பிரபல்யமான ஒரு தனியமைப்பைக் கொண்டிருப்பின் அது ஒரு மன்ற முறை எனப்படும்.

இங்கு மக்களின் குரல் ஒரு மன்றம் மூலம் மட்டுமே வெளிப்படும். பிரான்சிய அறிஞர் ஒருவர் கூறுகின்ற போது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்துறை கட்டாயமாக ஒரு மன்றத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை :

01. ஈரவை முறையில் பொறுப்பை எவரும் முன்வந்து ஏற்றுக் கொள் வதில்லை. ஆனால் ஓரவை முறையில் அது மிகவும் பொறுப்போடு பணிபுரிகின்றது.

02. ஓரவை முறையில் எல்லா வேலைகளும் துரிதமாக நடைபெறுகின்றன. இங்கு காலதாமதம் ஏற்படுவதில்லை.

03. எல்லா வேலைகளும் குறித்த காலத்தில் எளிதாக நடைபெற்று வருகின்றன. சட்டங்கள் விரைந்து வெளிவருகின்றன.

04. ஈரவை முறையில் இரண்டு அவைகளுக்குமிடையில் அதிகாரப் போட்டி ஏற்படலாம். ஆதலால் சட்ட முடக்கங்கள் ஏற்படுகின்றன. ஓரவையில் அவைகள் ஏற்படாது.

05. மக்கள் இறைமையானது ஓரவையில் ஒன்றாக பிளவு படாவண்ணம் பாதுகாக்கப்படுகின்றது.

06. ஓரவையானது மக்கள் மனம் அறிந்து அவ்வப்போது செயற்படுவதால் அது பழமைவாதக் குற்றச்சாட்டுக்கு ஆளாவது இல்லை. ஆதலால் சமூக முன்னேற்றம் பாதிக்கப்படாது.

07. இரண்டு அவைகள் உள்ள பல நாடுகளில் அதன் குறைபாடுகள் வெகுவாகப் பேசப்படுகின்றன. அது போல் எவ்வித பேச்சுக்கும் ஓரவை ஆளாவதில்லை.

08. புதிய அரசுகளுக்கும், சிறிய அரசுகளுக்கும் இம் முறை சிறந்ததாகக் காணப்படும்.

09. ஓரவைச் சட்டமன்றம் வாக்காளர்களின் கருத்துக்களை எதிரொலிக்கும் ஒரே மன்றாக இருக்கும்.

10. செலவு குறைந்த முறையாகவும், சிக்கனமானதாகவும் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமைகள் :

01. ஓரவை முறையின் பெருங்குறை என்னவென்றால் அது கட்சி ஆட்சியின் சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும்.

02. சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பின்றி நடக்க ஏதுவாக இது அமைந்துள்ளது.

03. உறுப்பினர்கள் பொறுப்பில்லாமல் நடக்கும் போது சட்டங்கள் இயற்றுவதும் தீங்காகவே அமையும்.

04. இம் முறையில் சட்டமன்றம் நிலையற்ற தன்மையினை கொண்டதாகும்.

05. இம் முறையில் அரசியல் அமைப்பு வரம்பை மீறக் கூடிய வகையில் அது அமையவும் வாய்ப்பு உண்டு.

06. ஓரவையின் கருத்துக்கள் பாரபட்சமாகவே அமையும் என்பதோடு அது சமநிலை நோக்கோடு செயற்படாது.

❖ **இரண்டாம் மன்றத்திற்கு ஆதரவானதும், எதிரானதுமான வாதங்களைக் குறிப்பிடுக.**

**ஆதரவான வாதங்கள் :**

01. ஒரு மன்ற முறையின் சர்வதிகாரம் இல்லாதொழிக்கப்படுகின்றது.

பேராசிரியர் லஸ்கியின் கருத்துப்படி சர்வவல்லமை பொருந்திய அரசாங்கத்தில் சர்வாதிகாரம் ஏற்படும் என்றார். அவ்வாறு ஒரு மன்றம் கட்டுப்பாடற்ற வகையில் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் என்றும் குறைந்த பொறுப்புடன் செயல்படும் என்றும் குறிப்பிடுகிறார்.

J.S.மில்லின் கருத்துப்படி தனிமன்றம் ஒன்று இருப்பதன் விளைவாக ஊழல்பாதிப்புக்கள் இடம் பெறலாம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்தர் பிரபுவின் கருத்துப்படி இரண்டாம் மன்றம் சுதந்திரத்திற்கான சிறந்ததொரு பாதுகாப்பாகும் என்றார்.
பிரைஸ் பிரபுவின் கருத்துப்படி முதலாம் மன்றத்தில் வெறுக்கத்தக்கதும், சர்வாதிகாரத் தன்மை உடையதும், ஊழல் நிறைந்ததுமான போக்கைத் தடுப்பதற்கு இரண்டாம் மன்றம் அவசியம் என்றார்.

02. தீவிரமானதும் அவசர புத்தியுள்ளதுமான முதலாம் மன்றத்திற்கு தடைபோடுவதற்காக இரண்டாம் மன்றம் செயலாற்றுகின்றது. கீழ் மன்றம் தீவிரமாகவும், உத்வேகமானதாகவும் செயற்படும் போக்கினை உடையது. கீழ்மன்றம் சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்படும் அதேவேளை இளம் அங்கத்தவர்களையும் கொண்டிருக்கலாம். இரண்டாம் மன்றம் இதை விட வேறுபட்ட வகையில் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயற்படும் அதே வேளை அது பழமை போற்றும் தன்மையுடையதாகவும் காணப்படும். அது பெரும்பாலும் ஒப்பீட்டு ரீதியாக வயது முதிர்ந்தவர் களையே கொண்டிருக்கும். இரண்டாம் மன்றம் பெற்றிருக்கும் உயர்ந்த தகுதிகளின் காரணமாக முதலாம் மன்றத்தின் தீவிர போக்கினைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

03.இரண்டாம் மன்றம் சட்டவாக்கத்தின் போது தாமதத்தை ஏற்படுத்துவதன் மூலம் தர்க்கீடு செய்யப்படுகின்றது. இத்தாமதம் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு வாய்பினைத் தருகின்றது.

04.இரண்டாம் மன்றம் பலதரப்பட்ட வாக்காளர்களின் நலன்களையும், சிறுபான்மை யினரையும்,தொழிலாளர் நலன்களையும், அறிவாளிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஒரு சபையாக செயற்படுகின்றது. கீழ்மன்றம் பொதுமக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் பிரபல்யமான ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையாகும். இரண்டாம் மன்றம் அளவுக்கதிகமான அதிகாரத்தை சமநிலையில் வைத்திருக்கும் அதேவேளை வர்க்க ரீதியான சட்டவாக்கத்தின் அதிகாரத்தையும் குறைக்கின்றது. இரண்டாம் மன்றம் அரசியல் ஆட்சியல், மருத்துவம், சட்டம், கலை போன்ற துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர் களிலிருந்து பிரதிநிதித்துவத்தை வழங்குகின்றது. இதன் மூலம் அவர்களின் தேவையை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கலாம்.

05. பொதுத்தேர்தலில் போதிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளாத சிறுபான்மைப் பகுதியினருக்கு பிரதிநிதித்துவத்தை வழங்குகின்றது.

06. சில விஷேட சந்தப்பங்களில் நிறைவேற்றுத்துறையின் மீது பரிசீலனையுடன் செயற்படுகின்றது..

07. சமஷ்ட்டி முறை நிலவும் நாடுகளுக்கு இரண்டாம் மன்றம் அத்தியவசியமானதாகும். இது சமஷ்ட்டி முறையில் நிலைத்திருக்கும் அத்தோடு. மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவத்தையும் வழங்குகின்றது.

உதாரணமாக

1.அமெரிக்காவின் சட்டத்துறையான காங்கிரஸின் இரண்டாம் மன்றமான செனட்சபையில் 100 அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர்.

2. இந்தியப் பாராளுமன்றத்தின் இரண்டாம் சபையான ராஜ்ய சபாவில் 250 உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

3. அவுஸ்ரேலியா நாட்டின் சட்டமன்றத்தின் இரண்டாம் சபையான செனட்சபையில் 60 உறுப்பினர்கள் காணப்படுகின்றார்கள்.

4. பிலிப்பைன்சின் சட்டத்துறையான காங்கிரஸின் இரண்டாம் மன்றமான செனட்சபையில் 24 உறுப்பினர்கள் உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான வாதங்கள் :

01. மக்களின் விருப்பு ஒரு தனிமன்றத்தின் மூலம் மட்டுமே வெளிப்படுத்தப்பட வேண்டும்.

02. இரண்டாம் மன்றம், முதல் மன்றத்தின் நிலைக் கண்ணாடியாகக் காட்சியளிக்கின்றது.

03. சட்டவாக்கத்தின் போது தற்காலத்தில் பின்பற்றப்படும் நீண்ட ஜனநாயக நடைமுறையின் காரணமாக முதல் மன்றம் அவசர அவசரமாக சட்டங்களை உருவாக்குவதில்லை.

04. சட்டவாக்கத்தின் போது தேவையற்ற காலதாமதம் ஏற்படுகின்றது.

05. முதல் மன்றத்தின் சர்வாதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் திறனை இரண்டாம் மன்றம் பெற்றுக்கொள்வதில்லை.

06. இரண்டாம்மன்றம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பது பற்றிய சிக்கல்கள் காணப்படுகின்றன.

07. இரண்டாம் மன்றம் சமூக முன்னேற்றத்திற்கு தடையாக அமைகின்றது.

08. இருமன்ற முறை அதிக செலவினை ஏற்படுத்துகின்றது.

09. சமஷ்டி அரசாங்க முறைக்குக் கூட இரண்டாம் மன்றம் அவசியமற்றுக் காணப்படுகின்றது.

ஒருமன்ற முறைக்கும் (ஓரவை) இருமன்ற முறைக்கும் (ஈரவை) இடையில் உள்ள வேறுபாடுகளை ஒப்பிடுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஒருமன்ற முறை | இருமன்ற முறை |
|---|---|
| 1.வேலைகள் விரைவாக நடைபெறும் அதேபோல் சட்டங்களும் விரைவாக நிறைவேறும். | 1. குறையுள்ள சட்டங்களை மேலவை தடைசெய்ய வாய்ப்பு உண்டு. இதனால் கால தாமதம் ஏற்படும். |
| 2. மக்கள் விருப்பத்திற்கு தடையில்லை. | 2. மக்களின் விருப்பம் நிறை வேற பல தடங்கல் ஏற்படும். |
| 3. செயற்குழு பொறுப்போடு நடைபெறும். | 3. செயற்குழு போன்ற நிலையில்லை. |
| 4. தேவையற்ற குழப்பங்கள் ஏற்படாது. | 4. கீழ்ச்சபை மக்களின் விழிப்புணர்வை தூண்ட வழிவகுக்கும். |
| 5. சட்டமுடக்கம் கிடையாது. | 5. சட்டமுடக்கம் ஏற்படும். |
| 6. திறமையற்றவர்கள் இடம் பெறுவர். | 6. திறமையுள்ளவர்கள் இடம் பெற வாய்ப்புண்டு. |
| 7. ஒற்றையாட்சிக்குப் பொருந்தக்கூடியது.உ-ம்: இலங்கை, மாலைதீவு. | 7. ஒற்றையாட்சிக்கும் சமஷ்டி ஆட்சிக்கும் பொருந்தக் கூடியது. உ-ம்: இந்தியா சமஷ்டி ஆட்சி,பிரித்தானிய ஒற்றையாட்சி. |
| 8. செலவு குறைந்த முறை | 8. செலவு கூடிய முறை |
| 9. நிலப்பரப்பு குறைந்த சிறிய நாட்டுக்கு உகந்தது. உ-ம்: இலங்கை, மாலைதீவு, வத்திக்கான். | 9. நிலப்பரப்பு பெரிதாகவுள்ள நாடுகளுக்கு உகந்தது. உ-ம்: இந்தியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **எந்தளவிற்கு சட்டசபைகள் நிர்வாகத்துறையினை கட்டுப்படுத்து கின்றன என்பதைப் பரிசீலிக்குக?**

சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையிலான தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு

01. பாராளுமன்றம் சார்ந்த நிர்வாக முறை (இந்தியா, பிரித்தானியா)
02. ஜனாதிபதித்துவ நிர்வாக முறை (அமெரிக்கா, பிரான்ஸ்)
03. பாராளுமன்ற முறை சார்ந்த ஜனாதிபதித்துவ முறை (இலங்கை)

பாராளுமன்றம் சார்ந்த நிர்வாக முறையில் பாராளுமன்றத்திலிருந்து அமைச்சர்கள் அங்கத்துவம் பெறுவதனால் பாராளுமன்றக் கூட்டங்களுக்கு அமைச்சர்கள் சமூகமளிக்க வேண்டும். அரசின் கொள்கைகள், நடவடிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

சட்டவாக்க வழிகாட்டலும், நிதி ஒதுக்கீடும் அமைச்சரவையாலேயே செயற்படுகின்றது. இதற்கு பாராளுமன்றத்தின் பெருன்பான்மை பெறப்படுதல் வேண்டும். இல்லாவிடின் அது சட்டமாக்க முடியாது. இந்த சந்தப்பத்தில் நிர்வாகத்துறையை சட்ட சபை கட்டுப்படுத்துகின்றது.

பாராளுமன்றம் சார்ந்த நிர்வாக முறையில் அமைச்சரவை தான்தோன்றித் தனமாக செயற்படுமாக இருந்தால் அதற்கு எதிராக சட்டசபையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் அமைச்சரவையை பதவி நீக்க சட்ட சபைக்கு முடியும்.

நிர்வாகத்துறைத் தலைவரான ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை 2/3 பெரும்பான்மையுடன் கொண்டு வந்து நீதி மன்ற அனுமதியினையும் பெற்று திரும்பவும் 2/3 பெரும்பான்மை சட்டமன்றத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்படுமாயின் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்னும் முறை இலங்கையில் காணப்படுகிறது.

இவ்வாறு ஐக்கிய அமெரிக்காவிலும் ஜனாதிபதி மீதான குற்றப் பிரேரணையை கொண்டு வந்து நிறைவேற்றி நீதிமன்ற அனுமதியைப் பெற்று செனட்டின் சம்மதத்தையும் பெற்றால் ஜனாதிபதி பதவிலக வேண்டும். இங்கும் சட்டத்துறை நிர்வாகத்துறையை கட்டுப்படுத்தும் தன்மையைக் காணலாம்.

அமெரிக்க ஜனாதிபதி முக்கியமான உயர் பதவிக்குரிய நியமனங்களை செய்யும் போதும், உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் போதும், காங்கிரஸின் ஒரு அங்கமான செனட் சபையின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. இது நிர்வாகத்துறையை, சட்டத்துறை கட்டுப்படுத்து வதாகும்.

## ❖ இன்று சட்டத்துறையின் அதிகாரங்களை நிர்வாகத்துறை கைப்பற்றி விட்டது விளக்குக.

சட்டத்துறை ஒரு நாட்டில் பல்வேறு கடமைகளைச் செய்தாலும் நிர்வாகத்துறையின் நிர்வாக நடவடிக்கைகளும் கடமைகளும் அதிகரித் துள்ளதனால் சட்டத்துறையின் அதிகாரங்களை நிர்வாகத்துறை கைப்பற்றியுள்ளது.அந்தவகையில்:

01. இன்று பொதுக் கொள்கையின் உருவாக்கம்,மற்றும் அமுலாக்கம் என்பனவற்றில் நிர்வாகத்துறையின் தலையீடு நேரடியாகக் காணப்படுகின்றது.

உதாரணம் :

1.மந்திரி சபை நாடுகளில் அமைச்சரவை, நிர்வாகப் பொறுப்புக்களை மேற்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.ஜனாதிபதி ஆட்சிமுறை நாடுகளில் ஜனாதிபதி நிர்வாகத்தை நேரடியாக மேற்கொள்கிறார்.

02. சட்டசபையைக் கூட்டுதல், ஒத்திவைத்தல் என்பனவற்றில் நிர்வாகத் தலைவர்கள் தலையிடுகின்றனர்.

உதாரணம்

இலங்கையின் பாராளுமன்றத்தைக் கூட்டுவது ஒத்திவைப்பது ஜனாதிபதியாவார்.

பிரித்தானியாவின் பாராளுமன்றத்தைக் கூட்டுவது ஒத்திவைப்பது பிரதமரின் சிபாரிசின் பெயரில் முடியாவார்.

இந்திய பிரதமரின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கூட்டுகின்றார்.

03. மந்திரி சபை ஆட்சி முறை நாடுகளில், முக்கியமான சட்டம் கருக்கட்டப்படுகின்ற இடமாக அமைச்சரவை காணப்படுகின்றது.

உதாரணம் : பிரித்தானியா, இந்தியா

04. சட்டத்துறையைக் கலைக்கும் அதிகாரத்தை நிர்வாகத்துறை பெற்றுள்ளது.

உதாரணம் :

1.இலங்கை ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கின்றார்.

11.இந்தியாவில் பிரதமரின் சிபாரிசின் பேரில் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கின்றார்.

111.பிரித்தானியாவில் பிரதமரின் சிபாரிசின் பெயரில் முடி பாராளுமன்றத்தைக் கலைக்கின்றார்.

05. சட்டத்துறை இயற்றும் சட்டங்களுக்கு கையொப்பம் இட்டு இறுதி அங்கீகாரம் வழங்குவது நிர்வாகத்துறையின் தலைவராகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் :

அமெரிக்காவில் காங்கிரஸ் இயற்றும் சட்டங்களுக்கு இறுதி அங்கீகாரம் கொடுப்பது ஜனாதிபதியாகும்.

06 பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுகின்ற சட்டம் பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டால் மக்கள் தீர்ப்புக்கு விடப்பட்டு மக்களின் அங்கீகாரத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு நிர்வாகத்துறைக்கு அதிகாரமுண்டு

உதாரணம் : இலங்கை

07. நீதித்துறையில் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது நிர்வாகத்துறையாகும்.

உதாரணம் :

1.இலங்கை ஜனாதிபதி உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கின்றார்.

11.அமெரிக்காவின் நீதிபதிகளை செனட் சபையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதி நியமிக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகத்துறை

❖ **நிர்வாகத்துறை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

சட்டத்துறை சட்டவாக்க அதிகாரத்தினைப் பெற்றிருப்பினும் அந்த சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் போதே நிர்வாகம் செயற்படுத்தப்படுகின்றது. எனவே சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத் தாபனமே நிர்வாகத்துறையாகும்.

அரசியல் யாப்பு நிர்வாக அதிகாரத்தை எந்தத் தாபனத்திடம் ஒப்படைக் கின்றதோ அதுவே நிர்வாகத்துறை என்று அழைக்கப்படுகின்றது. அரசாங்கதின் கருமங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தற்கால அரசு அரசாங்கத்தின் பிரதான நடைமுறைப்பகுதி என்ற வகையில் நிர்வாகத்துறை முக்கியத்துவம் பெறுகின்றது.

Finer (பைனர்) என்பவரின் கருத்துப்படி பாராளுமன்றம், நீதித்துறை தாபனங்கள் போன்றவை அரசாங்கத்தில் தமக்குரிய பங்கினைப் பெற்றதன் பின்னர் எஞ்சியவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஒரு மரபு ரீதியான துறையே நிர்வாகத்துறையாகும் என்றார்.

இன்று நிர்வாகத்துறை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு செயற்படுகின்றது.

01. **அரசியல் நிர்வாகம்** :

பொது மக்களால் காலத்திற்கு காலம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு நிர்வாக அதிகாரம் அரசியல் ரீதியாக ஒப்படைக்கப்பட்ட பகுதியே அரசியல் நிர்வாகமாகும்.

மந்திரி சபை ஆட்சிமுறையில் அரசியல் நிர்வாகம் அமைச்சரவை என்ற பெயராலும், ஜனாதிபதி ஆட்சி முறையில் ஜனாதிபதி என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரமுள்ள அரசியல் நிர்வாகம் இரண்டு முறையில் தெரிவு செய்யப்படுகின்றன.

01. நேரடி மக்கள் வாக்களிப்பு மூலம் (ஜனாதிபதி)

02. பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பலம் பெற்ற கட்சியின் தலைமைத் துவத்தினால் தெரிவு செய்யப்படல். (அமைச்சரவை)

இதனை ஒரு அட்டவணை மூலம் நோக்கலாம்.

| நாடு | தெரிவு முறை | காலம் | பெயர் |
|---|---|---|---|
| அமெரிக்கா | ஜனாதிபதி தேர்தல் மூலம் | 4 வருடம் | ஜனாதிபதி |
| பிரான்ஸ் | ஜனாதிபதி தேர்தல் மூலம் | 5 வருடம் | ஜனாதிபதி |
| இலங்கை | ஜனாதிபதி தேர்தல் மூலம் | 6 வருடம் | ஜனாதிபதி |
| பிரித்தானியா | பாராளுமன்ற பெரும்பான்மை மூலம் | 5 வருடம் | பிரதமர் |
| பிலிப்பைன்ஸ் | ஜனாதிபதி தேர்தல் மூலம் | 4 வருடம் | ஜனாதிபதி |
| ஜப்பான் | பாராளுமன்ற பெரும்பான்மை மூலம் | 4 வருடம் | பிரதமர் |
| அவுஸ்ரேலியா | பாராளுமன்ற பெரும்பான்மை மூலம் | 3 வருடம் | பிரதமர் |
| மலேசியா | பாராளுமன்ற பெரும்பான்மை மூலம் | 5 வருடம் | பிரதமர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. **அரசியல் சாராத நிரந்தர நிர்வாகம் :**

அரசியல் மாற்றத்திற்கேற்ப எவ்வித மாற்றமும் இடம்பெறாமல் நிரந்தரமாக இடம்பெறும் அரசாங்க சேவையே நிரந்தர நிர்வாகம் என்று அழைக் கப்படுகிறது.

பரந்த வகையில் குறிப்பிடுவதாயின் நிர்வாகத்துறை அரசின் விருப்புக்களை நிர்வகிக்கும் சகல கடமைகளையும், தாபனங்களையும் உள்ளடக்கியிருக்கும் ஒரு பகுதியாகும்.

சுருக்கமாக குறிப்பிடுவதாயின் நிர்வாகத்துறை என்ற சொல் அரசின் தலைவர், அதன் அமைச்சர்கள், ஆலோசகர்கள், இலாகாத் தலைவர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்குகின்றது.

## ❖ நிர்வாகத்துறையின் பணிகளை தெளிவாக வரையறை செய்க?

அரசாங்கங்களின் இயல்பின் அடிப்படையில் நிறைவேற்றுத்துறையின் பணிகள் வேறுபடுவதால் இது பற்றி ஒரு பொதுக் கருத்து நிலவுவதில்லை. ஜனாதிபதி முறையில் ஜனாதிபதியின் பணிகளை விட கபினட் முறையில் பிரதமரின் பணிகள் வேறுபடுகின்றன. எவ்வாறாயினும் சகல அரசாங்க முறைகளிலும் நிறைவேற்றுத் துறைக்குரிய சில பொதுவான பண்புகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

01. **பகிரங்க சேவையைக் கட்டுப்படுத்தல் :**

அமைச்சுக்களையும், இலாகாக்களையும் பரிபாலித்தல், வழி நடாத்துதல், மேற்பார்வை செய்தல், உயர் பகிரங்க அலுவலர்களை நியமித்தல், பதவி உயர்வு வழங்குதல், இடமாற்றம் செய்தல், நீக்குதல் போன்ற பணிகள் இதில் இடம்பெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. **சட்டத்துறை பணிகள் :**

சட்டமன்றத்தைக் கூட்டல், கலைத்தல், ஒத்திவைத்தல், அவசர காலங்களில் சட்டமன்றத்தில் உரை நிகழ்த்துதல், செய்திகளையும், தூதுகளையும் அனுப்புதல், மசோதாக்களை முன் வைத்தல், மசோதாக்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்குதல் என்பன இதில் அடங்கும்.

03. **நீதித்துறை பணிகள் :**

மேல்நிலை நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல், யாப்பு ரீதியான முறையில் அகற்றுதல், குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல், அரசாங்க வழக்கறிஞர்களை நியமித்தல் என்பன இதில் இடம்பெறுகின்றன.

04. **அரசுப் பாதுகாப்புப் பணிகள் :**

முப்படைகளையும், பொலீஸ் உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமித்தல் மற்றும் நீக்குதல், அவசரகாலச் சட்டத்தையும், ஊரடங்குச் சட்டத்தையும் பிரகடனப்படுத்தல், போரையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தல் ஆகிய பணிகள் இதில் இடம்பெறுகின்றன.

05 **பொது நிதியைக் கட்டுப்படுத்தல் :**

வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்தல், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதனை நடைமுறைப்படுத்தல்.

06. **வெளிநாட்டு விவகாரம் :**

வெளிநாடுகளில் தனது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துதல், வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்தலும், நடைமுறைப்படுத்தலும், இராஜ தந்திர அதிகாரிகளை நியமித்தல், ஏற்றுக் கொள்ளுதல், வெளிநாடுகளோடு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. சடங்கு முறையான பணிகள் :**

அரச விழாக்களுக்கு தலைமை தாங்குதல், கௌரவப் பட்டங்களை வழங்குதல், அரச இலட்சினையைப் பேணிப் பாதூகாத்தல் மற்றும் பிரயோகித்தல்.

**08. கட்டளைகளைப் பிறப்பித்தல் :**

பொதுக் கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆணைகளையும், கட்டளைகளையும் பிறப்பித்தல்.

**09. ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல் :**

சந்தப்ப சூழ்நிலைகளுக்கேற்ப சட்டத்துறை, நிறைவேற்றுத்துறைக்கு ஒப்படைக்கும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல்

## நீதித்துறை

**❖ நீதித்துறை என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?**

மக்களாட்சி நாடுகளில் நீதித்துறை சிறந்த இடத்தை வகிக்கின்றது. மக்களாட்சி நாடுகளில் மக்களே எல்லா நிறுவனங்களையும் நல்ல முறையில் நிர்வகிக்கின்றனர். இதனால் இவைகள் நன்கு நடைபெற நீதித்துறையின் சேவை தேவையாகின்றது.

நீதித்துறை என்பதற்கு சாதாரணமாக அரசாங்கத்தின் மூன்றாம்துறை என்றும் நீதியை நிலைநாட்டும் பணியை மேற்கொள்ளும் பகுதி என்றும் எளிதாக விளக்கம் கூறலாம். ஓர் அரசாங்கத்தின் சிறப்பான இயக்கத்திற்கு நீதித்துறையின் ஏற்பாடு அவசியமானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் நீதித்துறை நிர்வாகத்தின் ஓர் அங்கமாகவே இருந்தது. மன்னராட்சி நிலவிய காலத்தில் சட்டத்தை பிறப்பிப்பவனும், நடைமுறைப்படுத்துபவனும், நீதியை நிர்ணயிப்பவனும் மன்னனே ஆவான். அங்கு அரசனுக்கெதிரான வழக்கில் அவ்வரசனே நீதிபதியாகக் கடமையாற்றினான். ஆனால் ஜனநாயகம் தலைத்தோங்கியதன் பின்னர் முத்துறை அதிகாரங்கங்களும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு துறைகளியிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்படி சட்டசபை தேவையான சட்டங்களை இயற்றுகின்றது. நிர்வாகத்துறை அச்சட்டங்களை அனுசரித்து நிர்வகிக்கின்றது. நிர்வாகத்துறை வரம்பு மீறும் பொழுதோ சட்டசபை மக்களின் உரிமைகளை மீறும் பொழுதோ மக்கள் நீதித்துறையிலே நம்பிக்கை வைக்கின்றனர். அதற்கு காரணம் நீதித்துறையே உரிமைகளின் பாதுகாவலனாக நியாயம் வழங்கும் தலைமை ஸ்தாபனமாக விளங்குவதாகும்.

❖ **தற்கால அரசுகளின் நீதித்துறையின் பணிகளைக் குறிப்பிடுக?**

01. **சட்டத்துறைக்கு விளக்கமளித்தல்.**

ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டம் தெளிவற்றதாகவும், மௌனமாகவும் இருந்தால் அச் சட்டத்திற்கு விளக்கமளித்தல், புதிய சட்டங்களை உருவாக்குதல்,இதனுடைய முக்கிய கடமையாகும்.

02. **நீதியை நிருவகித்தல.**

அரசுக்கும் பிரஜைகளுக்குமிடையிலும், பிரஜைகளுக்கு மத்தியிலும் ஏற்படும் மோதல்களை தீர்த்து நீதியை நிர்வகித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. **பிரஜைகளின் உரிமைகளை பாதூகாத்தல்**

உரிமை என்பது மனிதனது அரசியல் வாழ்விற்கும், குடியியல் வாழ்விற்கும் தேவையான இன்றியமையாத நிபந்தனையாகும். இவ் உரிமைகளில் மிகவும் அவசியமானவற்றை தேர்தெடுத்து அடிப்படை உரிமைகள் என்ற வகையில் அரசுகள் அவற்றை தமது அரசியல் யாப்புக்களில் சேர்த்துக் கொள்கின்றன.

உதாரணமாக : இலங்கையில் இரண்டாம் குடியரசு யாப்பில் மூன்றாவது அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் என்ற தத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது.

யாப்பு ரீதியான உரிமைகளையும், சட்டரீதியான உரிமைகளையும் பாதுகாப்பது நீதிமன்றத்தின் கடமையாகும்.

உரிமைகள் மீறப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் மூலம் அதற்கான பரிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

உதாரணமாக : இலங்கையில் அடிப்படை உரிமை மீறல்களுக்கு உள்ளானவர்கள், மீறல் நடைபெற்று ஒரு மாதத்திற்குள் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும். உயர் நீதிமன்றம் விசாரணை செய்து இரண்டு மாதத்திற்குள் தன்னுடைய தீர்ப்பினை வழங்கும்.

04. **அரசியல் யாப்பைப் பாதுகாத்தல் :**

சட்டததுறையையும், நிறைவேற்றுத் துறையையும் பிறப்பிக்கும் சட்டங்களின் யாப்புறு தன்மையை பரிசீலித்தல்.

05. **மதியுரை வழங்கும் பணி :**

சட்டங்கள் தொடர்பான நெருக்கடி நிலைகள் உருவானால் அதனை தீர்த்து வைப்பதில் சட்டத்துறைக்கும், நிறைவேற்றுத் துறைக்கும் உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மத்திய - மாநில மற்றும் மாநிலங்களுக்கிடையிலான பிணக்குகளை தீர்த்து வைத்தல் இப் பணி சமஷ்டி நாடுகளிலேயே காணப்படும். :

07 நீதிமன்றங்கள் வழக்கில் சம்பந்தப்பட்ட தனிப்பட்டோர் சொத்துக்களைப் பாதுகாக்கின்றது.

08. நிர்வாகத்துறைக்கும், நிர்வாகத் தலைவருக்கும் ஆலோசனை கூறுகின்றது.உ-ம்.இந்திய ஜனாதிபதி சில சமயங்களில் உயர் நீதிமன்ற ஆலோசனையை நாடுகின்றார்.

09. ஏனைய பணிகள் :

தேர்தல் ஆட்சேபனை மனுக்களையும், பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறல் குற்றச் சாட்டுக்களையும் விசாரித்தல், ஹபயாஸ் கோபுஸ்சார்த்தியோரி, மண்டமுஸ், ப்ரோபேட், நைசைஸ் போன்ற கட்டளைகளை பிறப்பித்தல், பால்யர்களுக்கான பொறுப்புதாரிகளை நியமித்தல்.

❖ **நீதித்துறையின் சுதந்திரம் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

ஜனநாயகத்தின் அத்தியவசியமான நிபந்தனை நீதித்துறையின் சுதந்திரமாகும். இதன் பொருள் யாதெனில் நிர்வாகத்துறை மற்றும் சட்டத்துறையின் தலையீடு இன்றி சுதந்திரமான முறையில் நீதியை நிர்வகிப்பதற்கு நீதித்துறைக்கு உள்ள திறன் ஆகும்.

நீதி வழங்குவதிலும் சட்டங்களுக்கு விளக்கமளிப்பதிலும் எந்தவிதமான பயமோ, யாருடைய கட்டுப்பாடோ இன்றி தங்கள் ஆழ்ந்த சட்ட அறிவின் துணையோடு, நடுநிலைமையோடும், பக்கம் சாராமல் செயல்படுவதற்கும் நீதிபதிகளுக்குள்ள உரிமை நீதித்துறை சுதந்திரம் எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதித்துறை அதனுடைய முக்கியமான கடமைகளை நிறைவேற்ற வேண்டுமாயின் நீதித்துறை வெளிக்கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு சுதந்திரமானதாகச் செயற்பட வேண்டும்.

❖ **நீதித்துறைச் சுதந்திரத்தின் அவசியத்தைக் குறிப்பிடுக.**

01. சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் கிடைக்கப் பெறுகிறது என்ற சனநாயகத் தாத்பரியத்தை முறையாக பாதுகாப்பதற்கு நீதித்துறையின் சுதந்திரம் அத்தியவசியமானதாகும்.

02. மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இது அவசியமாகிறது.

03. நேர்மை, நியாயம், கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையில் நீதியை வழங்குவதற்கு நீதித்துறைச் சுதந்திரம் அவசியம்.

04. அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்கிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு நீதித்துறைச் சுதந்திரம் அவசியம்.

05. நடுநிலையான சுதந்திரமான நீதித்துறை ஒரு நல்ல அரசாங்கத்திற்கு அவசியமாகின்றது.

06. சட்டதுறையும், நிர்வாகத்துறையும் தான்தோன்றித்தனமாகச் செல்லாமல் இருப்பதற்கு நீதித்துறை சுதந்திரம் அவசியம்.

❖ **நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான காரணிகளைக் குறிப்பிடுக?**

01. **நீதிபதிகளை நியமிக்கும் முறை :**

தற்கால அரசாங்கங்களில் நீதிபதிகளை பதவியில் அமர்த்துவதற்கு பின்வரும் முறைகள் பின்பற்றப்படுகின்றன.

01. நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படல் :

அமெரிக்காவின் சில மானிலங்களிலும், சுவிட்சர்லாந்தின் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்ரன்களிலும் நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நீதிபதிகளை தோந்தெடுக்கும் முறைகளில் மிகவும் மோசமானது இதுவாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகள் மக்களின் விருப்பத்திற்கேற்ப நீதி வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். மக்களை திருப்திப்படுத்தினால்தான் மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்படலாம். அதனால் நீதிபதிகள் நடுநிலைமையோடு செயற்பட முடியாது.

**02. சட்டமன்றத்தினால் தேர்தெடுக்கப்படல் :**

சுவிட்சர்லாந்தின் நீதிபதிகளும், ரஷ்யாவின் நீதிபதிகளும் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டமன்றத்தின் மூலம் தேர்தெடுக்கப்படும் இம் முறை குறைபாடுடையது என பலராலும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

சட்டமன்ற உறுப்பினர்கள் நீதிபதிகளைத் தெரிவு செய்யக் கூடிய திறமையுடையவர்கள் எனக் கூறமுடியாததாலும், கட்சி, அரசியல், புகுவதற்கான வாய்ப்பு இருப்பதனாலும், வலுவேறாக்கக் கோட்பாட்டிற்கு முரணாக இருப்பதனாலும் இந்த நியமன முறை குறைபாடுடையது எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

**03. நிர்வாகத் துறையால் நியமிக்கப்படுதல் :**

பல நாடுகளில் நீதிபதிகள் நிர்வாகத்துறையின் தலைவராலேயே நியமிக்கப்படுகின்றனர். இந்தத் தெரிவு முறை சிறந்ததெனக் கருதப்படுகின்றது. எடுத்துக்காட்டாக:

i அமெரிக்காவின் உயர் நீதிமன்ற நீதிபதிகள் செனட் சபையின் அங்கீகாரத்துடன் அமெரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii இலங்கையின் உயர் நீதிமன்ற மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் அரசியலமைப்புப் பேரவையின் சம்மதத்துடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர்.

iii இந்தியாவின் உயர் நீதிமன்ற நீதிபதிகள் பிரதமரின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்.

iv நீதிபதிகள் பரீட்சையின் மூலம் தேந்தெடுக்கப்படுதல் : உதாரணம் : பிரான்ஸ் நாட்டைக் குறிப்பிடலாம்.

02. **நீதிபதிகளின் தகுதிகள் :**

பொதுவாக நீதிபதிகள் தெளிவான அறிவு, நீண்ட அனுபவம், சட்ட நுணுக்கம் போன்ற தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். எல்லா நாடுகளிலும் சட்டயியல் நிபுணர்களில் இருந்து நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப் படுகின்றார்கள்.

பிரித்தானியாவில் சட்டம் பயின்ற சட்டத்தரணிகளில் இருந்து நீதிபதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இந்தியாவில் உயர் நீதிமன்ற நீதிபதியாக வருபவர் குறைந்த பட்சம் 5 வருடங்கள் ஒரு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பணியாற்றியிருத்தல் வேண்டும்.

03. **நீதிபதிகளின் சம்பளம் :**

நீதிபதிகளுக்கு நல்ல சம்பளம் அளிக்கப்படுதல் வேண்டும். இல்லையென்றால் திறமையானவர்கள் இதற்கு வரமாட்டார்கள். அத்துடன் பதவியில் இருப்பவர்களுக்கு நல்ல ஊதியம், வாழ்க்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகள், குடியிருப்பு இல்லங்களை அளித்தல் வேண்டும். பதவிக்காலம் பற்றிய உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும். இல்லையென்றால் நீதிபதிகள் நீதியை விற்பவபர்களாகவும் நேர்மையற்றவர்களாகவும், ஊழல் தன்மை கொண்டவர்களாகவும் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

நீதிபதிகளின் சம்பளம் அரசியல் தலையீட்டினால் ஏற்றத் தாழ்வுகளுக்கு உட்படுமாயின் பாரபட்சமற்ற சேவையை எதிர்பார்க்க முடியாது. அதனால் எவ்வித பாதிப்புக்களுக்கும் உட்படாத வகையில் நீதிபதிகளின் சம்பளம் திரட்டு நிதியதிற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இந்த சம்பளத்தை நிர்வாகத்துறையோ, சட்டத்துறையோ கட்டுப்படுத்த முடியாது.
உதாரண்மாக: இலங்கையின் நீதிபதிகளின் சம்பளமும், ஏனைய கொடுப்பனவுகளும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு திரட்டு நிதியத்திற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

04. **நீதிபதிகளின் பதவி நீக்கம் :**

ஓய்வு பெறுகின்ற வரை நீதிபதிகளை பதவியிலிருந்து அகற்ற முடியாது என்ற முறைபொதுவாகப் பின்பற்றப்படுகின்றது. ஒரு நீதிபதி நன்நடத்தை உடையவராக இருக்கும் வரை பதவியில் தொடர்ந்து இருக்கலாம். வேறு எக்காரணங்களைக் கொண்டும் நீதிபதிகளை பதவியிலிருந்து அகற்ற முடியாது. நீதிபதிகள் நன்நடத்தை இல்லாதவர்களாக காணப்படின் அவர்களை நீக்குவதற்கு ஒவ்வொரு நாடுகளும் வெவ்வேறு முறைகளைக் கொண்டிருக்கின்றன.

உதாரணமாக :

i பிரித்தானியபவில் நீதிபதிகளின் நன்நடத்தையில் பாராளுமன்றம் குறைகாணுமானால் அவர்களை பதவிவிலகுமாறு பாராளுமன்றம் மகாராணியிடம் கேட்டுக் கொள்ளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii இலங்கையின் உயர்நீதிமன்ற மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குற்றம் செய்பவர்களாக இருந்தால் பாராளுமன்றம் அவர்களை பதவியிலிருந்து நீக்கும்.

iii அமெரிக்க உயர் நீதிமன்ற நீதிபதிகள் குற்றம் செய்பவர்களாக இருந்தால் அமெரிக்க காங்கிரஸினால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஜனாதிபதியால் நீக்கப்படுவார்.

iv இந்திய நீதிபதிகளின் தகுதியின்மை, நன்நடத்தை இன்மை, நிரூபிக்கப்படுமாயின் இந்திய பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு இந்திய ஜனாதிபதியால் நீக்கப்படுவார்.

**05 பதவிக்கால எல்லை :**

நீதிபதிகளின் பதவிக்கால எல்லையை நிர்ணயிப்பதன் மூலமும், ஓய்வு பெறும் வயதெல்லையைக் குறிப்பிடுவதன் மூலமும் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்க முயற்சி எடுக்கப்படுகின்றது. ஓய்வு பெறும் வயதெல்லை நிச்சயிக்கப்பட்டதாக இருக்கும் பொழுது நீதிபதிகள் எதிர்பார்க்கைகளின் அடிப்படையில் மனச் சஞ்சலங்களுக்கு உட்படாமல் செயற்படலாம். மேலும் குறிப்பிட்ட வயதெல்லையைத் தாண்டியதன் பின்னர் முதிர்ச்சியின் காரணமாக தீர ஆலோசித்து செயற்பட முடியாத நிலை ஏற்படும் போது நீதித் தீர்ப்புக்களில் பிரச்சினைகள் தோன்றலாம். எனவே இவற்றை தவிர்ப்பதற்காக இன்று பெரும்பாலான நாடுகள் நீதிபதிகளின் ஓய்வு பெறுவதற்கான வயதெல்லையை வரையறை செய்துள்ளது.

உதாரணமாக இலங்கையில் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லை யாப்பு ரீதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதியரசர்களின் பதவிக் காலம் 65 வயதாகவும், மேல் முறையீட்டு நீதிபதிகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிக்காலம் 63 வயதாகவும், மேல் நீதிமன்ற நீதிபதிகளின் பதவிக்காலம் 61 வயதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

06 நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் பெரும்பாலான நாடுகளில் நீதித்துறையை நிர்வகிப்பதற்காக நீதிச் சேவை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவை சுதந்திரமாக செயற் படுவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

உதாரணம் : இலங்கை

07. நீதிபதிகள் வழக்குகளை விசாரிக்கும் போதும், தீர்ப்புக்களை வழங்கியதன் பின்னரும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் பல நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ **நீதிப்புணராய்வு என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

சட்டமன்றமோ, நிர்வாகத்துறையோ இயற்றும் சட்டங்களையும், விதிகளை யும், அரசியலமைப்புக்கு முரணானவையா? அல்லவா ? என நீதிமன்றம் ஆரய்வதையே "**நீதிப்புணராய்வு**" என்கிறோம்.இதை நீதிமன்றம் நீதி "**மறுப்பாணை**" எனவும் சில வேளை குறிப்பிடுகின்றனர் .ஏனெனில் நீதிமன்றம் சட்டத்தை அரசியலமைப்புக்கு முரணானதெனத் தள்ளிவிடவும் முடியும். மேலும் சட்டமன்றங்களில் அரசியலமைப்பிற்கு முரணான சட்டத்தையோ, நிர்வாகத் துறையின் நடவடிக்கைகளையோ செல்லுபடி அற்றது என அறிவிக்கும் நீதிமன்றங்களின் அதிகாரமே நீதிப் புணராய்வு எனப்படும். பெர்த் (BERTH) என்பவர் கூறுகின்ற போது அரசியலமைப்பின் அடிப்படையில் அரசாங்கத்தின் மற்ற நிறுவனங்களின் செயல்களை பயனற்றதாக்கும் உயர் நீதிமன்றத்தின் அதிகாரம் நீதிப்புணராய்வு என்று கூறுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் நீதித்துறைக்கு பொறுப்பான உயர் நீதிமன்றத்திற்கு நீதிப் புணராய்வு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது இந்தியாவில் உயர் நிதிமன்றம் நீதிப்புணராய்வு அதிகாரத்தைப் பெற்றுள்ளது.. மத்திய பாராளுமன்றத்தின் சட்டங்களையும், மாநில சட்டங்களின் சட்டங்களையும் இவ்வதிகாரத்தின் மூலம் அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறி செல்லுபடியற்றதாக்கலாம்.

**நன்மைகள் :**

01. மாநிலங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.
02. அரசியலமைப்பின் மேலாண்மை பெரிதும் பேணப்படுகின்றது.
03. மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.
04. சட்டமன்றங்களின் அத்துமீறல்கள் தடுக்கப்படுகின்றன.
05. நிர்வாகத்துறையின் சர்வாதிகார ஆட்சிக்கு இது முற்றுப் புள்ளி வைக்கின்றது.

**குறைகள் :**

01. சட்டமன்றங்கள் வளர்ந்து வரும் சூல்நிலைகளுக்கேற்ப சட்டங்களை இயற்ற முடியாது.
02. பொருளாதார மாற்றத்திற்கேற்ப சட்டங்களை இயற்ற முடியாது.
03. நிர்வாகத்துறையினர் தங்கள் நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ள இயலாது.
04. நீதிபதிகள் சட்டத்தின் உயிர்ப்பை உணராது சட்டவாக்கத்தைக் கட்டிக் காக்கின்றனர். .
05. நீதிப்புணராய்வு, முன்னேற்ற பாதைக்குத் தடையாக அமைகிறது.
06. முன்னேற்றமான சட்டங்களுக்கு இது முட்டுக் கட்டையாக அமையும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


01. Prof. Jayapalan .N (2002), Comparative Governments

02. Alan.R.Ball, Politics and Government

03. Alomand.G.A (1972), Comparative Politics

04. ஜெயபாலன். நா (1997), தற்கால அரசாங்கங்கள்

05. ஜெயபாலன். நா (1989), அரசியல் கோட்பாடுகள், சென்னை.

06. சத்தியநாதன். என், தற்கால அரசாங்கங்கள், மதுரை.

07. பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா (2006), உயர்தர அரசியல் சிந்தனைகள்

08. மோ. வள்ளுவன் கிளாரன்சு (1985), தற்கால அரசியல் அமைப்புக்கள்

09. பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா (2006), அரசியல் மூலதத்துவங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு

10. பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா (2000), ஒப்பீட்டு அரசியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு

11. கோமதி நாயகம்.பி (1991), தற்கால அரசாங்கங்கள், மதுரை.

12. கோமதி நாயகம்.பி (1999), அரசியல் கோட்பாடுகள்.

13. வீ. அமீர்தீன் (2001), பொதுத்துறை நிர்வாகம் ஓர் அறிமுகம்

14. ஏ.சி.எம். பளீல் (2001), அரசியல் சமூக மூலக் கோட்பாடுகள்

15. ஏ.சி.எம். பளீல் (2004), அரசியல் எண்ணக் கருக்கள், கோட்பாடுகள், மனித உரிமைகள்.

16. Dr. T. ஜான் சஹாயம் செல்லையா (1992), பன்னாட்டு அரசியல், மதுரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




pbd
601140027
ARASIYAL VINGA.ARIMUG
Rs.280.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org